கடல் கடந்த காந்தி

ஆசிரியர் :

கனச்யாமதாஸ் பிர்லா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 FEB 1943
MADRAS

மொழிபெயர்ப்பாசிரியர் :

அ. சுப்பையா

247

லலிதா அண்டு கம்பெனி,
வினயகபுரம், :: தென்னூர்,
திருச்சிறைப்பள்ளி.

1·25

பதிப்புரிமை பெற்றது.

நூல
N42

923.254
பந்தா—க

Acc. No. 765
Dt 25.11.77

44039

விலை ரூ. 1-4-0

No. 765

M. I. P. PROJECT
Microfilmed.

ஹிந்தி பிரசார் பிரஸ்,
தியாகராயநகர்,
சென்னை.

M. I. P. PROJECT
Microfilmed.

முன்னுரை

"**பாபூ" அல்லது நானறிந்த காந்தி** என்ற ஸ்ரீகனச்யாமதாஸ் பிர்லாவின் முதல் ஹிந்தி நூலின் மொழிபெயர்ப்பை வெளியிட்டபொழுது அதை யடுத்து காந்தியடிகள் காங்கிரஸின் ஏகப்பிரதிநிதியாகவும், அவர் இந்திய கைத்தொழில், வியாபார சங்கத்தின் மூன்று பிரதிநிதிகளில் ஒருவராகவும் இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டிற்கு விஜயம் செய்தபொழுது இந்தியாவிலிருந்து கிளம்பியது முதல் மகாநாடு முடியும்வரையில் காந்தியடிகளுடன் இருந்து அவ்வப்பொழுது நடைபெற்றவைகளை தமது தனிச் சிறப்புள்ள நடையில் எழுதிவைத்த குறிப்புக்களின் தொகுதியான அவரது இரண்டாவது நூலையும் மொழிபெயர்த்து சீக்கிரத்தில் "ஏகப்பிரதிநிதி" என்ற பெயருடன் வெளியிடும் கருத்தையும் தெரிவித்திருந்தேன். யுத்தம் காரணமாக அது உடனே நிறைவேருவிடினும், அப்பொழுது புதிதாக வெளிவரவிருந்த "கல்கி" பத்திரிகையில் அதன் ஆசிரியரான எனது நண்பர் ஸ்ரீ ரா. கி. அதை தொடர்ச்சியாக தமது பத்திரிகையில் வெளியிட விரும்பியதால், "கடல் கடந்த காந்தி" என்ற கர்ணமதுரமான பெயருடன் அவ்வாறே வெளிவந்து முடிவுபெற்றது.

"பாபூ"வின் எல்லாப் பிரதிகளும் சில மாதங்களுக்குள் செலவழிந்ததிலிருந்து, தமிழ்நாடு ஆசிரிய

ரின் கருத்துக்களுக்கும், நடைக்கும் தரும் மதிப்பு வெளியாயிற்று. யுத்தத்தினால் நிலைமை நாளுக்கு நாள் சீர்கேடடைந்து வந்தாலும், நூல் முழுமையும் ஒருங்கே வாசிக்க விரும்பும் அன்பர்களை அதிக காலத்திற்குக் காத்திருக்கச்செய்தல் சரியல்லவென்று கருதி நூல் முழுமையும் தமிழ்த்தாயின் திருப்பதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

மூலநூலின் முகவுரையில் கண்டிருக்கிறபடி ஆசிரியர், வட்டமேஜை மகாநாட்டில் கலந்துகொண்டதே ஒரு தனிக் கதை. தொடர்ச்சியாக திட்டப்படி எழுதப்பட்டதாயில்லாமல், அவ்வப்பொழுது எழுதப்பட்ட குறிப்புக்களின் தொகுதியே இந்நூலாகையால் வாசகர்கள் இதில் மற்ற நூல்களில் இல்லாத சில விசேஷ அம்சங்களைக்காணலாம். இத்தகைய "தினக்குறிப்பு நூல்" தமிழில் இதுவே முதலில் வெளிவருகிறது. ஆகவே புதுமையைக் கருதியும் தமிழ் நாடு இதை வரவேற்கலாகும்.

இதை வெளியிடுவதில் பல வகையிலும் எனக்குதவிய நண்பர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்னை
2-10-42
(காந்தி ஜெயந்தி)

அ. சுப்பையா.

முகவுரை

(மூலநூலுக்கு ஸ்ரீ பாரஸ்நாத் ஸின்ஹா எழுதியது)

இந்திய வியாபார-கைத்தொழில் சங்க மென்பது இந்திய வியாபாரிகளின் முக்கியமான பிரதிநிதி ஸ்தாபனமாகும். 'இந்திய வியாபாரம்' என்றால் இந்தியர்களின் முதலைக் கொண்டு இந்தியர்களாலேயே நிர்வகிக்கப்படுவதாகும். இந்த மாபெரும் சங்கத்துடன் நாட்டில் பல்வேறு பகுதிகளிலுமுள்ள வியாபார ஸ்தாபனங்கள் இணைக்கப்பெற்றிருக்கின்றன. இந்நூலின் ஆசிரியர் ஸ்ரீ. கனச்யாமதாஸ் பிர்லா இச்சங்கத்தின் பிரதிநிதியாக இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டில் கலந்துகொண்டார்.

சங்கம் முதல் வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. ஏனெனில் காந்தியடிகள் பங்கெடுத்துக் கொள்ளாததும், அவரது ஆசியைப் பெறாததுமான எந்த மகாநாட்டிலும் தான் சேருவதில்லை என்று சங்கம் தீர்மானித்திருந்தது, காந்தி—இர்வின் ஒப்பந்தத்தின் பயனாக நாட்டின் நிலைமை மாறி, காந்தியடிகளும் லண்டன் செல்வாரென்று தோன்றவே சங்கமும் அதில் கலந்துகொள்ளத் தீர்மானித்தது.

மகாநாட்டிற்கு மூன்று பிரதிநிதிகளை அனுப்பும் உரிமை சங்கத்திற்கு கிடைத்தது. சங்கம் அதிக ஸ்தானங்களைக் கோரியபோதிலும் இர்வின் பிரபுவின் வார்த்தைக் கிணங்கி மூன்று ஸ்தானங்களுடன் திருப்தியடைந்து மூன்று பிரதிநிதிகளின் பெயர்களையும் ராஜப்ரதிநிதியிடம் சமர்ப்பித்தது. **14-4-31**ல் அவரிடமிருந்து ஒத்துக்கொண்டதாக பதிலும் வந்தது.

ஆனால் ஆகஸ்டு 4௳ மகாநாட்டின் பிரதிநிதிகளின் பெயர்கள் பிரசுரமானபொழுது, சங்கத்திற்கு மூன்று ஸ்தானங்கள் தரப்படாமல் ஒரே ஸ்தானம் தரப்பட்டும், அதற்கு சங்கம் தேர்ந்தெடுத்து அனுப்பியிருந்த மூன்று கனவான்களில் ஒருவரான ஸர் புருஷோத்தமதாஸ் தாகூர் தாஸின் பெயர் மட்டிலும் வெளியிடப்பட்டுமிருந்ததைப் பார்த்து எல்லோருக்கும் ஆச்சரிய முண்டாயிற்று.

சிம்லா மலையுச்சியில் ராஜப்ரதிநிதியின் திட்டத்தைக் கலக்கக் கூடியதோர் புயல் அடித்திருக்கிறதென்பது இதிலிருந்து வெளியாயிற்று. இந்தியா மந்திரியின் காரியாலயத்தாரின் தொந்தரவே இம்மாறுதலுக்குக் காரணமென்று லண்டனில் பிரஸ்தாபம். காரணம் எதுவாயினும், இத்தகைய நிலையில், சங்கம் மகாநாட்டில் கலந்துகொள்ள

மறுத்து விட்டது. அது செய்த தீர்மானத்தில், 'கலந்து கொண்டால் மூவரும் கலந்துகொள்வோம், இல்லையேல் ஒருவரும் கலந்துகொள்வதில்லை' என்று தெளிவாகக் கூறி விட்டதுடன் 'சங்கத்தின் பிரதிநிதிகள் சம்மதம் இல்லாமல், செய்யப்படும் எந்த ஒப்பந்தமும், இந்திய வியாபார சமூகத்திற்கு ஒப்பமுடிந்ததாகாது' என்றும் கண்டிருந்தது.

கடைசியில் சங்கத்திற்கே வெற்றி கிட்டிற்று. வேறு வழியின்றி சர்க்கார், தமது முடிவை மாற்றிக்கொண்டு ஒருவருக்கு பதிலாக மூவருக்கும் ஸ்தானங்கள் அளித்தது. 16-8-31ல் சங்கத் தலைவர் ஜனுப் ஜமால் முகம்மது ஸாஹிப்பிற்கு அவரையும், ஸ்ரீ கனச்யாமதாஸ் பிர்லாவையும் மகா நாட்டின் பிரதிநிதிகளாக நியமித்திருப்பதாக ராஜப் பிரதிநிதியின் அந்தரங்கக் காரியதரிசியிடமிருந்து கடிதம் கிடைத்தது. இவ்விதமாக, நூலாசிரியருக்கு சில தினங்கள் லண்டனில் வட்டமேஜை மகாநாட்டில் வளைய வருவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது. இது அவருடைய இரண்டாவது லண்டன் யாத்திரையாகும். இந்த யாத்திரையின் முக்கிய நோக்கம் லண்டன் வழியாக அமெரிக்காவுக்குச் செல்வதாகும்.

மகா நாட்டில் சர்க்காருடைய விருப்பம் பூர்த்தியாகி விட்டது. அங்கே ஆசிரியர் கண்ட பரிதாபக் காக்ஷியை விவரிக்கும் பொழுது, "காரியத்தைக் கெடுத்தவர்கள், சர்க்காரால் நியமனம்பெற்ற அங்கத்தினர்களே; மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களா யிருந்தால், இத்தகைய சந்தர்ப்பமே ஏற்பட்டிராது" என்று கசந்துகொண்டு கூறுகிறுர். சுயராஜ்யத் திட்டம் தயாரிப்பதற்கு ஜனப் பிரதிநிதி சபை அவசியம் என்று ஏன் வற்புறுத்தப் படுகிறது என்பதும், ஆசிரியரின் அனுபவத்தைக் கேட்கும் பொழுது தெளிவாகி விடுகிறது.

மகா நாட்டின் பொதுக் கூட்டத்தில் ஆசிரியர் செய்த சொற்பொழிவு, உள்ளதை உள்ளவாறு கூறுவதற்குச் சிறந்த உதாரணமாகும். மகா நாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்ட பொருளாதார நிர்ப்பந்தங்கள் இந்தியர்களுக்கு ஏன் சகிக்கக்கூடாதவை என்பதைத் தெளிவாக்கினுர். வருமானத்தில் 100-ல் 80 பகுதி, சேனைக்கும், கடனின் வட்டிக்குமாக ஒதுக்கப்பட்டு, வருங்காலத்தில் இந்தியப் பொருளாதார மந்திரிக்கு அதைச் சிறிதும் மாற்றுவதற்கு அதிகாரம் மறுக்கப்பட்டிருந்ததால் இப்பெரும் பகுதி முழுவதும், மேற்கூறிய செலவுகளுக்காக "பந்தகம்" வைக்கப்பட்டதுபோலாகு மென்பதையும்; இந்தியாவுக்கும் இங்கிலாந்திற்கு மிடையில் செய்யப்படும் எந்த ஒப்பந்தத்திலும், முதன்முத

வில் இச்செலவின் சுமையைக் குறைக்கும் விஷயமாக ஓர் முடிவு ஏற்படவேண்டுமென்றும் மிகவும் வற்புறுத்தினர். சொற்பொழிவின் முடிவில் அவர் கூறியதாவது:—எந்த சர்க்காரும் ஆளப்படுவோரின் சம்மதமின்றி, ஒரு தேசத்தை ஆளமுடியாது. சாந்தியையும், சமாதானத்தையும் நிலைக்கச் செய்ய வேண்டுமானல், எங்கள் இஷ்டப்படி எங்களை ஆளுங்கள்; அல்லது நாங்களே எங்களை ஆண்டுகொள்ள விடுங்கள்; அப்பொழுது நாங்கள் உங்களுடைய நண்பர்களாகவும், பங்காளிகளாகவும் இருக்கமுடியும். நீங்கள் தற்சமயம் எங்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளாவிடில், இது உங்களுடைய மாபெருந் தவருகும். அன்று என்னிடம் ஒரு ஆங்கில நண்பர், '1930 ஆம் வருஷத்திய வட்டமேஜை மகா நாட்டிற்கு நீங்கள் வராமல் பெரிய தவறு செய்துவிட்டீர்கள். அச்சமயத்திலிருந்த தொழில் கட்சி சர்க்காரின் ஆதரவினல் மிகுந்த பயன் பெற்றிருக்கலாம்' என்று கூறினர். இதில் எவ்வளவு உண்மை உண்டு என்று எனக்குத் தெரியாது. ஆனல் தற்காலத்திய சர்க்கார் இந்த சந்தர்ப்பத்தை நழுவவிட்டு இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்றும் செய்துகொள்ளா திருந்தால், இது அவர்கள் செய்யும் பெருந் தவருகும். எனக்கு எனது நாட்டின் வாலிபர்களை நன்ருகத் தெரியும். சில வருஷங்களுக்குப் பிறகு இந்தியாவில் காந்தியடிகளோ, இந்தியச் சிற்றரசர்களோ என்னைப்போன்ற முதலாளிகளோ, ஒப்பந்தத்திற்கில்லாமல், புதிய எண்ணங்களும், புதிய ஆசைகளும் கொண்ட முற்றிலும் புதிய மனிதர்களுடன் ஒத்துப்போக நேரும். ஆகையால் இங்கிலாந்து இப்பொழுதே எச்சரிக்கையாக இருத்தல் நலம்."

லண்டனிலிருந்து திரும்பிய பின்னர் பிரிட்டிஷ் உரிமைகளைக் காப்பதில் கண்ணுள்ள பெந்தல், ஆங்கில வியாபாரிகளின் ஒரு சபையில், இந்திய வியாபார சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு, வருத்தமும், ஆச்சரியமும் உண்டாகும்படி பேசினர். இந்த சொற்பொழிவின் விவரம் பத்திரிகைகளில் பிரசுரமான பொழுது அதை மறுத்து ஒரு வார்த்தையும் பெந்தல் வெளியிடவில்லை. இதில் காந்தியடிகளின் பேரில் சிறிதும் ஆதாரமற்ற சில குற்றச்சாட்டுகள் இருந்தன. ஆனல் ஒரு விஷயம் மட்டும் வெட்ட வெளிச்சமாயிற்று. அதாவது லண்டனில் காந்தியடிகளுடனும், மற்றவர்களுடனும் அவர் நடத்திய பேச்சுக்கள் ராஜதந்திரப் பேச்சுக்களேயன்றி, அப்பொழுது அடிக்கடி கூறப்பட்டதுபோல உண்மையானவையல்ல என்பது பெந்தலைப்பற்றி நூலில் உள்ள பகுதிகளை கவனித்துப் பார்த்தால் தெரியும்.

சங்கத்தின் பிரதிநிதிகள் தமது கமிட்டியிடம் சமர்ப்பித்த அறிக்கையில், காந்தியடிகளைப்பற்றி கீழ்க்கண்ட கருத்துக்கள் காணப்படுகின்றன :—

“மகாநாடு வெற்றி யடையாததற்கு காந்தியடிகளை காரணமாக கூறப்படுகிறது. இதைவிடப் பெரிய ஆதார மற்ற பொய் வேறு இருக்கமுடியாது. லண்டனில் அவருடன் சேர்ந்து வேலை செய்வதற்கும், அவருடைய கருத்துக்களை அறிவதற்கும் எங்களுக்கு வேண்டிய சந்தர்ப்பங்கள் கிடைத்தன. காந்தியடிகள் சரியான முறையில் ஒப்பந்தம் செய்து கொள்ள எப்பொழுதும் சித்தமாயிருந்தார் என்று நாங்கள் உண்மையாக சொல்லக்கூடும். அவர் தமது கோரிக்கைகளை அவசியமானல் குறைத்துக்கொள்ளவும் சம்மதித்தார்; ஒப்பந்தத்திற்கு தம்மாலானதை யெல்லாம் செய்து பார்த்தார். அவர் செய்த ஒரு சொற்பொழிவில் சமாதானம்தான் தமது நோக்கம் என்பதை ‘நெஞ்சையள்ளும்’ கீழ்க்கண்ட சொற்களில் விலக்கினர். “டில்லியில் தற்காலிகமாக செய்யப்பட்ட ஒப்பந்தம் சாசுவதமாவதைக் காணவேண்டுமென்பது என் ஆசை. ஆகையால் கடவுளுக்கு பயந்து இந்த 62 வயதுக் கிழவனுக்கு ஒரு சந்தர்ப்பம் அளியுங்கள். எனக்கும், நான் எந்த காங்கிரஸின் பிரதிநிதியோ அந்த ஸ்தாபனத்திற்கும், உங்கள் மனதில் ஒரு சிறிதளவாவது இடம் கொடுங்கள்.” ஆனல் இவையெல்லாம் மகாநாட்டில் விழலுக்கிரைத்த நீராயிற்று. பெந்தல் கூறியபடி காந்தியடிகள் வெருங்கையுடன் திரும்ப நேர்ந்தது.

காந்தியடிகளின் சம்பந்தத்தினுல் உலகம் முழுவதும் பிரசித்தியடைந்ததும், இந்தியா முழுமையும் ஆதரவுடன் கவனிக்கப் பட்டதுமான மகாநாட்டைப் பற்றியது இந்த நூலில் காணப்படும் குறிப்புக்கள். இதன் ஆசிரியர் இதில் காணப்படும் சம்பவங்களை அருகிலிருந்து பார்த்தவர்; அவைகளைப் பற்றிய உள் வயணங்களை இவரைப்போல் அறிவதற்கு வேறு எவருக்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்க முடியாது. இதற்கு ஆதாரமான சரித்திரப் பகுதியை நிர்மாணிப்பதில் இவருக்கும் பங்குண்டு. இக் காரணங்களால் இந்நூலின் ‘ருசி’த்தன்மை புலனுகும்.

இக் குறிப்புக்கள், சரித்திர ஆராய்ச்சி செய்வோருக்கு மட்டுமின்றி, தற்கால அரசியல் ஆராய்ச்சியி லீடுபட்டிருப்போருக்கும் உதவும் என்ற நம்பிக்கையுடன் இந்நூல் வெளியிடப்படுகிறது.

பொருளடக்கம்

	பக்கம்
பம்பாய்த் துறைமுகம்	1
கீழ் வகுப்புப் பிரயாணி	5
பண்டித்ஜி பட்டினி !	10
பாய் மரப் பறவை	13
அராபிய தீர்த்தம்	15
விசித்திர மனிதர்	19
அன்ஸாரி வரட்டும்	23
கப்பலோட்டும் காந்தி	26
சூயஸ் கால்வாய்	28
மனம் சுத்தமில்லை	32
நிருபர் சரடுகள்	35
மக்களின் வரவேற்பு	38
நாடிப் பரீக்ஷை	42
ஏகப் பிரதிநிதி	43
போலீஸின் கவலை	57
இந்தியாவின் கோரிக்கை	59
திரையுள் நாடகம்	63
பழைய பல்லவிதான்	71
நாடக ஒத்திகை	74
மல் யுத்தம்	82
பாதிக் கல்யாணம்	86
தவத்தின் மகிமை	88

	பக்கம்
விஷம் கக்குதல்	91
பானுமதியின் பெட்டி	94
தங்கக் கம்பி ஹோர்	99
நல்ல மனிதர்	102
சுலப மார்க்கம்	106
தேர்தல் புயல்	107
நாணய மாற்று விவாதம்	111
மதில் மேல் பூனை	113
கண்ணுள்ள குருடர்கள்	115
ஆண்டியும் அரசனும்	120
தலைக்குத் தலை ராஜா	123
சுலப வெற்றி—எதிரிக்கு !	129
காந்தியடிகளின் உறுதி	133
பழைய போக்குத்தான்	138
அக்கரை பச்சை	142
நயத்திலும் பயத்திலும்	144
நாடகம் முடிந்தது	149



கப்பலில் காந்திஜி

கடல் கடந்த காந்தி

[1]

பம்பாய்த் துறைமுகம்

ராஜபுதானா
29-8-31

பம்பாயில் இன்று காலை முதல் ஒரே அமளிதான். காந்தியடிகள் கொஞ்சகாலம் இந்தியாவிலிருக்க மாட்டாரே என்னும் அகக் கனிவு ஒவ்வொருவருடைய முகத் தோற்றத்திலும் வெளியாகிக்கொண்டிருந்தது. ஆனால் என்னுடைய பாக்கிய வசமாக, காந்தியடிகளும் மாளவியாஜியும் போகும் கப்பலிலேயே நானும் போகும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

எனக்கு நான் கப்பலில் இடம் தயார் செய்து கொண்டபொழுது, காந்தியடிகள் வட்ட மேஜை மகா நாட்டிற்குப் போவதில்லையென்று நிச்சயமாகி யிருந் தது; ஆனால் கடவுளின் சித்தம் வேறுவிதம் இருந்தது போலும்! விதி வகுக்கும் வழியை யாரால் மாற்ற முடியும்?

பங்களாவினின்று கிளம்பித் துறைமுகத்தை அடைந்ததும் போட்டோ பிடிக்கும் பித்தர்கள் டஜன் கணக்கில் வந்து, என்னைச் சூழ்ந்துகொண்டனர். எவ்வளவு 'பிளேட்டு'க்களைப் பாழாக்கினார்களோ தெரியாது. இருபத்தைந்துக்குக் குறைவில்லை. நமது பணம் இப்படித்தான் வெளி நாடுகளுக்குப் போகிறது! மேலும், என் படத்திற்கு இப்போது என்ன கிராக்கி வந்தது?

நான் கப்பலில் ஏறிய சிறிது நேரத்திற்குள், வானை அளாவும்படியாக "காந்திக்கு ஜே!" என்ற கோஷம் எழுந்தது. சரிதான், காந்தியடிகள் வந்து கொண்டிருக்கிறார் என்று எல்லோரும் தெரிந்து கொண்டார்கள். கப்பலில் எங்கும் ஒரே தடபுடல். இந்தியர்கள், ஆங்கிலேயர்கள், ஸ்திரீ புருஷர்களெல்லாரும் ஓடோடியும் வந்து மகாத்மாவின் வருகையைப் பார்ப்பதற்குத் தகுந்த இடம் தேடிப் பிடிக்கத் தொடங்கினார்கள். துறைமுகத்திலிருந்து அரைமைல் வரையிலிருந்த வீடுகளின் மாடிகளிலெல்லாம் இடமில்லாமல் ஜனங்கள் நெருங்கி நின்றனர். நாலா புறத்திலிருந்தும் ஜயகோஷம் கிளம்பிற்று. காந்திஜி கப்பலில் ஏறுவதற்குள் மிகவும் கஷ்டமாகிவிட்டது. ஆங்கில மாலுமிகள் அவரைச் சுற்றிக் கைகோத்து நின்று, மேலே பத்திரமான இடத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

அங்கு நின்றபடியே காந்தியடிகள் கரையில் கூடியிருந்த மக்களுக்கு தரிசனம் அளித்துக்கொண்

டிருந்தார். அந்தக் கண் கொள்ளாக் காட்சியை என்னவென்பது !

இதற்கு முன்பே வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்றிருந்தார்களே, அவர்கள் பொது மக்களின் பிரதிநிதிகளா, அல்லது எலும்பும் தோலுமாயிருக்கும் இந்த துர்ப்பல காந்தி பொது ஜனங்களின் பிரதிநிதியா என்ற கேள்விக்கு அங்கே கூடியிருந்த மக்களின் உணர்ச்சிப் பெருக்கே சாட்சி சொல்லிக்கொண்டிருந்தது. இதற்குள் சிறிது மழைத் தூற்றல் போடத் தொடங்கிற்று. இந்திரனும் காந்திஜியின் பிரிவாற்ருமையினுல் கண்ணீர் சொரிந்தான் போலும்! ஆனுல் ஜனங்கள் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. கப்பல் புறப்படுவதற்காக முதல் மணி அடித்தது. இரண்டாவது மணியும் அடித்தது. மூன்ருவது மணியடித்த பிறகே ஜனங்களுக்குக் கப்பலை விட்டிறங்க வேண்டுமென்ற நினைவு வந்தது. அவர்கள் கரையில் இறங்கினுலும், அவர்களது கண்கள் காந்தியடிகளிடமே இருந்தன.

வல்லபாயின் வதனத்தில் வருத்தம் தெரிந்தது. ஜவாஹர்லாலின் முகத்திலோ புன்முறுவல் பூத்திருந்தது. பண்டித மாளவியாஜி இன்னும் வந்து சேர்ந்தபாடில்லை. "மாளவியாஜி இன்னும் வரவில்லையா?" என்று எல்லோரும் கேட்க ஆரம்பித்தனர். கடைசியில் அவரும் சமயத்தில் வந்து சேர்ந்தார். நங்கூரம் வலிக்கப்பட்டு, கப்பல் மெள்ள நகரத் தொடங்கவும், எங்கள் பிரயாணம் ஆரம்பமாகிவிட்டது என்று தெரிந்தது. ராமேச்வரும், விரஜமோஹனும் * அங்கவஸ்திரத்தை வீசி வீசி சமிக்ஞை செய்துகொண்டிருந்தார்கள். ஆனுல் நானே சிந்தனைக் கடலில் மூழ்கி எழுந்த வண்ணம் இருந்தேன். "வற்றி உலர்ந்த இந்தச்

---

* ராமேச்வரும், விரஜமோஹனும் இந்நூலாசிரியரின் சகோதரர்கள்.

சின்ன மனிதர்தான் மக்களை எவ்வாறு மயக்கியிருக்கிருர்!" என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தேன்.

கப்பல் சிறிது நகர்ந்ததும், கரையிலுள்ளவர்களைப் பிரிந்து போய்க்கொண்டிருக்கிருேமென்பது நினைவிற்கு வந்தது. கப்பலுக்கும் கரைக்கு மிடையே உள்ள தூரம் அதிகரிக்க அதிகரிக்க, என் மனம் கரையை நோக்கி ஓட ஆரம்பித்தது. கரையிலுள்ளவர்களும் இதே நிலையில் இருந்தனரோ என்னவோ? கடைசியில் கரையிலுள்ளவர்களைத் தெளிவாகத் தெரிந்துகொள்வதும் கஷ்டமாகிவிட்டது; கண்ணின் சக்தி போதவில்லை. அதற்குப் பிறகும் காதினுல் ஜயகோஷத்தைப் பருகிக்கொண்டிருந்தோம். கடைசியில் அதுவும் நின்றுவிடவே சமுத்திரத்தின் ஓங்கார த்வனியே எஞ்சியிருந்தது. பாரத பூமியின் அறிகுறி எல்லாமே மறைந்துவிட்டது. எங்கே பார்த்தாலும் ஒரே நீர்ப்பரப்பு; அதனிடையில் "ராஜபுதனம்" என்ற இந்தச் சிறிய உலகம்! ஆனுல் இந்தச் சின்ன உலகத்திலேதான் இந்திய நாட்டின் முடிசூடா மன்னர் இருக்கிருர். அவருடைய இந்த யாத்திரையோ சரித்திரப் பிரசித்தி பெறப்போகிறது. அத்தகைய மகா யாத்திரையின் காட்சி உள்ளத்தை உருக்குவதில் வியப்பென்ன இருக்கிறது?

[2]

கீழ் வகுப்புப் பிரயாணி

ராஜபுதானு
30-8-31

கப்பலில் சம்பிரதாயங்க ளெல்லாம் தகர்ந்து விட்டன. 1927-ல் நான் கப்பல் பிரயாணம் செய்த பொழுது விசித்திர வேஷம் தரிக்கவேண்டியிருந்தது. இரவு உடை வேறு; பகல் உடை வேறு; மொத்தத்தில் வெகு தொந்தரவு. உடுப்பு மாற்றிக் கொள்வதிலேயே மணிக்கணக்காய்ப் போய்விடும். வேஷ்டியும், 'குடுத்தா'வும் அணிதல் ஏதோ பெரிய பாவச் செயலாகக் கருதப்பட்டது. இப்பொழுதோ கப்பலில் வேஷ்டியும் குடுத்தாவும் அணிந்தவர்கள் தங்கு தடையில்லாமல் திரிந்து கொண்டிருக்கிறுர்கள். கேட்பார் யாருமில்லை, சங்கோசப் படுகிறவர்களும் இல்லை. நான் மட்டும் வேஷ்டியும் சொக்காயும் எடுத்துக் கொள்ளாமல் வந்து விட்டது தவறு என்று இப்

போது தெரிகிறது. பிரயாணிகளும் சரி, காப்டனும் சரி, வேஷ்டி சொக்காயைக் கண்டு முன்போல் வெறித்துப் பார்ப்பதில்லை. ஒரு வேளை மனதிற்குள் அவர்களுக்குப் பிடிக்காமலிருக்கலாம். ஆனால் "காந்தியின் சௌகரியத்தைக் கவனித்துக் கொள்ளவும்" என்று சிம்லாவிலிருந்து கட்டளை பிறந்திருப்பதால் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பண்டித மாளவியாஜிக்காக அடுப்பு தனியாகத் தயாராகிவிட்டது. கங்கா தீர்த்தமும் உடன் வந்திருக்கிறது. ஒரு தகரம் நிறைய மண், சுதேசி சோப்பு, பல் குச்சியின் ஒரு பெரிய கட்டு ஆகியவையும் வந்திருக்கின்றன. காந்தியடிகளின் சர்க்காவும், பஞ்சடிக்கும் வில்லும், மற்றும் பல விசித்திரமான வஸ்துக்களும் உடன் யாத்திரை புரிகின்றன. கப்பலிலுள்ளவர்கள் இது நல்ல 'சிவகணம்' யாத்திரைக்கு வந்தது என்று வியக்கிறார்கள். போகிற போக்கில் கடைக் கண்ணால் கடாக்ஷித்துச் செல்கிறார்கள். வெளியில் காட்டுவதென்னவோ ரொம்ப ரொம்ப மரியாதை தான் !

கப்பல் கிளம்பியதும், காந்தியடிகள் தம் சாமான்களைக் கவனிக்கத் தொடங்கினார். "இந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது? அதில் என்ன இருக்கிறது?" என்ற கேள்விகள் பிறந்தன. மீரா பென், பாவம், புயல் தொடங்கி விட்டதென்று கண்டு கலங்கினார். மகாதேவும், தேவதாஸும், காந்தியடிகளுடன்தான் பம்பாய்க்கு வந்தனர். ஆகவே, பிராயண ஏற்பாட்டின் முழுப் பொறுப்பும் மீரா பென்னுடையதாயிற்று. காந்தியடிகள் கணக்குக் கேட்கத் தொடங்கவும், இது நல்லதுக்கில்லையென்று மீரா பென் கண்டு கொண்டார். முதன் முதலில், "இந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது?" என்றார் காந்தியடிகள்.



ஸ்ரீ மஹாதேவ தேசாய், ஸ்ரீ கனச்யாமதாஸ் பிர்லா,
ஸ்ரீ தேவதாஸ் காந்தி



ஸ்ரீ பிர்லாஜியும், காந்திஜியும்

"பாபு, தங்களுடைய உடைகள்" என்றார் மீரா.

"என் துணிகளுக்கு இவ்வளவு பெரிய பெட்டியா?"

"இது நிறையத் துணிகள் இல்லை."

"ஓஹோ! இதை நிரப்பிவிடலாமென்றே பார்த்தீர்களோ? இந்தியாவில் என்னுடைய துணிகள் பெட்டி யில்லாமல் தானே வருகின்றன? இங்கே மாத்திரம் எதற்காகப் பெட்டி?"

மீரா பென் பெட்டியைத் திறந்து சாமான்களை எடுத்து முன்னால் வைக்கவே, காந்தியடிகளின் முகம் சிவந்து விட்டது. சாமான்கள் ஒன்றும் அதிகமாக இல்லை; ஆனால் ஒரு பைசாவானாலும் அவசிய மில்லாமல் செலவு செய்வது காந்தியடிகளுக்குச் சகிப்பதில்லை. பெட்டிகளெல்லாம் இரவலாக வந்தவை தான்; ஆனாலும் இதில் அவருக்குக் கொஞ்சமும் சமாதானமில்லை. ஒருமணி நேரம் வரையில் அவர் தமது கோஷ்டியினரைக் கண்டித்துக் கொண்டிருந்தார். முடிவில், சில பொருள்களை மட்டும் நிறுத்திக் கொண்டு, மற்றவைகளை ஏடனிலிருந்து திருப்பி அனுப்பி விடுவதென்று தீர்மானமாயிற்று. காந்தியடிகள், "இந்த சாமான்களைக் கண்டு எனக்கு திகிலாகிவிட்டது. நான் என்னுடைய பழைய பழக்கங்களையே விட்டு விட்டதாக எண்ணி, இவர்கள் காகிதம் வைப்பதற்குக் கூடப் பெட்டியல்லவா கொண்டு வந்திருக்கிறார்கள்!" என்றார்.

ஐந்து மணி அடித்ததும், தாம் உட்காரும் இடத்தைத் தீர்மானிப்பதற்காக காந்தியடிகள் மேல் தளத்திற்கு வந்தார். நான், "கப்பலின் ஓரத்தில் ஆட்டம் ரொம்ப அதிகம்; அங்கே உட்காருவது சிரமம்; ஒரு நிமிஷம் அங்கே நிற்கக் கூட என்னால் முடியவில்லை; ஆகையால் அதைப் பார்க்கவேண்டிய

தில்லை. கப்பலின் மத்திய பாகத்துக்குப் போகலாம்" என்றேன். காந்தியடிகள் "அந்த இடத்தையுந்தான் பார்ப்போமே?" என்று சொல்லி, நான் எவ்வளவு தடுத்தும் கேளாமல், கப்பல் ஓரத்தில் ஒரு ஆபத்தான இடத்தைக் கடைசியில் தேடிப் பிடித்தார். நான் திகைத்து வாய் பேசாதிருந்தேன். வேறு யாராவது இத்தகைய உபயோக மில்லாத உபத்திரவமான இடத்தை வேண்டு மென்று தேடிப் பிடிப்பார்களா? ஆனால், "மற்ற ஜீவன்களெல்லாம் விழித்திருக்கும் பகற் பொழுதை முனிவர்கள் இரவென்று கருதுகிறார் கள்" என்பது கீதை வாக்கியம்.

यस्यां जाग्रति भूतानि सा निशा पश्यतो मुनेः ।

"நல்ல இடத்தில் நாம் போய் உட்காருவதால் மற்றவர்களுக்குக் கஷ்ட மேற்படலாம்; அம்மாதிரி நல்ல இடத்தில் தனிமையா யிருப்பதும் சாத்திய மில்லை. ஆகையால் கஷ்டமுள்ள இடமே நமக்கு நல்லது" என்பது காந்தியடிகளின் எண்ணம். அவருடைய கருத்தை மாற்றுவதற்காகக் கப்பலின் காப்டனிடம் ஓடினேன்; இன்னும் எவ்வளவோ முயற்சி செய்தேன். எல்லாம் நிஷ்பிரயோஜன மாயிற்று. ஆற்றங்கரைப் பிள்ளையாரைப் போல் உட் கார்ந்தவர் உட்கார்ந்தவர்தான். கடைசியில், மாளவியாஜி தமது செல்வாக்கைப் பிரயோகித்துப்பார்த் தார். டிக்கட்டை முதல் வகுப்பிற்கு மாற்றும்படி மன்றாடினார். மாலையில் உலாவிக் கொண்டிருக்கும் பொழுது நானும் கொஞ்சம் சொன்னேன்.

காந்தியடிகள், "நீ ஏன் நிர்ப்பந்தம் செய்கிறாய்?" என்றார்.

நான், "நீங்கள் வாங்கி இருப்பதோ இரண்டா வது வகுப்பு டிக்கட்டு; ஆனால் தங்களுடைய பெய ருக்காக முதல் வகுப்பின் எல்லா வசதிகளும் கிடைத்து விடுகின்றன. முதல் வகுப்புத் தளத்தில்

'கித்தான்' விரித்துத் தங்களுக்காகப் பிரார்த்தனைக்கு இடம் செய்யப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் நடக்கும்போது தாங்கள் முதல் வகுப்பின் கட்டணத்தைச் செலுத்தி விடுவதே உசிதமல்லவா?" என்று கேட்டேன்.

காந்தியடிகள், "உன்னுடைய வாதம் என்னவோ சரிதான்; ஆனால் அதிலிருந்து முதல் வகுப்பின் உரிமைகளையெல்லாம் நான் விட்டுவிட வேண்டுமென்றுதான் ஏற்படுகிறது" என்றார். அது முதல் காந்தியடிகள் முதல் வகுப்பு தளத்தில் உலாவுவதையே நிறுத்திக் கொண்டார். பிரார்த்தனைக்கு விரித்திருந்த கித்தானும் ஒரு நாளைக்கே பயன்பட்டது. இன்றைய பிரார்த்தனையை அவருடைய சங்கடமான இடத்திலேயே நடத்தினார். பிரார்த்தனை சமயத்தில் காந்தியடிகள் தியானத்திலாழ்ந்திருக்கையில், நான் "கடவுளே! இந்தப் பிரார்த்தனை எப்பொழுது முடியும்? எப்பொழுது இங்கிருந்து போவேன்?" என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன். அங்கே இரண்டு நிமிஷம் உட்கார்ந்தால் போதும், தலை சுழலத்தொடங்கும். வாந்தி வராதிருந்தால் பெரிய காரியம். "சூரிய சந்திரர்கள் சஞ்சரிக்காத இடத்தில் கடவுள் வாசம் செய்கிறார்" என்று கூறுவதுண்டு. இது எங்கள் கப்பலின் விஷயத்தில் ஓரளவு உண்மையென்று கூறலாம்.

சாதாரண மனிதர்கள் சுய உணர்வுடன் எங்கே இருக்க முடியாதோ, அங்கே காந்தியடிகள் எழுந்தருளியிருக்கிறார். தரிசிக்க யாராவது சென்றால் ஒரு நிமிஷத்திற்கு மேல் அவரருகில் நிற்க விரும்புவதில்லை. பம்பாயிலிருந்து கிளம்பியதுமே கடலில் கொந்தளிப்பு உண்டாகி விட்டது. ஆகவே, காந்தியடிகள் இருந்த இடம் தொட்டில் ராட்டினத்தைப் போல் ஆடிக் கொண்டிருந்தது.

---

[3]

பண்டித்ஜி பட்டினி !

ராஜபுதான
31—8—1931

பண்டித்ஜியின் கதையைக் கேளுங்கள் ! இன்று மூன்று நாட்களாகின்றன; நித்திய ஏகாதசிதான்! பண்டித்ஜியினுடைய சமையற்காரனுக்கு உடம்புசரியில்லை. போதாததற்கு ரொட்டி மாவு முதலிய சாமான்களிருந்த பெட்டியையும் எங்கும் காணவில்லை. பண்டித்ஜியிடம் "சுவாமி! கப்பல்காரர்களிட மிருந்து மாவும், அரிசியும் வாங்கிக் கொண்டால் பாதகமொன்று மில்லையே" என்று லக்ஷம் தடவை சொல்லியாகி விட்டது. அவரோ, "பசித்தால் பார்த்துக் கொள்வோம். இப்பொழுது பசியில்லை. உடம்பும் பளுவில்லாமல் சௌகரியமாயிருக்கிறது" என்கிறார். முந்தாநாளும் நேற்றும் சிறிது பால் அருந்தினார். அவருடைய சாமான் பெட்டிக்காகக் கப்பல் முழுதும் சலித்தாய் விட்டது. மறைந்த மாயம் புரியவே யில்லை !

பண்டித்ஜி தாம் சாப்பிடாமல், தம் சமையற்காரனை மட்டும் "வைத்தியநாத், கொஞ்சம் சாப்பிடு!" என்று வற்புறுத்துகிறார். வைத்தியநாத் எதைச் சாப்பிடுவது? பெட்டியோ பிரும்மலோக யாத்திரை போய்விட்டது! கப்பலின் பண்டசாலையிலிருந்து சாமான்கள் பெறுவதற்குப் பண்டித்ஜி நேற்று வரை சம்மதிக்கவில்லை. இன்று அவரை ஒத்துக்கொள்ளச் செய்து விட்டேன். கப்பலின் சாமான்களைக் கொண்டு சமையல் நடைபெறும். பண்டித்ஜி சிறிது உடல் சோர்ந்திருக்கிறார்; ஆனால் உற்சாகத்தில் குறைவில்லை. சமுத்திரத்தின் கொந்தளிப்பினால் இரண்டு தினங்களாகச் சிறிது கஷ்டம். சமுத்திரம் இன்று கொஞ்சம் சாந்தமடைந்து வருகிறது. மாலையில் சாப்பாடும் தயாராகிவிடும்.

பண்டித்ஜிக்கு மிகுந்த கஷ்டம். அவரைப் போன்ற மனிதர்களுக்கு இத்தகைய யாத்திரையில் மிகுந்த சிரமம்தான். ஆனால் அவர் நாட்டிற்காக எல்லாக் கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு வருகிறார். உண்மையைக் கேட்பீர்களானால், பண்டித்ஜியின் அபிப்பிராயத்தில் இந்தக் கப்பல் ஒரு நரகம்; இங்கிலாந்தோ "ரௌரவம்" என்ற பெரிய நரகம். இன்று, அவர் "எனக்கு நீ ஒதுக்கி வைத்த 'கேபின்' என்னவோ நல்ல அறைதான்; ஆனால் அது ஒரு சிறைக் கொட்டடி!" என்றார். நாட்டுப் பணியாக இல்லாமலிருந்தால், பண்டித்ஜி இந்த யாத்திரையை சொப்பனத்திலும் விரும்பி யிருக்கமாட்டார். பண்டித்ஜியின் மனத்திலுள்ள அன்பிற்கும், நம்பிக்கைக்கும் ஓரளவில்லை. பெட்டி தொலைந்தே போயிற்று; கப்பல் முழுதும் சலித்துப் பார்த்தாய் விட்டது; ஆயினும் "பெட்டி நிச்சயம் கிடைக்கும்; எங்கே போய்விடும்?" என்று இப்பொழுதும் கேட்கிறார்.

இதற்கு நான் என்ன பதில் சொல்வது?

கோவிந்தஜி* நேற்றும் இன்றும் 'பேடா' வையே தின்று தீர்த்தார். கிளம்பும்போது ராமேச்வர் "பேடா இன்னும் அதிமாகக் கொண்டுபோ" என்று சொன்ஞர். நான் கேட்க வில்லை. இத்தகைய நிலைமை ஏற்படுமென்று எனக்கு அப்பொழுது எவ்வாறு தெரியும்?

---

* பண்டித மாளவியாஜியின் குமாரர்.

[4]

பாய் மரப் பறவை

ராஜபுதானு
1—9—31

இன்று (புதன்கிழமை) கடல் அடங்கியிருக்கிறது. ஸுரஜியா இன்றும் அசௌக்கியமாகவே இருக்கிருன். பாரஸ்நாத்ஜிக்கு இன்று கொஞ்சம் தெளிவு ஏற்பட்டிருக்கிறது. நான் ஒரு வேளை உணவை நிறுத்தினேன். காந்தியடிகள் ஆனந்தமாயிருக்கிருர். பண்டித்ஜிக்குச் சமையல் நடந்து கொண்டிருக்கிறது—கப்பலிலிருந்து வாங்கிய சாமான்களைக் கொண்டுதான். கோவிந்தஜிக்கு 'பேடா' சாப்பிட்டதால் சிறிது தொந்தரவு உண்டாகி யிருக்கிறது. காந்தியடிகளின் பிரார்த்தனை தினந்தோறும் காலையிலும் மாலையிலும் நடைபெறுகின்றது. இந்தியர்கள் பிரார்த்தனைக்கு வருகிருர்கள். ஆங்கிலேயர்களோ தூரத்தில் தலை மறைவாயிருந்து பார்த்துக் கொண்டிருக்கிருர்கள்.

இன்றிரவு ஏடன் சேர்ந்து விடுவோம். பண்டிதஜி, "கப்பல் ஒரு சிறைச்சாலைதான்; என்ன விந்தைபார்! நாம் காசையும் கொடுத்துச் சிறை வாசமும் செய்கிறோம்!" என்கிறார். நேற்று கலக்க மடைந்தவராய்,

*सीतापति रघुनाथजी तुम लगी मेरी दौर ;
जैसे काग जहाज को सूझत और न ठौर ।

என்று பாடத் தொடங்கினார். இங்கு வேறு புகலிடமேது?

---

* "எங்கும் போய்க் கரை காணா(து) எறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே"

என்னும் ஆழ்வார் பாட்டின் கருத்துத்தான் மேற் கண்ட ஹிந்திப் பாட்டின் பொருளும்.

Acc. No. 265
Dt 25.11.77.



காந்திஜியுடன் ஸ்ரீமதி சரோஜினி தேவியும், பூஜ்ய மாளவியாஜியும் வார்த்தையாடிக் கொண்டிருக்கிறார்கள்

காந்திஜி, ஸ்ரீ. கனச்யாமதாஸ் பிர்லா, ஸர் பிர்பாசங்கர் பட்டாணி

[5]

அராபிய தீர்த்தம்

ராஜபுதானு
3—9—31

ஏடனை விட்டு இப்பொழுதுதான் கிளம்பினேம். ஏடனில் காந்தியடிகளுக்கு அமோகமான உபசாரங்கள் நடைபெற்றன.

வரவேற்புப் பத்திரங்கள் அளிக்கப்பட்டன. காந்திஜி பதிலளித்தார். அவருடைய பேச்சு இந்தியப் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கும். காந்தியடிகளுக்கு 341 பவுன் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது. வரவேற்பு வைபவத்தில் அராபியர்கள், யூதர்கள், இந்தியர்கள் ஆகிய யாவரும் குழுமியிருந்தனர். ஆயிரக் கணக்கில் வழி முழுதும் இருபுறமும் நின்று அரபி பாஷையில் வரவேற்பு கோஷங்கள் செய்துகொண்டிருந்தனர். காந்தியடிகளிருந்த வண்டியிலேயே ஸரோஜினி தேவியும், பிரபாசங்கர் பட்

டாணியும், நானும் இருந்தோம். சில அராபியர்கள் பிரபாசங்கர்ஜியையே காந்தியடிகளென்று நினைத்து விட்டார்கள். ஏனெனில் பிரபாசங்கர்ஜியின் வெள்ளைத் தாடியும், வெள்ளைச் சட்டையும், வெள்ளைத் தலைப்பாகையும் சேர்ந்து அவருக்கு மஹாத்மா பதவியை உண்மையில் அளித்துவிட்டன.

கூட்டம் நடந்த இடத்திலும் ஆயிரம் ஜனங்கள் கூடியிருந்தார்கள் ; அவர்கள் பெரும்பாலும் இந்தியர்கள்.

பண்டித்ஜிக்காக இங்கிருந்து கொஞ்சம் மாவும், அரிசியும், இரண்டு குடம் தண்ணீரும் எடுத்துக் கொள்ளப்பட்டன. பண்டித்ஜியின் கங்கைக் குடத்தில் அரேபியாவின் தீர்த்தம் நிரப்பப் பட்டுவிட்டதால், "பண்டித்ஜி அதைக் குடித்துக் குடித்து; இனிமேல் மௌலானா ஷௌகத் அலிக்கு உதவி புரிய வேண்டியதுதான் !" என்று நாங்கள் கேலி செய்தோம். அவரோ "தீர்த்தத்திலுள்ள விஷத்தைக் காலையிலும், மாலையிலும் செய்யும் சந்தியாவந்தனத்தினால் களைந்து விடுவேன் !" என்றார்.

* * *

காந்தியடிகள் லண்டனை அடைந்ததும் என்ன செய்யப் போகிறாரென்பதை அறிய யாவரும் ஆசை கொண்டிருக்கின்றனர். வட்டமேஜை மகாநாட்டிற்கு ஏறக்குறைய 100 அங்கத்தினர்கள் ஆகிவிட்டார்கள். பெயரே கேட்டிராத பலர் அங்கத்தினர்களாகி யிருக்கிறார்கள். இது இந்திய ஜனப் பிரதிநிதிகளின் மகாநாடல்ல ; காந்தியடிகளைத் தவிர, பிரதிநிதிகளென்று கூறப்படும் மற்ற எல்லோரும் சர்க்காரால் நியமிக்கப் பட்டவர்களே; தேர்ந்தெடுக்கப்பட்டவர்களல்ல. சிலர் நல்லவர்கள் ; பெரும்பாலோர் கவைக்குதவாதவர்கள்.

உண்மையில், இவர்களெல்லோரும் சர்க்காரின் பிரதிநிதிகளே. இத்தகைய நிலைமையில் காந்தியடிகள் ஒருவர் என்ன செய்யக்கூடும்? மகாநாட்டில் விவாதம் எழும்போது அரசாங்கம் சொல்வதே சரியென்று தலையாட்டுவோருக்குக் குறைவிராது. அங்கிலையில் அங்கே யுள்ளவர்கள், "காந்திஜி! நீங்கள் சொல்வது சரிதான்; ஆனால் உங்கள் நாட்டு மக்கள் ஒப்பாத பொழுது நாங்கள் என்ன செய்வது?" என்று இலேசாகக் கேட்டுவிடலாம். இத்தகைய நிலைமையில் காலம் வீணாவது ஒன்றுதான் கண்ட பலனாகும்; காரியம் ஒன்றும் நடைபெறாது. ஆகையால் காந்தியடிகள் இந்த ஆபத்துக்களில் சிக்கமாட்டார் என்பது நிச்சயம். எனவே, நடக்கப்போவது இதுதான் என்று கருதப்படுகிறது:—காந்தியடிகள் அங்குள்ள மந்திரி சபையுடனும், பிரமுகர்களுடனும் தனியாகக் கலந்து யோசிப்பார்; அவர்களுக்கு இந்தியாவின் நிலைமையை விளக்குவார்; இங்கிலாந்தின் பொது மக்களைத் தூண்டுவார்; இவ்விதமாக ஒரு தீர்மானத்திற்கு வருவார். மந்திரி சபை தனியாகப் பேச சம்மதியாவிடில் பெடரல் கமிட்டியில் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டபின், வாதத்திற்கு வர விரும்புவோரை, அழைப்பார். இவ்வளவும் செய்த பிறகும் காந்தியடிகளையும் நூற்றோடு நூற்றொன்றாகக் கருதுவதாகத் தெரிந்தால், உடனே ஊருக்குத் திரும்பி வந்துவிடுவார்.

காந்தியடிகள் லண்டன் சென்றவுடனேயே தம் உத்தேசத்தைத் தெரிவித்து விடுவாரென்பது என் எண்ணம். எனவே, மந்திரி சபை காந்தியடிகளிடம் தனியாகக் கலந்து பேச வேண்டியிருக்கும்; ஆகவே காந்தியடிகளே வ. மே. மகா நாடாக ஆகிவிடலாம்.

* * * *

வியாபாரிகள் சங்கத்தின் சார்பாக ஸர். புருஷோத் தம தாஸையும், என்னையும் வட்டமேஜை மகா நாட்டிற்கு நியமிக்க சர்க்கார் விரும்புவதாக சிம்லாவில் காந்தியடிகளிடம் கூறப்பட்டது. "போனால் மூவரும் போவோம்; இல்லையேல் ஒருவரும் போவதில்லை" என்று நான் ஸர். புருஷோத்தம தாஸிடம் பம்பாயில் சொல்லிவிட்டேன். காந்தியடிகள் பம்பாய்க்குச் சென்றதும் இராஜப் பிரதிநிதிக்கு ஒரு கார சாரமான கடிதம் எழுதியிருக்கிறார். காந்தியடிகளின் வார்த்தை எடுபட்டால் மூவரும் அழைக்கப்படுவோம்; இல்லையேல் ஒருவரும் இல்லை.

---

[6]

விசித்திர மனிதர்

ராஜபுதானு

4—9—1931

நேற்று மீண்டும் வட்டமேஜை மகா நாட்டைப் பற்றி காந்தியடிகளிடம் பேச்செடுத்தேன். "சர்க்கார் தங்களை என்ன உத்தேசத்துடன் அழைத்திருக்கிறார்கள்? நீங்கள் கேட்கப்போவதோ சர்க்காருக்குத் தெரியும். கராச்சி தீர்மானம்தான் எதிரில் இருக்கிறதே. இருந்தும் தங்களை அழைத்திருப்பதிலிருந்து தங்களுடைய விருப்பம் நிறைவேறப் போகிறதென்று தெரியவில்லையா?" என்றேன்.

காந்தியடிகள் :—நான் ஒன்றையும் மறைத்து வைக்கவில்லையே! இர்வினுடன் ஒப்பந்தம் ஆயிற்றல்லவா? அது ஆன பின்பு இரவு எட்டுமணிக்கு நான் இர்வினிடம், 'பாருங்கள், என்னோடு ஒப்பந்தம் செய்து கொண்டவுடன் என்னை ஏன் லண்டன்

போகச் சொல்கிறீர்கள்? நான் விரும்புவதோ உங்களுக்குத் தெரியும். அதை உங்களால் நிறைவேற்ற முடியாது; பின் என்னை அனுப்பிப் பயன் என்ன?' என்று கேட்டேன். அதற்கு இர்வின், 'நீங்கள் எதைக் கேட்டாலும், நியாய வழியை விட்டு வழுவ மாட்டீர்களென்று எனக்குத் தெரியும். ஆகையால் தான் போகச் சொல்லுகிறேன்' என்ருர்.

நான் :—ஆமாம்; நமது கோரிக்கையை எவ்விதம் சமர்ப்பிப்பது?

காந்தியடிகள் :—நாட்டுப் புறத்தானைப் போல், சாதாரணமான, புரியும் பாஷையில்தான். அங்கு யாராவது சவிஸ்தாரமான பேச்சைத் தொடங்கி, ஆட்சி முறையின் சூக்ஷமங்களைப் பற்றி வாதம்செய்ய ஆரம்பித்தால், 'ஐயா, நான் பட்டிக்காட்டான்; இந்த வாதங்கள் ஒன்றும் என் மூளைக்கெட்டவில்லை. நான் வேண்டுவது இது இது; இவைகளைக் கொடுக்கத் தயாரா?' என்பேன். என் வார்த்தைகளை ஒருவரும் காதில் வாங்க விரும்பவில்லையானல் 'என்னை ஏன் வீணில் உட்கார வைத்திருக்கிறீர்கள்? திரும்ப அனுப்பி விடுங்கள்' என்று கூறுவேன்.

நான் :—தாங்கள் திரும்புமுன் அங்கே பொதுக் கூட்டங்களில் பேசுவீர்களல்லவா?

காந்தியடிகள்:—அதுவும் அங்கே மாக்டோனல்டோ, பால்டுவினே விரும்பினல் தான்; இல்லையேல், வாயைப் பொத்திக் கொண்டு திரும்பிவிடுவேன். எவன் வீட்டிலிருக்கிறேனே அவனது அடிமையாய் இருப்பது என் சுபாவம். அவர்களுடைய விருந்தினனாக எப்போது போகிறேனே, அப்போது அங்கிருக்கும் வரையில் அவர்கள் மனம் நோகும்படி ஒன்றும் செய்யமாட்டேன்.

* * * *

அவரது போக்கே விசித்திரமானது தான். நாம் ஒவ்வொன்றையும் உலக நோக்கத்துடன் பார்க்கிறோம். இவரோ எந்த விஷயத்தையும் ஆன்மீக திருஷ்டியுடன் பார்க்கிறார். "நூறு, இருநூறு வருஷங்கள் ஆனாலும் ஆகட்டும்; நமக்கு வேண்டியது சுயராஜ்யமல்ல, ராமராஜ்யமே" என்கிறார். சூக்ஷ்மமாக ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இவருடைய கோரிக்கை எவ்வளவுக்குப் பெரியதா யிருக்கிறதோ அவ்வளவுக்கு அதன் அளவைக் குறைத்துக் கொள்ளவும் தயாரா யிருக்கிறார் என்று தெரியவரும். இதை ஒரு உதாரணத்தினால் நன்கு விளக்கலாம். அதாவது, வெண்ணெய் நீக்கிய ஒரு படி பாலைக் காட்டிலும், வெண்ணெயுடனிருக்கும் ஒரு ஆழாக்குப் பாலைப் பெற்று அவர் திருப்தி யடைந்து விடுவார். அளவைக் குறைத்துக் கொள்ளச் சம்மதிப்பாரே யன்றி, பொருளின் குணத்தைக் குறைக்க ஒரு நாளும் சம்மதியார்.

"விஷயங்களை நன்றாய்ப் படித்து வைத்துக் கொள்ளுங்கள்; சமயத்தில் காரியம் கெட்டுவிடப் போகிறது" என்றேன். "வட்ட மேஜை மகாநாட்டில் இதுவரை என்ன நடந்திருக்கிறதென்று நான் இன்னும் படிக்க வில்லை; இப்பொழுது படித்து விடுகிறேன். ஆனால் எனக்கு பலம் தருவது வித்வத் அல்ல; வாத விவாதம் செய்வதும் என் வேலையல்ல. நான் செய்யப்போவது ரோதனம் (அழுகை); இதற்குப் பாண்டித்யம் எதற்கு?" என்று காந்திஜி கேட்டார். உண்மை தான். அழுகையும், சிரிப்பும் இயற்கையாக உண்டாகிறவை. நாடகம் நடிப்பவர்கள்மட்டுமே அழுகையிலும் பாண்டித்யம் காட்டுகிறார்கள்! காந்தியடிகளோ இயற்கையான அழுகை அழ விரும்புகிறார்.

பண்டித்ஜி என்னிடம் அடிக்கடி "இந்த விஷயத்தைப் படி; அந்தச் சரித்திரத்தைப் பார்த்து வை;

ஆங்கிலேயரின் நாணயச் செலாவணி முறையை நன்ருக ஆராய்ச்சி செய்து வைத்துக்கொள்" என்றெல்லாம் சொல்கிருர். மாளவியாஜி பற்பல ஆயுதங்களைக் கொண்டு போர் புரியப்போகிருர் என்று தெரிகிறது. காந்தியடிகளிடமோ ஏக பாணந்தான். லண்டனில் பிரமாதமான பிரசார வேலை செய்யப் போவதாக மாளவியாஜி சொல்லுகிருர். காந்தியடிகளோ பிரசாரம்கூட எதிரியின் அனுமதி கிடைத்தால்தான் செய்வேனென்று கூறுகிருர். முழுதும் புதிய முறை, புதிய போக்கு, புதிய வழி! "எத்தகைய விசித்திர மான மனிதர் வந்திருக்கிருர்!" என்று லண்டன் வாசிகளும் ஆச்சரியப் படுவார்களென்றே எனக்குத் தோன்றுகிறது.

நேற்று எழுதி எழுதி, காந்தியடிகளின் வலது கை அடியோடு அசந்து போய்விட்டது. இப்பொழுது இடது கையால் எழுதுகிருர். தினமும் ஆறு மைல் தூரம் உலாவுகிருர். இரண்டு ஆழாக்குப் பால் அருந்த ஆரம்பித்திருக்கிருர். "லண்டனில் சர்ச்சிலை மட்டும் அவசியம் சந்திக்க வேண்டும். அந்த ஆசாமிதான் விடாத விரோதம் பாராட்டுகிருர்; வைது கொண்டே இருக்கிருர்." என்ருர் காந்தியடிகள். "பர்ஞர்ட்ஷா வைப் பார்ப்பீர்களா?" என்றேன். "அவரைப் பார்த்து ஆவது என்ன?" என்று பதில் வந்தது.

---

[7]

" அன்ஸாரி வரட்டும் "

ராஜபுதானு
5—9—31

போபால் நவாப் காந்தியடிகளை அழைத்துக் கொண்டுபோய், "ஹிந்து-முகம்மதியப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு தாங்கள் தனித்தொகுதி முறையை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றார். காந்தியடிகள், "எனக்குத் தனித் தொகுதியின் மேல் துவேஷமுமில்லை; கூட்டுத் தொகுதியின்மேல் மோகமுமில்லை. ஆனால் டாக்டர் அன்ஸாரி இல்லாமல் நான் எதுவும் செய்வதற்கில்லை" என்று பதிலளித்தார். நவாபுக்கு இந்த பதில் பிடிக்கவில்லையென்பதாகப் பிரஸ்தாபம். காந்தியடிகள், "நான் ஒரு நாளும் என் நண்பர்களுக்குத் துரோகம் செய்ய மாட்டேன். அன்ஸாரியிடம் கலந்து கொள்ளாமல் ஒன்றும் முடிவு செய்ய விரும்பவில்லை" என்றார்.

போபால், "அன்ஸாரியை இப்போது எப்படி அழைத்துக் கொண்டு வருவது?" என்று கேட்டார். காந்தியடிகள், "லண்டன் போனதும் முயன்று பாருங்கள். நானும் முயற்சி செய்துகொண்டு தானிருக்கிறேன்" என்றார்.

மீண்டும் இரண்டு மணி நேரம் எனக்கும் காந்தியடிகளுக்கு மிடையில் சொந்த விஷயங்களையும், ராஜீய விஷயங்களையும் பற்றிப் பேச்சு நடந்தது. காந்தியடிகளின் கோரிக்கை நிறைவேறப் போவதில்லை என்றும், ஆனால் மற்றவர்களுக்குத் திருப்தி யளிக்கு மளவுக்கு ஏதாவது கிடைத்துவிடுமென்றும் நான் அனுமானிப்பதாகச் சொன்னேன். "அப்படி நடந்தால் அதுவும் நல்லதுதான்" என்கிறார் காந்தியடிகள். "எனது இரண்டாவது போர், ஜமீன்தார்கள், தனவான்கள், ராஜாக்கள் ஆகியவர்களுடன் நடக்கும்; ஆனால் அப்போர் இனிய போராயிருக்கும்" என்கிறார்.

இரவு பிரார்த்தனைக்கு ஆங்கிலேயர்களும் வருகிறார்கள். அதிகம் பேரில்லை; ஐந்து அல்லது ஆறு பேர்தான். "பிரார்த்தனையினால் பயன் என்ன?" என்று ஒரு முகம்மதியர் கேட்டார். "எனக்குச் சிறிதாவது புத்தியிருப்பதாக நீ கருதினால், பயனிருப்பதாலேயே பிரார்த்தனை புரிகிறேன் என்று அறிந்து கொள்" என்றார் காந்தியடிகள். அந்த முகம்மதியருக்குக் கடவுளிடமோ, பிரார்த்தனையிலோ நம்பிக்கை யில்லை என்கிற விஷயம் தமக்குப் பின்னர் தெரிய வந்ததாக காந்தியடிகள் கூறினார். "எனக்கு உணவு கிடைக்காவிடில் கஷ்ட மில்லை; பிரார்த்தனை செய்யாவிடில் பைத்தியம் பிடித்து விடும்" என்பது காந்தியடிகளின் வாக்கு. இன்னும் அவர் சொல்வது: "எனது வாழ்க்கையே பிரார்த்தனை மயமானதுதான். இதனுடைய இன்பம் இந்த வழியில் சென்று பார்த்

தால் தான் தெரியும். புத்தர், ஏசு, முகம்மது ஆகிய மூவரும் பிரார்த்தனையின் மகத்துவத்தை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். என்றால் கடவுளைக் காட்ட இயலாது. கடவுள் அனுபவித்து அறிவதற் குரியவர்; ஆகையால் ஒவ்வொருவரும் தம் சொந்த அனுபவத்தினால் தான் அவரை உணரக்கூடும். பிரார்த்தனையின் மூலமாக அவரை அநுபவித்து அறிகிறோம். கடவுளின் அனுபவம் யாருக்கு வேண்டுமோ, மனச்சாந்தி யாருக்குத் தேவையோ, அவர்கள் பிரார்த்தனை செய்ய வேண்டும்."

[8]

கப்பலோட்டும் காந்தி

ராஜபுதானு
6—9—31

இன்று (ஞாயிற்றுக்கிழமை) கப்பலின் மாதா கோவிலில் பிரார்த்தனை நடந்தது. காப்டன் காந்தியடிகளை அழைத்திருந்தார். பண்டித்ஜியும், நாங்களும் கூடச் சென்றிருந்தோம். பஜனை, தியானம், பாட்டு எல்லாம் நடைபெற்றன. பண்டித்ஜி கையில் பைபிளை வைத்துக்கொண்டு கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து உட்கார்ந்து தியானத்திலமர்ந்திருந்த காட்சி விசித்திரமாயிருந்தது. பண்டித்ஜியைக் குருட்டுப் பிடிவாதமுள்ள வைதிகர் என்று கூறுவோர் தெரியாதவர்கள். பண்டித்ஜி அராபிய ஜலம் அருந்தலாம்; மாதா கோவிலில் பிரார்த்தனை செய்யலாம்; ஆயினும் அவர் சிறந்த ஸனுதனியே! ஏனெனில் அவரது இருதயத்தில் பகவான் வாசம் புரிகிருர். ஆனுலும்



கப்பல் தலைவரும், காந்திஜியும்

பூஜ்ய மாளவியாஜியும், மௌலானா ஷௌகத் அலியும்

பண்டிட்ஜி பைபிள் தாங்கிய கையுடன் தியானத்தி லமர்ந்திருந்த அந்தக் காட்சி எளிதில் கிடைக்கக் கூடியதல்ல.

கப்பலின் காப்டன் காந்தியடிகளை மேல் தளத் திற்கு அழைத்துச் சென்று அவர் கையில் கப்ப லோட்டும் சக்கரத்தைத் தந்து கப்பலோட்டச் செய்து கொண்டிருந்தார். இதைப் பார்த்த ஒருவர் வேடிக் கையாக "இந்தியக்கப்பலை காந்தியடிகள் ஓட்டு கிறார்" என்று கூறினார்.

சூயஸிலும் போர்ட் ஸெயிதிலும் அராபிய ஜனங் கள் வந்து காந்தியடிகளுக்கு உபசாரம் நடத்துவார் கள் என்று தெரிகிறது. சூயஸில் நுழைந்ததும் குளிர் தொடங்கி விட்டது. நேற்று வரை உஷ்ணம் தாங்க வில்லை.

[9]

சூயஸ் கால்வாய்

ராஜபுதானா
7—9—31

சூயஸ் கால்வாயில் நுழைந்ததும் ஒரே அமளி தான். கப்பலில் பிரயாணிகளின் வைத்தியசோதனை நடந்தது. ஆனால் பெயரளவிலே தான். எகிப்திய சர்க்காரின் டாக்டர் வந்திருந்தார். அவர் பிரயாணி களை வெறுமனே பார்த்து விட்டு, 'சரி' 'சரி' என்று போகச் சொல்லிக்கொண்டிருந்தார். கடைசியில் காந்தியடிகளின் கோஷ்டி வந்ததும், டாக்டர் எழுந்து நின்று காந்தியடிகளுடன் கைகுலுக்கி விட்டு "எனது இந்தப் புத்தகத்தில் தாங்கள் இரண்டு வார்த்தைகள் எழுத வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். இவ் வாறு காந்தியடிகளின் வைத்திய சோதனை முடிந்தது. இதன் பின்னர் கப்பலில் எகிப்திய ராஜீயத்தலைவர் களும், பத்திரிகைப் பிரதிநிதிகளும், போட்டோ எடுப்

பவர்களும் வந்து குழுமி விட்டனர். அநேகமாய் எல்லோரும் காந்தியடிகளுடன் கை குலுக்கி கைகளை முத்தமிட்டனர். கப்பலில் பெருத்த கூட்டம். கப்பல் புறப்படும் நேரம் சமீபிக்கவே மிகவும் சிரமத்துடன் ஜனங்களைக் கரையில் இறக்கிவிட்டார்கள். படம் பிடிப்பவர்கள் தங்கள் சுபாவத்தைக் காட்ட ஆரம்பித்தனர். ஒரு நிமிஷமாவது காந்தியடிகளைத் தொந்தரவின்றி இருக்கவிட வில்லை. எந்தப் பக்கம் திரும்பினாலும், தங்கள் காமிராவைத் தூக்கிக்கொண்டு வந்து பாய்கிறார்கள். குறைந்தது 200,300 படங்களாவது பிடித்திருப்பார்கள். லண்டன் "டெய்லி டெலிகிராப்" பத்திரிகையின் பிரதிநிதியும் வந்திருந்தார். அவரும் பல கேள்விகள் கேட்டார். கடைசியில் கப்பல் கிளம்பிற்று. சில பிரதிநிதிகள் இரவு முழுவதும் எங்களுடன் கப்பலில் யாத்திரை செய்த பின், காலையில் போர்ட் ஸெயிதில் இறங்கினார்கள்.

இரவு பிரார்த்தனையில் பல எகிப்தியப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். ஒரு ஜெர்மானியர் காந்தியடிகளை "அஹிம்ஸை" யைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதன்மேல் காந்தியடிகள் அரை மணி நேரம் வெகு அழகாகப் பேசினார். எகிப்தியர் அதைத் தங்கள் பாஷையில் எழுதிக்கொண்டிருந்தனர். காந்தியடிகள் தூங்குவதற்குப் போகிறவரையில் அவரைப்பற்றிய ஒவ்வொரு செய்தியையும், அவர் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் பற்றிக் குறித்துக்கொண்டிருந்தனர். நான் அவர்களிடம் எகிப்தின் நிலைமையைப்பற்றிக் கேட்டேன். முன் தடவை நான் அங்கே போய் வந்த பிறகு அவர்கள் சிறிதும் முன்னேறவில்லை என்று தெரிந்தது. உறுதியுள்ள, சுயநலமற்ற தலைவர்களில்லாதது குறை. நஹாஸ் பாஷா, காந்தியடிகளுக்கு அன்பு ததும்பும் தந்தியொன்று அனுப்பியிருக்கிறார்; திரும்புகையில்

கெய்ரோவுக்கு விஜயம் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

காலையில் போர்ட் ஸெயிதிலும் வெகு ஜனங்கள் வந்திருந்தனர். ஷௌகத் அலி முதல் கப்பலில் வந்திறங்கி எகிப்திலும், பாலஸ்தீனத்திலும் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவரும் எங்கள் கப்பலில் இன்று வந்து ஏறிவிட்டார். அவர் முஸ்லீம் நாடுகளில் முஸ்லீம் ஐக்யபத்ய இயக்கத்தைப் பிரசாரம் செய்யச் சென்றிருந்ததாகக் கேள்வி. இவருக்கு எங்கும் வரவேற்புக் கிடைக்க வில்லை என்று எகிப்தியர் கூறினர். நஹாஸ் பாஷா சிறிது கடுமையாகவே பேசி விட்டதாகவும் கேள்வி. இங்குள்ள முஸல்மான்கள் தேசப் பற்றுள்ளவர்கள்; மத வெறி கொண்டவர்கள் அல்ல; ஆகையால் மௌலானு ஸாஹிப்பின் கைவரிசை இங்கே ஒன்றும் செல்லவில்லை.

இவ்விடத்துப் பத்திரிகை ஒன்றில் பண்டித்ஜியைப்பற்றி வேடிக்கையான செய்திகள் பிரசுரமாகியிருக்கின்றன. அவர் ஒரு பானை நிறையச் சோறு கொண்டு வந்திருக்கிருராம். அதிலிருந்து தினமும் சிறிது எடுத்து உருட்டி வைத்துப் பூஜை செய்கிருராம்! அவர் குடிப்பதற்காக கங்கை ஜலம் அடிக்கடி வந்து கொண்டேயிருக்கிறதாம். இதற்காக மொத்தச் செலவு ரூ. 15,000 ஆகிறதாம். இதற்கு அவரது பணக்கார நண்பர் ஒருவர் பணம் கொடுக்கிருராம்!

சூயஸின் கரையோரத்தில் சிற்சில இடங்களில் அராபியர்கள் கூடி நின்று, கோஷம் செய்து, காந்தியடிகளை வரவேற்றுக் கொண்டிருந்தனர்.

போர்ட் ஸெயிதில் ஜனங்கள் காந்தியடிகளுக்காகப் புஷ்பங்களும், பழங்களும் கொண்டு வந்தனர்; புதிய மாம்பழங்களும், பேரீச்சம் பழமும் இருந்தன.

மாம்பழங்கள் நமது ஊர்ப் பழங்களைப் போல் ருசியா யில்லை; திராக்ஷைப் பழம் பார்ப்பதற்கு மிகவும் அழகா யிருந்தது ; தின்பதற்கும் ருசியாயிருக்கலாம்.

[10]

மனம் சுத்தமில்லை

ராஜபுதான
9—9—31

இப்பொழுது தான் மௌலானா என்னோடு பேசி விட்டுப்போனார். "உடம்பு சௌக்யமா?" என்றேன். "உயிர் வைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றார். "நீங்கள் வந்தது நமது அதிர்ஷ்டம். லண்டன் போகு முன் இந்த வழக்கைத் தீர்த்துக் கொள்ளுங்கள்; இல்லையேல் இரு ஜாதிகளும் அழிந்து போம்" என்றேன். மௌலானா, "இது மிகச் சிறிய விஷயம்; எல்லாம் காந்தியடிகளின் கையில் இருக்கிறது" என்றார். நான் "எல்லாம் உங்கள் கையில் இருக்கிறது. நவாப் ஸாஹிபும் இருக்கிறார். அன்ஸாரியையும் அழைத்துக் கொள்ளுங்கள். எல்லோரும் கூடி அமர்ந்து ஒரு முடிவு செய்து கொள்ளுங்கள்" என்றேன். ஆனால் ஆகப்போவது ஒன்றுமில்லை.

போபால் நவாப் மீண்டும் காந்தியடிகளை அழைத்தார். ஷௌகத் அலியும் இருந்தார். நான்கு மணி நேரம் பேச்சு நடைபெற்றது; பயனொன்றுமில்லை. "நீங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொண்டால், லண்டனில் தேசியக் கோரிக்கைகள் விஷயத்தில் எவ்வாறு நடந்து கொள்வீர்கள்?" என்று காந்தியடிகள் கேட்டார். ஷௌகத் அலி "நான் சர்க்கார் பக்கந்தான் இருப்பேன்" என்றார்.

மறுநாள் போபால் நவாப் மாளவியாஜியையும் அழைத்தார். வட்டமேஜை மகா நாட்டில் மாளவியாஜியின் போக்கு எவ்வாறிருக்குமென்பதைப் பற்றிச் சர்ச்சை நடந்தது. பண்டித்ஜி, "வாழ்வா, சாவா என்ற மிக்க முக்கியமான பிரச்னை. கிடைத்ததைப் பற்றிக் கொண்டு போவதற்காக நான் லண்டன் வரவில்லை. எந்நிலையிலும் காந்தியடிகளைக் கைவிடப் போவதில்லை" என்றார். "அப்படியானால், மேலே பேசுவதில் பயனில்லை" என்றார் நவாப். "நடப்பது நடக்கட்டும்" என்று பதிலளித்தார் பண்டித்ஜி.

லண்டனிலிருந்து ஆண்டுரூஸின் தந்தி வந்திருக்கிறது. லண்டனுக்கு 80 மைல் தூரத்திலுள்ள 'போக்ஸ்டன்' என்ற நகரில் காந்தியடிகள் இறங்கி, ரயிலில் வராமல், மோட்டாரில் லண்டன் வந்து சேர்வது நலமென்று சர்க்கார் கருதுவதாகத் தெரிவித்திருக்கிறார். "எனக்கு எவ்வித ஆக்ஷேபமுமில்லை" என்று காந்தியடிகள் தந்தி யனுப்பிவிட்டார். லண்டனில் காந்திஜியை வரவேற்கப் பெருத்த கூட்டம் கூடலாம். இத்தகைய வரவேற்பை சர்க்கார் விரும்பவில்லை. அதனாலேயே இந்த யுக்தி செய்யப்பட்டிருக்கிறது.

13உ ஞாயிற்றுக்கிழமை இரவு காந்தியடிகள் பிரதம மந்திரி முதலிய பிரமுகர்களைச் சந்திக்க

வேண்டுமென்று, ஸப்ரூவினிடமிருந்து தந்தி வந்திருக்கிறது.

"அன்றிரவே நான் எனது வேலையை முடித்துக் கொண்டு, அவசியமானால் மறு கப்பலிலேயே திரும்பி விடுவேன்" என்று காந்தியடிகள் சொல்லிக் கொண்டிருந்தார். அவருக்கு வரவேற்புக் கூடாதென்பதற்காகவே மோட்டாரில் அழைக்கப்பட்டிருக்கிறார். அங்கே, மனம் சுத்தமாக இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

---

[11]

நிருபர் சரடுகள்

ரயிலில்

11—9—31

இன்று காலையில் 'மார்ஸேல்ஸ்' வந்தோம். இங்கும் பழைய கதை தான். நூற்றுக் கணக்கில் புகைப் படம் பிடிப்பவர்களும், கணக்கற்ற பத்திரிகை நிருபர்களும் தயாராயிருந்தனர். கப்பலுக்கு வர அவர்களுக்கு அனுமதியில்லை. ஆயினும் நல்ல கூட்டம். லண்டன், அமெரிக்கா, ஜெர்மனி, நார்வே ஆகிய இடங்களின் பத்திரிகைப் பிரதிநிதிகள் அநேகம் பேர் வந்திருந்தார்கள். எல்லாரும் விதம் விதமாகக் கேள்விகள் கேட்டனர். லண்டனிலிருந்து வந்தவர்கள் ஏதாவது இடுக்குக் கிடைக்குமா என்று பார்ப்பதற்கே வந்தவர்கள்; அவர்கள் பொய்யும் புளுகுமாகச் செய்திகளைப் புனைந்து அனுப்புகிறார்கள். எகிப்திலிருந்து ஒரு சேனை அதிகாரி காந்தியடிகளுக்கு ஒரு சட்டை

யனுப்பி அதை அணியும்படி கேட்டுக்கொண்டிருக் கிறார். காந்தியடிகள் அதை வைத்துக்கொண்டிருக் கிறார்.

பதினொரு மணிக்கு காந்திஜி கப்பலிலிருந்து இறங்கி, பிரெஞ்சு மாணவர்களுடைய கூட்டம் ஒன்றுக்குச் சென்றார். வழியில் வண்டி நின்ற விட மெல்லாம் ஜனங்கள் கூட்டம் கூடி "காந்தி வாழ்க" என்று கோஷித்தனர். காந்தியடிகளைப் பார்க்க வேண்டுமென்று எல்லோருக்கும் மிகுந்த ஆசை. கூட்டத்தில் அதிக ஜனங்களில்லை; ஏனெனில் அனு மதிச் சீட்டில்லாமல் கூட்டத்திற்கு வரக்கூடாது. ஆனால் வெளியில் திரளான ஜனங்கள் நின்றனர். இங்கு நடைபெறும் பொதுக் காரியங்களிலெல்லாம், படம் பிடிப்பவர்கள், பத்திரிகைக்காரர்கள் மிகுதியாக இருக்கிறார்கள். தினமும் சராசரி இருநூறு தடவை யாவது காந்தியடிகளைப் படம் பிடிக்கிறார்களென்று கூறலாம். பத்திரிகை நிருபர் சுமார் பத்துப் பதினைந்து பேராவது காந்திஜியிடம் செய்தி வாங்கிக்கொண்டு போகிறார்கள்.

பத்திரிகைகளெல்லாம் இங்கு வியாபார முறை யில் நடக்கின்றன. நிருபர்கள் உண்மைச் செய்தி களையே அனுப்புகிறார்களென்பதில்லை. பொய் எல் லோருந்தான் எழுதுகிறார்கள். சிநேகபாவமுள்ளவர் கள் புகழ்ந்து கயிறு திரிக்கிறார்கள். உதாரணமாக, ஒரு அமெரிக்கப் பத்திரிகை நிருபர் திரித்த சரடைக் குறிப்பிடலாம். "காந்தியடிகள் ரொம்பவும் தயாளு; இதனால் அக்கம் பக்கத்திலுள்ள பூனைகளைத் தம்மோடு படுக்கையில் படுக்க வைத்துக்கொண்டு தூங்குகிறார்" என்று அவர் எழுதியிருந்தார். விரோதபாவங் கொண்ட ஒரு ஆங்கிலப் பத்திரிகைக்காரனோ, "காந்தி போகுமிடமெல்லாம் ஆங்கிலேயரைத் திட்டுகிறார். இதுவரை அவருக்கு எங்கும் மரியாதை கிட்ட

வில்லை; ஆகையால் அவர் முகத்தில் ஈயாட வில்லை. ஒரே கோபமாயிருக்கிறார். விதேசித் துணி களைத்தான் அவர் அணிந்துகொள்கிறார்; வெளியிற் காட்டுவதற்கு மட்டுமே சுதேசித் துணி வைத்திருக் கிறார்" என்றெல்லாம் எழுதித் தீர்த்து விட்டான். இந்தப் பத்திரிகைக்காரன் ஸபர்மதி ஆசிரமத்தில் சில தினங்கள் தங்கியிருந்தவன். அங்கு இவன் காய்ச்சலாகக் கிடந்தபொழுது காந்தியடிகளே இவ னுக்கு சேவை புரிந்தார். மார்ஸேல்ஸிலிருந்து புறப் படும்பொழுது பத்துப் பன்னிரண்டு பத்திரிகைக் காரர்கள் வண்டியில் வந்து உட்கார்ந்துகொண்டனர்; அவர்களில் இவனும் ஒருவன். காந்தியடிகள் இவ னைத் தம் பக்கத்தில் அழைத்து நன்றாகக் கண்டித் தார். அவன் வெதிர் வெதிர்த்துப் போனான். ஆனால் தன் பழக்கத்தை எங்கே விட்டிருக்கப்போகிறான்?

[12]

மக்களின் வரவேற்பு

லண்டன்

12—9—31

வண்டி காலை ஆறு மணிக்குப் பாரிஸை அடைந்தது. அங்கும் அதே கூட்டம்; அதே படம் பிடிப்பவர்கள்; அதே நிருபர்கள்.

பதினோரு மணிக்கு வண்டி பூலோன் சேர்ந்தது. இங்கிருந்து இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து ஒரு மணிக்கு நாங்கள் போக்ஸ்டன் சேர்ந்தோம். போக்ஸ்டனிலும் நல்ல கூட்டம். போலீஸ் பந்தோபஸ்தின் காரணமாக ஒருவரும் கப்பலுக்கு வரமுடியவில்லை. இங்கு இரண்டு சர்க்கார் வண்டிகள் வந்திருந்தன. ஒன்றில் காந்தியடிகள் அமர்ந்தார். மற்றதில் மாளவியாஜியும், நானும் உட்கார்ந்தோம். போலீஸின் யுக்தியினால் முதலிலிருந்தே இரு வண்டிகளும் பிரிந்து வேறு வேறு வழிகளில் சென்றன. லண்டன் அருகில்



பாக்ஸ்டன் துறைமுகத்தில் காந்திஜி

காந்திஜி, போபால் நவாப்

சென்றதும் பண்டித்ஜி வண்டிக்காரனிடம், "எனக்குக் கை கால் சுத்தம் செய்துகொள்ளவேண்டும்; முதலில் ஆரியபவனத்திற்குக் கொண்டுபோ" என்ருர். அதற்கு, டிரைவர், "மகாநாட்டு மாளிகைக்கு நேரே கொண்டுபோகும்படி எனக்கு உத்திரவு. வழியில் வேண்டுமானுல் எங்காவது இறங்கிப் போய்விட்டு வாருங்கள்; ஆரியபவனம் போக முடியாது" என்ருன். ஆகவே நாங்கள் கைதிகள் என்றே எனக்குப் புலப்பட்டது. எங்களுக்குக் கிடைத்த இந்த வரவேற்பிலிருந்து இனிக் கிடைக்கப்போகிற சுயராஜ்யம் எப்படி யிருக்குமென்று கற்பனை செய்து கொள்ளலாமல்லவா? காந்தியடிகள் ரயிலில் வரவில்லை யென்பது தெரிந்திருந்தும் விக்டோரியா ஸ்டேஷனில் ஆயிரக்கணக்கில் ஜனங்கள் கூடியிருந்தனராம். மழை பெய்துகொண்டிருந்தபோதிலும் ஆயிரமாயிரம் மக்கள் மகாநாட்டு மாளிகையின் முன்னுல் காந்தியடிகளின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

இங்கிலாந்து தேசமென்பது ஒன்றல்ல என்பதைத் தெரிந்து கொள்வது அவசியம். ஏழை எளியவர்கள், சாதாரண ஜனங்கள்—இவர்களடங்கிய இங்கிலாந்து ஒன்று. இந்த தரித்திர நாராயண இங்கிலாந்துக்கு இந்தியாவிடம் துவேஷமில்லை; இங்கே அதற்கு யாதொரு செல்வாக்குமில்லை. மற்ருெரு இங்கிலாந்து பிரபுக்களுடையது; அவர்கள் கையில்தான் அதிகாரமிருக்கிறது; சக்தியுமிருக்கிறது. இவர்களில் பத்துப் பேர் இந்தியாவுக்கு சுயராஜ்யம் தர விரும்பினுல் நமக்குச் சுயராஜ்யம் கிடைத்துவிடும். "ஹுர்ரே! ஹுர்ரே!" என்ற கோஷத்துடன் காந்தியடிகளை வரவேற்பவர்கள் ஆயிரக் கணக்கானவர்களான போதிலும் அவர்கள் சக்தியற்ற நொண்டிகள். இங்கே ராஜாங்கம் பிரபுக்களின் கையிலேதான் இருக்கிறது

'தொழிற்கட்சி' என்பது பெயரளவில்தான். 'தொழிலாளி சர்க்கார்' நடந்ததும் பெயருக்குத்தான். தொழிலாளி சர்க்கார் சிறிது வாலை யாட்டியதும், முதலாளிகள் கடன் கொடுப்பதை நிறுத்திவிட்டனர்; மாக்டோனுல்டுக்குப் புத்தி வந்தது.

எனவே, இங்கே காந்தியடிகளுக்கு ஏழைகளின் வரவேற்பில் ஒன்றும் குறைவு கிடையாது; ஆனுல் 'பணப்பை'களின் போக்குத்தான் சரியாயில்லை.

மகாநாட்டு மாளிகையில் 1500 பேர் கூடியிருந்தனர்; அவர்களில் சுமார் 600 பேர் இந்தியர்கள். வரவேற்புப் பிரசங்கம் செய்தவர் நன்ருய்ப் பேசினுர். காந்தியடிகளின் பிரசங்கமோ அபூர்வமாயிருந்தது. கேட்டோர் மெய் மறந்தனர். அவ்வளவு தொப்பியணிந்த தலைகளினிடையில் கம்பளி போர்த்திய உடலுடன் அமர்ந்தபடியே காந்தியடிகள் பேசினது, ஏசுநாதரே ஆங்கிலேயர் முன் வந்து உபதேசிப்பது போலிருந்தது. காந்தியடிகள், "உங்களுடைய அரசாங்கம் தற்பொழுது வரவு செலவுக் கணக்கை சரிக்கட்டுவதில் முனைந்திருக்கிறது. ஆகையால் மிகவும் சிந்தனையிலாழ்ந்திருக்கிறது. ஆனுல் எங்களது கணக்கையும் நேர் செய்யாதவரையில், நீங்கள் செய்வதொன்றும் பயன்படாது. நான் தேச பக்தன்; ஆனுல் எனது தேசபக்தி எல்லா உயிர்களையும் நேசிக்கக் கற்பிக்கிறது; நான் எல்லோரது நன்மையையும் கோருகிறேன்" என்று சொன்னதும் பிரமாதமான கரகோஷம் எழுந்தது.

வரவேற்பு முடிந்த பின், காந்தியடிகள் தொழிலாளர் வசிக்கும் பாகத்திலிருந்த தமது ஜாகைக்குச் சென்ருர். பண்டித்ஜி ஆரியபவனத்திற்கு வந்தார். மாளிகையிலிருந்து கிளம்பியதும் பண்டித்ஜி தழதழத்த குரலில், "காந்தியடிகளின் தேக நிலையைப் பற்றி எனக்குக் கவலையாயிருக்கிறது. அவர் தேவை

யான துணி உடுத்துவதில்லை. ஒன்றும் ஏற்படா திருக்க வேண்டும். 'வியாதியோ, மரணமோ எது வந்தாலும் எனக்கு வரட்டும், பகவானே' என்று வேண்டிக் கொண்டே யிருக்கிறேன்!" என்றார். நான், 'பண்டித்ஜி, தாங்கள் தங்களுடைய கவலை யைப்பட்டாலே போதும்; அவரைப்பற்றிக் கவலை வேண்டாம்" என்றேன். பண்டித்ஜி பம்பாயிலிருந்து புறப்பட்ட பிறகு மிகவும் இளைத்து விட்டார்; சோர்வும் அதிகரித்துக்கொண்டே யிருக்கிறது. இவ ரது உடல் நிலையைப்பற்றி எனக்கு மிகவும் கவலையா யிருக்கிறது.

. . .

[13]

நாடிப் பரீக்ஷை

லண்டன்

13—9—31

காந்தியடிகளின் ஜாகை சிறியது; ஓய்வெடுத்துக் கொள்வதற்குப் போதிய வசதியில்லை; ஆனால் அங்குள்ளவர்கள் அன்போடு சேவை புரிந்து வருகின்றனர். கூலியில்லாச் சேவகர்கள்! பத்திரிகைக்காரர்கள் இலவசமாகப் பத்திரிகைகள் கொடுத்துப் போகிறார்கள். ஜனங்கள் நூற்றுக் கணக்கில் வீட்டெதிரில் நின்று கொண்டு ஜயகோஷம் செய்த வண்ணமாயிருக்கிறார்கள்.

இன்றிரவு பிரதம மந்திரியுடன் பேச்சு நடைபெறும்; நாடி எப்படி இருக்கிறதென்று நாளைக்குள் புலப்படலாம்.

[14]

ஏகப் பிரதிநிதி

லண்டன்

15—9—31

இன்று மாலை போஜனத்திற்குப்பின் நாங்கள் 'கிங்ஸ்வே ஹாலை' அடைந்தோம். நான் முக்கியமாய் மூன்று விஷயங்களைக் குறித்து காந்தியடிகளின் கருத்தை அறிய விரும்பினேன். முதலாவது, இங்கிருந்து வேறு இடத்திற்குப் போகும் எண்ணம் இப்பொழுது உண்டா என்பது. இடம் மாற்றுவதற்கு பாபு சிறிது சம்மதம் உள்ளவர்போல் தெரிகிறது என்றும், ஆரிய பவனத்தில் தங்க ஒத்துக்கொள்ளலாமென்றும் நேற்று தேவதாஸ் டெலிபோனில் சொன்னார். 'கிங்ஸ்வே ஹால்' போவது வருவது சுலபமல்ல. இங்குள்ள இந்தியர்களும், காந்தியடிகளுக்கும் தங்களுக்குமிடையில் இவ்வளவு தூரம் இருப்பதை விரும்பவில்லை. இடம் மாற்ற வேண்டுமென்

பவர்கள், இன்னும் அழுத்த மான காரணங்களும் கூறுகிறார்கள். 'கிங்ஸ்லே ஹால்' ஒரு பொது ஸ்தாபனம்; அங்கே காந்தியடிகள் தாமதிப்பதால் அவ்விடத்திய காரியங்கள் தடைப்படுகின்றன. அன்று டெலிபோன்காரன் தனக்கு மூச்சுவிடவும் நேரமில்லை என்று மெதுவாகக் குறை கூறினான். உள்ள ஆட்கள் குறைவு; அவர்களுக்கு இருக்கும் காரியத்தின் பளு பெரிது. நான் அன்று இந்த ஸ்தாபனத்தை நடத்தும் மிஸ் லெஸ்டரிடம் பேசினேன். மற்றவர்களிடமும், நாங்கள் உதவி செய்யக் காத்துக்கொண்டிருக்கிறோம் என்று கூறினேன். லெஸ்டரோ, "எங்களுக்கு யாதொரு கஷ்டமோ அசௌகரியமோ இல்லை; இருந்தால் சொல்வதற்கு சங்கோசப்பட மாட்டோம்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். காந்தியடிகளுக்கு இவ்வளவே போது மானது. அவரிடம் வேறு காரணங்களையும் எடுத்துச் சொன்னோம். "லெஸ்டருக்குத் தங்களிடம் மிகுந்த பக்தி உண்டு; ஆனால் இந்திய ராஜீய இயக்கத்தில் அவருக்குப் பூரண அனுதாபமில்லை. மேலும் லெஸ்டரைப்போல் இந்த ஸ்தாபனத்தில் எல்லா டிரஸ்டிகளுக்கும் தங்களிடம் அன்பு கிடையாது" என்றெல்லாம் சொல்லிப் பார்த்தோம். ஆனால் இந்த வாதங்களினாலெல்லாம் காந்தியடிகளை அசைக்க முடியவில்லை. இன்று நான் கேட்ட பொழுது அவர் சொன்னதாவது :—

"மறுபடியும் இன்றைக்கு இவ்விஷயமாக எனக்கும் மிஸ் லெஸ்டருக்கும் பேச்சு நடந்தது. நான் இங்கு தங்குவதால் அவருடைய ஸ்தாபனத்திற்கு ஏதாவது நஷ்டமுண்டாகுமென்றாலும் வேறு ஏதாவது கஷ்டமிருந்தாலும் என்னிடம் ஒளிவு மறைவின்றிச் சொல்ல வேண்டுமென்றும், இதில் ஒன்றும் சங்கோசமே வேண்டியதில்லை என்றும் தெரிவித்தேன். மிஸ் லெஸ்டர் 'நீங்கள் இங்கிருப்பதால்

எங்களுக்குக் கஷ்டமோ நஷ்டமோ இல்லை யென்பது மட்டுமல்ல; எங்களுக்கு லாபமே உண்டாகி யிருக்கிறது. எங்களிடம் விரோதம் பாராட்டி வந்த சிலரும் இப்போது இங்கு வரவும் உதவி செய்யவும் ஆரம்பித்திருக்கிறார்கள்' என்று உறுதி கூறினர். எனக்கு லெஸ்டரின் வார்த்தையில் நம்பிக்கை யுண்டு. ஆகையால் நான் வேறு எங்கும் போகவிரும்பவில்லை" என்றார்.

இது ஏழைகள் வசிக்குமிடம். இங்கிருக்கும் ஏழை மக்களுக்கு காந்தியடிகளிடத்தில் அன்பு ததும்புகிறது என்பதில் சந்தேகமில்லை. ஆதலால் தரித்ர நாராயண உபாசகரான காந்தியடிகள் இந்த ஏழை மக்களை விட்டுப் பிரிய யாதொரு காரணத்தையும் காணக்கூட வில்லை.

மீராபென்னும் லெஸ்டரும் ஒருவர் மற்றவரிடமிருந்து விலகியே இருக்கின்றனர். இதைப் பற்றிப் பேச்செழுந்த பொழுது காந்தியடிகள், "இதில் நான் மீராபென் பேரில் தான் குற்றமென்பேன். மீராபென்னின் மனதில் 'நான் செய்திருக்கும் அளவு இவர்களும் ஏன் தியாகம் செய்ய வில்லை?' என்ற எண்ணமிருக்கிறது. ஒருவரும் தனது தியாகம் அல்லது தவத்தைக் குறித்து கர்வம் கொள்ளலாகாது. என்னால் ஆன அளவிற்கு நான் செய்கிறேன்; மற்றொருவர் அவ்வளவு செய்யக் கூடவில்லையாயின் நான் ஏன் அவரிடம் கோபம் கொள்ள வேண்டும்? தியாக மார்க்கத்தில் செல்பவனுக்கு முதலில் கர்வமுண்டாகும். எனக்கும் ஒரு காலத்தில் உண்டானதுண்டு. ஆனால் சீக்கிரத்தில் சமாளித்துக் கொண்டேன்" என்றார்.

லெஸ்டர் தமது ஸ்தாபனத்தை விளம்பரப் படுத்தவே காந்தியடிகளைத் தம் விருந்தினராக்க விரும்பினார் என்ற ஊர் வம்பும் காந்தியடிகளின் காதுக்கு

எட்டிவிட்டது. இதைப் பற்றி அவர், "லெஸ்டர் அவ்வாறு விரும்பி, அவரது ஸ்தாபனத்திற்கு விளம்பரம் ஏற்படுவதானல் அதில் என்ன தவறு இருக்கிறது? அவரும், அவரது ஸ்தாபனமும் கொண்டுள்ள விரதம் ஏழை எளியவர்களுக்குச் சேவை செய்வதுதானே?" என்று கேட்டார்.

நான் கேட்க விரும்பிய இரண்டாவது விஷயம் சுருக்கெழுத்துக்காரனைப் பற்றியது. "சுருக்கெழுத்துக்காரனை எப்பொழுது அனுப்பட்டும்?" என்று கேட்டேன். அதற்கு காந்தியடிகள் "இப்பொழுது ஒரு அவசியமுமில்லை. எழுதவும் எழுதச் சொல்லவும் எங்கே அவகாசமிருக்கிறது? 'வியாசம்' என்று எழுதப்பட்டு என்முன் வருவதெல்லாவற்றையும் நான் 'பாஸ்' செய்து அனுப்பிக் கொண்டிருக்கிறேன். மஹாதேவின் பாஷை எனக்கு ஒத்து வந்து விட்டது. அவருடைய கையெழுத்தும் நன்ருயிருக்கிறது. பியாரிலால் அவ்வளவு போதாது தான். அவருடைய கையெழுத்து ரொம்ப மோசம்; நடையும் அவ்வளவு திருப்திகரமாயில்லை. நல்ல வித்வான் தான்; ஆனல் பாஷையும், நடையும் ஒரு மாதிரியா யிருப்பதில்லை. மனதை விஷயத்தில் பூரணமாய்ச் செலுத்தி எழுதத் தொடங்கினல் நன்ருக இருக்கிறது; இல்லாவிட்டால் குற்றங்கள் வந்து விடுகின்றன" என்ருர்.

மகாநாட்டிற்கு காந்தியடிகள் போய் வருவதற்கு மோட்டார் வசதி தேவை யென்பதாகச் சொன்னுர்கள். காந்தியடிகளை விசாரித்ததில் இந்தச் செய்தியும் தவறென்று தெரிய வந்தது. இந்திய டாக்டர் ஒருவர், காந்தியடிகளை அழைத்துப் போய் வரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிருர். நேற்று அவருடைய மோட்டார் வந்து வாசலில் நின்று கொண்டிருந்தும் காந்தியடிகள் தவருக வேறு வாசல்

வழியாகப் போய்விட்டார். வாடகை மோட்டார் வைத்துக் கொண்டு போக வேண்டியதாகி விட்டது. பின்னர், டாக்டருடைய வண்டி வந்திருந்த செய்தி கேட்டு காந்தியடிகள் மிகவும் வருந்தினர். "என் மௌன தினமாகையால் நன்ருக விசாரிக்க முடிய வில்லை; வண்டி எங்கிருக்கிறது என்று மஹாதேவி டமும் தெரிந்து கொள்ளக் கூடவில்லை" என்ருர். ஒரு சல்லிக் காசும் வீண் செலவு ஆகக் கூடாதென்று காந்தியடிகள் வெகு ஜாக்கிரதையா யிருக்கிருர். வாடகை மோட்டார் விஷயத்திலும் கொஞ்சம் மிச்சப்படுத்தி விட்டார். மாளவியாஜிக்கும் வண்டி வேண்டியதாயிருந்தது. அவருக்குத் தனி வண்டி வைக்கவேண்டாமென்று தம் வண்டியில் ஏற்றிக் கொண்டுபோய் ஆரியபவனில் இறக்கி விட்டு வந்தார். இனிமேல் வாடகை வண்டியே கூடாது என்று கண்டிப்பாய்ச் சொன்னுர்.

"அப்படியானுல் நான் கேள்விப்பட்ட மூன்று செய்திகளும் பொய்யா ?" என்று கேட்டேன்.

காந்தியடிகள் "முழுப்பொய் !" என்ருர்.

"மூன்றும் பத்திரிகைச் செய்திகள் போலும் !" என்றேன் நான்.

காந்தியடிகள் கொல்லெனச் சிரித்தார்.

*   *   *

இன்றைய மகாநாட்டுக் கூட்டத்தில் காந்தியடிகள் செய்த உபந்நியாசத்தைப்பற்றிப் பேச்சு எழுந்தது. எல்லோரும் அதை வாயாரப் புகழ்கின்றனர்; அது என்றும் அழியாத சரித்திரப் பிரசித்தி பெறப் போகிற சொற்பொழிவு என்கிருர்கள். கூட்டத்திற்குப் போகுமுன் காந்தியடிகள் இந்தியா மந்திரியைச் சந்தித்தார். அவர் நல்ல நோக்கம் கொண்டிருப்பதைத் தெரிந்துகொண்டார். தாம் பிரிட்டிஷ்

ஆட்சிமுறையில் மிகுந்த பற்றுக் கொண்டிருந்தது போய், எவ்வாறு அவ்வாட்சி முறையின் கொடிய விரோதியானூர் என்ற விவரத்தை இந்தியா மந்திரி யிடம் மிகவும் தெளிவாக விளக்கிக் கூறினூர்.

"ஒரு காலத்தில் உங்கள் ஆட்சியை எனது நாட்டிற்கு நன்மை செய்யக்கூடியதென்று நம்பி அது நீடூழி வாழ வேண்டுமென்று விரும்பினேன். உலகில் வேறெந்த மனிதனும் என்னைப்போல் சுயநலமின்றி, தூய மனதுடன் உங்களுக்கு உதவியிருக்கமாட்டான். நண்பனுயிருந்தவன் சத்துருவானதற்கும், வேருக்குத் தண்ணீர் வார்க்காமல் வேரையே களைந்தெரிவதில் முனைந்து நிற்பதற்கும் என்ன காரணம்?" என்று காந்திஜி கேட்டார்.

ஹோர் :—"மஹாத்மாஜி, எனது பிறப்பு வளர்ப்பு வேறு மாதிரியா யிருப்பதால் என் கருத்தும் வேறு விதமாயிருக்கிறது. எனது படிப்பும் பயிற்சியும் என் ஜாதியார் இந்தியாவில் செய்திருக்கும் செயல்களைக் குறித்து என்னை கர்வமடையக் கற்பிக்கின்றன."

காந்தியடிகள் :—"உங்களுக்கு கர்வம் இருக்க லாம்; ஆனுல் அது தவறு. இந்தியாவின் தற்போதைய நிலைமையும், நாளுக்கு நாள் அது அடைந்து வரும் சீர்கேடும் உங்களுக்கு கர்வத்தையல்ல, வெட்கத்தைத் தரவேண்டும். பல வருஷங்களாக எனக்கு என் நாட்டு மக்களுடன் நெருங்கிய தொடர்பு இருந்துவருகிறது. கிராமங்களில் சுற்றுதல், கிராம ஜனங்களுடன் நெருங்கிப் பழகுதல், அவர்களுடைய கஷ்டங்களை ஆராய்ந்து அறிந்துகொள்ளல், அவர்களுடைய சுக துக்கங்களைப் பகிர்ந்துகொள்ளல்—இவைகளில் உங்களுடைய உத்தியோகஸ்தர் எவரும் என்னை மிஞ்சமுடியாது. எனது நாட்டு மக்கள் நேற்று எப்படி இருந்தனர், இன்று எப்படி இருக்கிறூர்கள் என்பதை என் கண்களால் பார்த்திருக்

கிறேன். உங்கள் மூலமாய் என்னுடைய தேசம் க்ஷேமம் அடையப்போவதில்லையென்பது நிச்சயம்; எத்தனையோ கசப்பான அநுபவங்களின் பயனாகவே இந்த முடிவுக்கு வந்தேன்."

ஹோர்:—"இப்பொழுதுதானே நமக்குள் சமாதான முயற்சி ஆரம்பித்திருக்கிறது? இது முடிவதற்குள் உங்களுடன் எத்தனையோ விஷயங்கள் பேசியாகவேண்டும்."

காந்தியடிகள் உடனே மகாநாட்டிற்குச் சென்று உபந்நியாசம் செய்யவேண்டியிருந்தது. ஆகவே ஹோர், "உங்களுக்கு இன்று நான் சிரமம் கொடுக்க விரும்பவில்லை. ஆயினும் கூடிய சீக்கிரத்தில் உங்களைப் பார்க்கவேண்டியதும் அவசியமாயிருந்தது" என்றார். பிறகு, அவர் தங்கியிருக்கும் இடத்தைப் பற்றி விசாரித்தார். "ஏழை சகோதரர்களிடையே சௌக்கியமாயிருக்கிறேன்" என்று பதில் தந்தார் காந்தியடிகள். ஹோர், "இங்கிலாந்தின் உண்மை மக்களின் வாழ்க்கை ஏழைகளின் வாழ்க்கையே" என்றார். அவருடைய பேச்சின் தோரணையைக் கண்டு காந்தியடிகளுக்குத் திருப்தி யுண்டாயிற்று. காந்திஜி சொன்னதாவது:—"ஹோர் அதிகாரத் திமிரில் 'வெட்டொன்று, துண்டிரண்டு' என்று பேசவுமில்லை; தலை சுற்றும்படி ராஜதந்திர முறையிலும் பேசவில்லை. நான் 'என் மனதிலுள்ளதை மறைத்துப் பேச முயலுவேனென்று மட்டும் என்னிடம் எதிர்பாராதீர்கள். ஆனால் சமாதானம் செய்து கொள்வதற்கு எல்லா முயற்சிகளும் நான் செய்தேனென்று உங்களிடம் நற்சாட்சிப் பத்திரம் பெற விரும்புகிறேன்' என்று சொன்னேன். அவர் 'நானும் தங்களிடம் அதேமாதிரி நற்சாட்சிப் பத்திரம் பெற ஆசைகொண்டிருக்கிறேன்' என்றார்."

நான் :—"அப்படியானல் ஹோருடன் நடந்த உங்கள் சம்பாஷணையை நம்பிக்கை தரக்கூடிய தென்று நினைக்கலாமா?"

காந்தியடிகள் (தலையை அசைத்துக்கொண்டு) :—"இல்லை, இல்லை. ஆனல் அவர் இவ்வளவு தூரம் உள்ளத்தைத் திறந்து என்னுடன் பேசுவாரென்று நான் எதிர்பார்க்கவில்லை."

ஸாங்கி பிரபுவையும் ஹோரையும் ஒப்பிட்டுப் பேசினேம். காந்தியடிகள் "அவர் மனதிலும் எனது வார்த்தைகள் நன்கு பதிந்தன. ஆனல் அவர் ஹோரை விட அதிக சாமர்த்தியமும், பெருமிதமும் உள்ளவர்; அவருடைய வார்த்தைகளிலிருந்து அவருடைய மனதை அறிதல் கடினம்" என்ருர். காந்தியடிகள் ஸாங்கிக்கு நல்ல சூடு கொடுத்தார். அவர் சமஸ்தானதிபதிகளைப் பற்றிப் பேச்சு எடுக்கவே காந்தியடிகள், "உங்களுக்கு உண்மை தெரியாதா? மகாநாட்டில் சர்க்கார் சொல்வதே சரியென்று சொல்லுவோரே நிரம்பியிருக்கிருர்கள் என்பதை அறியீர்களா? எந்த மன்னர்களைப் பற்றி நீங்கள் கூறுகிறீர்களோ, அவர்களெல்லாம் சர்க்கார் சொல்லுகிறபடி ஆடுகிறவர்களென்பதும் சொல்ல வேண்டுமா? நான் அவர்களுக்கோ, அவர்களுடைய வார்த்தைகளுக்கோ மதிப்பு அளிக்கமாட்டேன்; உண்மை என்னவென்று உங்களுக்கும் தெரியும்" என்ருர். ஸாங்கியினல் இதற்கு பதில் சொல்ல முடியவில்லை.

காந்தியடிகளின் செல்வாக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. அவருடைய ஜோதியினல் விரோதிகளின் கண்கள் கூசத் தொடங்கிவிட்டன. மகாநாட்டில் ரீடிங் பிரபு அவர் இருந்த இடத்தைத் தாண்டி இரண்டு மூன்று முறை வர நேர்ந்தது; அவர் எழுந்து நின்று காந்திஜியுடன் தனியாகப் பேச வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டார்.

சர்ச்சில் நேரில் வந்து இன்னும் சந்திக்கவில்லை; தம் மகனை அனுப்பி வைத்தார். பத்திரிகைகள் அவரைக் கேலி செய்யத் தொடங்கிவிட்டன. "ஸ்டார்" பத்திரிகை, "நீர் பெரிய வீராதி வீரராயிற்றே! சிங்கங்களை எதிர்ப்பவராயிற்றே! காந்தி உம்மைப் பார்ப்பதற்குத் தயாரா யிருக்கும்பொழுது நீர் ஏன் வாலைச் சுருட்டிக்கொண்டு ஓடுகிறீர்?" என்று எழுதியிருக்கிறது. மகனும் தந்தையைப் போலவே மேதாவி தான்; அபிப்பிராயங்களும் ஒரே மாதிரி. "மகாநாட்டினால் ஒன்றும் பயனேற்படாவிடில்—சமாதானமாகாவிடில்—என்ன செய்வீர்கள்?" என்று அவர் கேட்டார். காந்தியடிகள் "சத்தியாக்கிரகம்" என்று ஒரே வார்த்தையில் பதிலளித்தார். அதற்கு வியாக்யானம் செய்வதுபோல், "சென்ற தடவையைக் காட்டிலும் மிகவும் அதிகமான கஷ்டங்களை அநுபவிக்க நாங்கள் தயாராயிருக்கவேண்டிவரும்" என்றார். மேன் என்பவர் எழுதிய "புராதன கிராம ஸ்தாபனங்கள்" என்ற புத்தகத்தைப் படிக்கும்படி அவருக்குச் சொன்னார். அதிலிருந்து இந்தியர்களிடம் சுயராஜ்யம் நடத்தும் சக்தி எவ்வளவு இருந்தது, இப்பொழுது எவ்வளவிருக்கிறது என்ற விஷயங்கள் தெரியுமென்று கூறினார். சர்ச்சிலுடைய புதல்வர் தம் தகப்பனாரிடம் எல்லா விஷயங்களையும் தெரிவிப்பதாகச் சொன்னார். சர்ச்சில் மனதில் காந்திஜியின் வார்த்தைகள் பதியுமென்றோ, இவரைச் சந்திப்பதனால் அவர் தமது வழியை மாற்றிக்கொள்வாரென்றோ எதிர்பார்ப்பது வீண். அப்படியாயின் காந்தியடிகள் ஏன் சிரமப்படுகிறார்? விஷயமென்னவெனில், அவர் உலகின் அனுதாபத்தைப் பெறும் முறையை நன்கு அறிந்திருக்கிறார். அவரது இந்த வித்தை அபூர்வமானது. "எவன் என்னை தூஷிக்கிறானோ, எனது மகா பெரிய விரோதியோ, அவனையும் சந்தித்துப் பேசுவதற்கு எனக்குச் சம்மதம்" என்று அவர் பறை

சாற்றியாகிவிட்டது. சர்ச்சிலின் மனம் இன்னும் கரையவில்லை. உண்மையில் காந்தியடிகளின் பெயரைக் கேட்டு அவர் பிரமை பிடித்துப் போய் விட்டார். அவர் சந்தித்தாலும் சந்திக்காவிடினும், இந்த தர்ம யுத்தத்தில் காந்தியடிகளின் கட்சிக்கு பலமுண்டாகிவிட்டது.

காந்தியடிகள் இங்கு வந்தவுடனே இர்வின் பிரபுவுக்கு, "நான் வந்து சேர்ந்தேன். எங்கே எப்பொழுது உங்களைச் சந்திக்கலாம்?" என்று கேட்டுத் தந்தி கொடுத்தார். தந்திக்குப் பதில் இர்வின் வெகு அழகாகக் கடிதம் எழுதியிருக்கிறாராம். "நான் வேண்டுமென்றே வட்டமேஜை மகா நாட்டில் கலந்து கொள்ளவில்லை. ஏனெனில் வெளியில் இருந்து கொண்டு அதிக உதவி செய்யலாமென்பது என்னுடைய நம்பிக்கை" என்று எழுதியிருக்கிறாராம். அவர் சீக்கிரத்தில் லண்டன் வரப்போகிறார்.

சிம்லாவிலிருந்து எமர்ஸனும் காந்தியடிகளின் கடிதத்திற்கு மிகவும் திருப்திகரமான பதில் அனுப்பியிருக்கிறார். காந்தியடிகள் அவரை மிகவும் தாக்கி எழுதியிருந்தார்; கண்டித்திருந்தார். "அவருடைய பதில் கவனிக்கத்தக்கது" என்கிறார் காந்தியடிகள். எமர்ஸன் ஒரு தந்தியும் அனுப்பினாராம்; அது என்ன காரணத்தாலோ காந்தியடிகளிடம் வந்து சேரவில்லை.

நான் :—"தங்களுடைய கருத்தை வெளியிட்டு விட்டீர்கள். தாங்கள் விரும்புவதென்னவென்று எல்லோருக்கும் தெரிந்து விட்டது. மேற்கொண்டு என்ன? தாங்கள் அவர்களது பதிலை எதிர்பார்த்துக் கொண்டு காத்திருப்பீர்களா? அல்லது பதில் கிடைக்காவிடினும் கமிட்டியின் காரியங்களில் கலந்து கொள்வீர்களா?"

காந்தியடிகள் :—" கமிட்டியின் நடவடிக்கைகளில் கலந்து கொள்வேன். காங்கிரஸினுடைய மூலக் கொள்கையுடன் சம்பந்தமுள்ள பிரச்னை ஏதாவது எழுந்து, காங்கிரஸின் கருத்தை விளக்குவது அவசிய மென்று கண்டால், நான் என் அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்வேன். உதாரணமாக, வாக்குரிமை விஷயத்தைக் குறிப்பிடலாம். முக்கியமில்லாத விஷயங்களைப் பற்றிப் பேசும் எண்ணம் எனக்கில்லை. இவ்விதம் நான் நடவடிக்கைகளில் கலந்து கொள் வதை ஸாங்கி விரும்பவில்லை போல் தோன்றுகிறது. நடவடிக்கைகளில் கலந்து கொள்வோருடைய பெயர் களை அவர் எழுதிக் கொண்ட பொழுது நானுகவே என் பெயரையும் சேர்த்துக் கொள்ளச் சொன்னேன். நான் அவர் பக்கத்தில் உட்கார்ந்திருந்தும் அவர் இதைப் பற்றி என்னிடம் பிரஸ்தாபிக்காததால் அவ ருக்கு நான் கலந்து கொள்வதில் விருப்பமில்லை என்று ஊகித்தேன். என் பெயரை எழுதிக் கொள்ளச் செய்த பிறகு நான் அவரிடம், 'எல்லோரும் பேசிய பிறகு கடைசியில் எனக்குப் பேச இடம் கிடைத்தால் போதும்' என்று சொன்னேன்."

நான் :—" தாங்கள் ஒன்றும் பேசாமலிருக்கும் விஷயங்களில் 'மௌனம் ஸம்மத லக்ஷணம்' என்று கருதப்படலாமல்லவா ?"

காந்தியடிகள் :—" கிடையவே கிடையாது. ஒவ் வொரு முடிவையும் நான் ஏற்றுக் கொண்டதாக அர்த்தமில்லை என்பதைத் தெளிவாகச் சொல்லி விடுவேன்."

நான் :—" அவர்கள் காலங் கடத்திக் கொண்டே யிருந்தால், அவர்களுடைய முடிவுக்காகக் காத்திருப் பீர்களா ?"

காந்தியடிகள் :—"அவர்கள் என்ன பதில் சொல் வார்களென்று எனக்குச் சில தினங்களிலேயே

தெரிந்து விடும். அவர்கள் நம்மைச் சிறு விஷயங்களில் சிக்கவைத்துக் காலத்தைக் கடத்த விரும்பினுல், நான் சும்மா இருப்பேனு? நானும் கடிவாளத்தை இழுக்க ஆரம்பித்து விடமாட்டேனு?"

இன்று காந்திஜி செய்த உபந்நியாசத்தைக் குறிப்பிட்டு, "பிரசங்கத்துக்காக முன்னதாகவே ஏதேனும் ஆயத்தம்செய்து கொண்டீர்களா?" என்று கேட்டேன்.

காந்தியடிகள் :—"இல்லவே இல்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில் பேசுவதற்கு முன் சிறிது ஆயத்தம் செய்ய வேண்டும், யோசித்து வைக்க வேண்டும் என்று எனக்கு விருப்பம் இல்லாமலில்லை. ஆனுல் சமயந்தான் கிட்டவில்லை. நேற்றிரவு தடைக்குப் பின் தடையாக ஏதாவது வந்துகொண்டே யிருந்தது. இன்று காலையிலும் இரு கனவான்கள் பார்க்க வந்து விட்டார்கள். ஹோரைப் பார்க்க இந்தியா மந்திரி காரியாலயத்திற்குப் போகும் பொழுது வழியில் யோசிக்கலாமென்று எண்ணியிருந்தேன். வண்டியில் ஆண்ட்ரூஸ் கூட இருந்தார்; வழி எல்லாம் ஏதேதோ பேசிக்கொண்டே சென்றேம். இந்தியா மந்திரி காரியாலயத்திற்குக் குறிப்பிட்ட நேரத்திற்கு 20 நிமிஷம் முன்னரே போய்விட்டேன். (நேற்று காந்தியடிகள் மகாநாட்டிற்குப் போவதில் சிறிது தாமதம் ஆகி விட்டது. வழியில் கூட்டம் அதிகமாயிருப்பதால் வண்டி நின்று நின்று போக வேண்டியிருந்தது. ஆகையால் இன்று முன்னதாகவே கிளம்பி விட்டார்). அங்கேயும் சிந்தனை செய்ய முடியவில்லை. ஹோரினுடைய இரு காரியதரிசிகள் வந்து விட்டனர். அவர்களுடன் பேச்சு நடந்தது. 'காங்கிரஸின் பிரதிநிதி என்ற ஹோதாவில் நான் பேச வேண்டும்; அதைப் பற்றிச் சிறிது சொல்ல வேண்டியதவசியம்' என்று மட்டும் யோசனை செய்திருந்தேன். என்னுடைய முன் ஆயத்தம் எல்லாம் இவ்வளவு தான்."

நான் :—"சிறிதும் முன்னேற்பாடு செய்யாமல் இத்தகைய அற்புதமான உபந்யாசம் செய்ய முடிந்தது கடவுளின் கடாக்ஷத்தினுல் என்றே சொல்ல வேண்டும்."

காந்தியடிகள் :—உண்மைதான். இர்வின் பிரபுவுடன் ஒப்பந்தம் முடிந்த பிறகு நான் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்குத் தந்த அறிக்கையும் சரி, இங்கு வந்து சேர்ந்த அன்று நான் செய்த பிரசங்கமும் சரி, அன்று அமெரிக்காவுக்கு நான் அளித்த செய்தியும் சரி—இவைகளில் ஒன்றின் பொருட்டும் நான் முன்னதாகச் சிந்திக்கவோ, ஏற்பாடு செய்யவோ முடியவில்லை. அந்தந்த சமயத்தில் என் உள்ளத்தில் என்ன உதித்ததோ, அதையே ஒப்பித்தேன். இதெல்லாம் பகவானுடைய அருளின் மகிமைதான்."

மேலே நடக்கப்போவது என்னவோ, ஆண்டவனுக்குத்தான் தெரியும்; ஆனுல் சகுனம் மட்டும் நன்ருய்த் தானிருக்கிறது. பிரதம மந்திரி இதுவரை நம்பிக்கை யளிக்கக் கூடியதாய் ஒன்றும் செய்யவில்லை. ஆனுல் காந்தியடிகள் கூறியபடி அவருக்குள்ள செல்வாக்கு பூஜ்யமென்று சொல்லலாம். பத்திரிகைகளில் "மான்செஸ்டர் கார்டியனை"ப் போல் உண்மையாகவும், அனுதாபத்துடனும் வேறு ஒரு பத்திரிகையும் எழுதவில்லை; அதுவும் கூட காந்தியடிகள் 'லங்கோட்டை' விட்டு விட்டு கால்சட்டை அணிகிருர் என்று பிசகாக எழுதியிருக்கிறது! காந்தியடிகள் இதைக்கேட்டுச் சிரித்தார். "டெய்லி மெயில்" காந்தியடிகளை 'முரட்டுப் பிடிவாதக்காரர்' என்று எழுதிக்கொண்டே யிருக்கிறது; ஆனுல் அந்தப் பத்திரிகையும் அவரிடமிருந்து "நான் விரும்புவதென்ன?" என்ற தலைப்புடன் 3000 சொற்களுள்ள ஒரு கட்டுரைவேண்டித் தந்தி யடித்தது. அவர் அனுப்புகிறபடி ஒரு எழுத்துக் கூட மாற்ருமல் பிர

சுரிப்பதாகவும் வாக்குத் தந்திருக்கிறது. தற்சமயம் வேலே மிகுதியா யிருப்பதாகவும் ஓய்வு கிட்டியதும் எழுதி யனுப்புவதாகவும் காந்திஜி பதில் அனுப்பி யிருக்கிருர்.

[15]

போலீஸின் கவலை

லண்டன்

17—9—31

நேற்றிரவு காந்தியடிகளை மீண்டும் பார்த்தேன். மான்செஸ்டருக்குத் தம்முடன் வரும்படி அழைத்தார். வர்த்தக சங்கத்தின் பிரதிநிதித்துவத்தைப் பற்றி என்ன நடக்கப் போகிறதென்று பம்பாயிலிருந்து தந்தி வந்திருப்பதைத் தெரிவித்தேன். “பிரதம மந்திரியிடம் சொல்லலாமென்றிருக்கிறேன். ஆனால் நான் இருப்பது முதலில் நிலைக்கட்டும். பிறகு சொல்லிப் பயனுண்டு. நானே திரும்பி விடுவதாயிருந்தால், சொல்லி என்ன லாபம்?” என்றார்.

காந்தியடிகளுடைய சரீரப் பாதுகாப்பின் பொருட்டு இரகசியப் போலீஸார் நிறைய நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நேற்றிரவு அவர்கள் வந்து, “உங்களுக்கு ஒரு கவலையுமில்லை; ஆனால் இங்கிலாந்தில்

இருக்கும்போது உங்களுக்கு ஒரு சிறிது தீங்கு நேரிட்டாலும் எங்களுக்குத்தான் பெருத்த அவமானம். ஆகையால் தயவுசெய்து தாங்கள் போகுமிடங்களை எங்களுக்குத் தெரிவித்து வையுங்கள்; உங்களைப் பின் தொடர்ந்து வர எங்களுக்கு அனுகூலமா யிருக்கும்" என்றார்கள். இந்தியா மந்திரியும் தம்மிடம் இவ்விதமே கூறியதாக காந்தியடிகளும் கூறினர். ஆகவே தாம் போகும் இடத்தை அவர் முன்னமே ரகசியப் போலீஸுக்குத் தெரிவித்துவிடுகிறார்.

ஒரு கிராமபோன் கம்பெனியார் காந்தியடிகள் உபதேசத்தை ஒலிப்பதிவு செய்ய விரும்புகிறார்கள். இதைப் பற்றி மிகுந்த தர்க்கம் நடந்தது.

நீதி தர்மத்தின்படி சரியா, தவறா என்று பிரமாத மான வாதம். கடைசியில் வேண்டுகோள் மறுக்கப் பட்டது. சில தினங்களுக்குப் பின் மேலும் தர்க்கங்கள் நடந்த பின்னர், காந்திஜி ஒலிப்பதிவு செய்ய ஏற்றுக் கொண்டார்.

ஸர் ரெஜினல்ட் கிளார்க், "மான்செஸ்டருக்கு ரொட்டித் துண்டை எறியுங்கள். இந்தியாவிலுள்ள ஆங்கில வியாபாரிகளைத் திருப்தி செய்து விடுங்கள்; உங்கள் வேலை சீக்கிரம் முடிந்துவிடும்" என்றார். ஆனால் அவர்களைத் திருப்தி செய்வதெப்படி என்பதே கேள்வி. அவர்கள் கற்கண்டு கேட்கிறார்கள். நாம் கற்கண்டு என்று வாயால் சொல்வதினாலேயே அவர்களது நாக்குக்கு இனிப்பு வந்து விடுமா?

[16]

இந்தியாவின் கோரிக்கை

லண்டன்

24—9—31

நேற்றிரவு காமன்ஸ் சபை மண்டபத்தில் காந்தியடிகளின் பிரசங்கம் நடைபெற்றது. பலதிறத்தாரும் வந்திருந்தார்கள். சுமார் 200 பேர் கூட்டம்; அவர்களில் பார்லிமெண்டு அங்கத்தினர் 150 பேர் இருக்கலாம். பல வாசல்களைக் கடந்து நாங்கள் சபா மண்டபத்தை யடைந்தோம். காந்தியடிகள் தமது பிரசங்கத்தில் சொன்னதாவது: "நாங்கள் என்ன கோருகிறோம், அதை எதற்காகக் கோருகிறோம் என்பதை ஒரு தடவையல்ல—பல தடவையும் சொல்லியிருக்கிறேன். நாங்கள் பூர்ண சுயராஜ்யத்தில் தான் திருப்தியடைவோம். அதற்கு, நாங்கள் தனிக் குடித்தனம் போய்விடுவோம் என்று அர்த்தமல்ல. நாங்கள் உங்களுடன் சம பங்காளிகளாக இருக்க

விரும்புகிறோம்; அடிமைகளாயிருக்க விரும்ப வில்லை. எங்களிஷ்டப்படி நடக்க எங்களுக்கு உரிமை வேண்டும். உங்களுடனிருப்பதில் நன்மையுள்ளவரையில் உங்களுடன் சேர்ந்தேயிருப்போம்; வேறுவிதமாக நேர்ந்தால் சம்பந்தத்தை அறுத்துவிடுவோம். சென்ற வட்டமேஜை மகாநாட்டில் பாதுகாப்புகள் ரொம்பவும் வலியுறுத்தப்பட்டன; அதில் தீர்மானிக்கப்பட்ட ஆட்சி முறை குடியேற்ற நாட்டந்தஸ்துமல்ல, வேறு எந்தவிதமான சுதந்திர ஆட்சி முறையுமல்ல. சேனையையும், அயல்நாட்டு அரசியல் சம்பந்தத்தையும் நீங்கள் உங்கள் கையிலேயே வைத்துக்கொள்ள விரும்புகிறீர்கள். பொருளாதார விஷயத்திலும் பாதுகாப்புக் கோருகிறீர்கள். இவ்வளவுக்கும் பிறகு நீங்கள் கொடுக்கப்போவதற்கு மதிப்புத்தான் என்ன? சைனியம் இந்தியாவைப் பாதுகாப்பதற்கே இருக்குமென்கிறீர்கள்; உண்மையில் இந்தியாவைப் பராதீனத்திலேயே இருத்திக் கை கால்களை அசைக்கவிடாதிருப்பதே சைனியத்தின் வேலையாயிருக்கும். ஆங்கிலேயர்களை வெளியேற்றி விடவேண்டுமென்று ஒருநாளும் நாங்கள் விரும்பவில்லை; ஆனால் அவர்கள் எங்கள் எஜமானர்களாயிராமல், ஊழியர்களாயிருக்க வேண்டுமென்று நிச்சயமாய் விரும்புகிறோம்."

* * *

இங்கிலாந்து கடைசியில் தங்க நாணய விகிதத்தை விட்டு விட்டது. இந்தியாவும் தங்கத்திலிருந்து விலகி விட்டதென்றாலும், ஸ்டார்லிங்குடன் அது இன்னும் பிணைக்கப்பட்டிருக்கிறது. சிம்லாவில் ஷுஸ்டர் ஒன்று சொன்னார்; பெடரல் கமிட்டியில் ஹோர் வேறென்று சொன்னார்! அங்குள்ளவர்கள் மனமறிந்து முதுகுக்குப் பின்னால் பேத்து மாத்து செய்திருக்கிறார்கள். காந்தியடிகள் அதைப்பற்றி வெளி

யிட்ட அபிப்பிராயம் எனக்கு அவ்வளவு பிடிக்க வில்லே. நான் சொன்னதற்காக அவர் தம் அபிப் பிராயத்தில் சிறிது மாற்றிக்கொண்டார். இரவில் இதைப்பற்றி மீண்டும் பேச்சு நடைபெற்றது. "தாங்கள் இத்தகைய விஷயங்களில் ஆலோசனேயே செய்யாமல் ஏதாவது சொல்லி விடுகிறீர்களே, இது சரியா?" என்றேன். வாதம் வளர்ந்து விட்டது. "நான் சொன்னதற்கு நீ செய்யும் அர்த்தம் ஏற் படவே ஏற்படாது. வக்கீல் தொழிலில் உள்ள நல்ல அம்சங்களே யெல்லாம் நான் கிரஹித்துக் கொண் டிருக்கிறேன். ஒரு வார்த்தையாவது நான் அகப் பட்டுக் கொள்ளக் கூடியதாகச் சொல்ல வில்லேயே" என்ருர். இனிமேல் இதுபோன்ற விஷயங்களேப் பற்றி ஆலோசனே கேளாமல் ஒன்றும் சொல்வதில்லே யென்று முடிவாயிற்று.

இந்தியா மந்திரியிடமிருந்து கடிதம் வந்தது; அதற்குப் பதில் அனுப்பியாகிவிட்டது.

எனக்கெதிராக நல்ல பிரசாரம் நடந்திருக்கிறது. இதனுல் என்னிடம் அவநம்பிக்கை ஏற்பட்டிருக் கிறது. மகாநாட்டின் பிரதிநிதியாக நியமிக்கப்பட் டதிலிருந்து பிரமுகர்களேச் சந்தித்தல் அதிகரித்திருக் கிறது.

பண்டித அமரநாத் அடலேக் கண்டேன். இங்கு எதிர்பாராமல் சந்திப்பு ஏற்பட்டது. இவ்வாரத்தில் லோதியன், பென் இருவரையும் சந்தித்தேன். சுவா ரஸ்யமாகப் பேச்சு நடந்தது. ஆனுல் பேச்சினுல் காரியம் என்ன ஆகிறது?

பண்டித்ஜியின் உடம்பு சௌக்கியமாயிருக்கிறது.

அன்று விட்டல்பாய் படேல் காந்தியடிக ளிடம் வந்து, "பெடரல் கமிட்டியில் தாங்கள் செய்த பிரசங்கத்தைப் படித்து எனக்கு மூர்ச்சை

போட்டு விட்டது. நீங்கள் என்ன இப்படிப் பேசினீர்கள்?" என்ருர். காந்தியடிகள் "நான் ஒரு சார்லி சாப்ளினைப் பற்றித்தான் கேள்விப்பட்டிருக்கிறேன். நம்மூரிலும் ஒரு சார்லி சாப்ளின் இருக்கிருர் என்று இதுவரை தெரியாது. உங்களுக்கு என் பேச்சுப் பிடிக்காவிட்டால் எனக்குக் கொடுத்திருக்கும் வக்காலத்தை ரத்து செய்து விடுங்கள்" என்ருர்.

காந்தியடிகளின் விஷயங்கள் விசித்திரமானவை தான். அன்று, "குழந்தைகளுடன் விளையாடுவதிலுள்ள இன்பம், எனக்கு வட்டமேஜை மகாநாட்டில் கலந்துகொள்வதில் இல்லை" என்ருர். ஏழைகளின் கூட்டமே காந்தியடிகளுக்கு வட்டமேஜை மகாநாடாகும்.

[17]

திரையுள் நாடகம்

லண்டன்

30—9—31

காந்தியடிகள் மான்செஸ்டரிலிருந்து திரும்பி வந்தார். அங்கு அவர் விஜயத்தினால் நல்ல பலன் ஏற்பட்டது.

ஹிந்து-முஸ்லிம் பிரச்னை இன்னும் தீர்ந்தபாடில்லை; தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையும் குறைவுதான். திங்களன்று (28-9-31) சிறுபான்மை சமூகக் கமிட்டியின் கூட்டம் நடந்தது. பிரதம மந்திரி அதில் பிரதிநிதிகளைக் கீழ்க்கண்ட வரிசையில் உட்கார வைத்தார். முதலில் ஸ்ரீமதி நாயுடு, பிறகு காந்தியடிகள், பிறகு மாளவியாஜி, அதன் பிறகு நான்.

பிரதம மந்திரியின் பேச்சு எனக்குப் பிடிக்கவில்லை. அதில் நேர்மையில்லை. முகஸ்துதி தாராளமா

யிருந்தது. நமது வேதாந்த சாஸ்திரங்களை வேண்டியமட்டும் புகழ்ந்தார்; பகட்டு வார்த்தைகளைத் தவிர வேறு விஷயமொன்றுமில்லை. சபை கலைந்த பின்னர், காந்தியடிகளின் முன்னிலையில் கை கூப்பிக்கொண்டு, அவர், "தங்களுடைய ஆசிரமத்திற்கு ஒரு தடவை வந்து எனது பாபங்களைப் போக்கிக் கொள்ளவேண்டும்" என்றார். கூட்டத்தை இரண்டு நாள் ஒத்தி வைக்க வேண்டுமென்று மாளவியாஜி முதன் முதலில் பிரேரேபித்தார். அவகாசம் கிடைத்தது; ஆனால் ஒருவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. காந்தியடிகளுக்கும் ஆகாகானுக்குமிடையில் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் இதற்கும் கமிட்டியில் அவகாசம் கிடைத்ததற்கும் ஒன்றும் சம்பந்தமில்லை. சில 'பிரதிநிதி'களின் மனோபாவம் நமக்கு லஜ்ஜை உண்டாக்குகிறது. இவர்களில் சிலர் கல்லுளிமங்கனைப் போல் வைது பிச்சை கேட்கிறார்கள்; சிலர் யாசகனைப் போல் கெஞ்சிப் பிச்சை கேட்கிறார்கள். இவர்கள் எல்லாரும் சர்க்கார் ஆட்கள் என்பதும், எஜமான் சொல்லுகிறபடி ஆடுவதே இவர்களுடைய தொழில் என்பதும் உண்மையே! ஆனாலும், ஒட்டன் தொம்பன் மாதிரி இவர்களுக்குள்ளேயே அடித்துக் கொள்ளுவது அவமானமாயிருக்கிறது.

ஹிந்து—முஸ்லிம் பிரச்னையைப் பற்றி காந்தியடிகளுக்கும் ஆகாகானுக்கும் மூன்று, நாலு மணி நேரம் பேச்சு நடைபெற்றது. "அன்ஸாரியைக் கூப்பிடுங்கள்" என்ற பழைய பல்லவியையே காந்திஜி பாடுகிறார். "அன்ஸாரி சொல்வதை நான் ஒப்புக் கொள்கிறேன்; தேசம் ஒப்புக்கொள்வதற்கும் எல்லா முயற்சியும் செய்வேன்" என்று வாயாலும் சொல்லி, காகிதத்திலும் எழுதிக்கொடுத்திருக்கிறார். அப்பொழுது எல்லோருடைய கழுத்தும் அன்ஸாரி

யின் கையிலிருக்கிறது. அதில் ஒன்றும் கவலைக் கிடமில்லை" யென்கிறார் காந்திஜி. அன்ஸாரிக்கு இவ்வளவு மதிப்பு ஏன்? என்று முஸல்மான்கள் காந்தியடிகளிடம் கோபம் கொண்டிருக்கிறார்கள். அன்ஸாரியை அழைக்கப் போவதென்னமோ இல்லை; ஆனால் பேச்சு முறிந்து விடாதுஎன்றும் தோன்றுகிறது. முறிந்தாலும் நமக்கு ஒன்றும் தீங்கில்லை. இன்று மீண்டும் காந்தியடிகள் முஸ்லீம்களைச் சந்தித்துப் பேசப்போகிறார். ஆங்கிலேயரைக் கொண்டு மத்தியஸ்தம் செய்து வழக்கைத் தீர்த்துக் கொள்ளலாமென்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். பண்டித்ஜியும், காந்தியடிகளும் அதற்கு சம்மதப்பட வில்லை. அவர்கள் சம்மதப்படாததும் நியாயம்தான். மத்தியஸ்தத்தை ஒத்துக் கொண்டால் நமது பலவீனமே ஸ்தாபிதமாகும். சுயராஜ்யமடையத் தகுதியற்றவர்களாகி விடுவோம்.

மார்லேயைச் சந்தித்தேன். இவர் பார்லிமெண்டு அங்கத்தினர். ஒன்றும் நடைபெறப் போவதில்லையென்றும், பேச்சுப் பேசிவிட்டு அனுப்பி விடுவார்கள் என்றும் அவர் சொன்னார். புதிய தேர்தலில் 'கன்ஸர்வேடிவ்'கள் அதிகம் பேர் வருவார்கள் என்றும், அவர்கள் கடுமையாக அடக்கு முறையைக் கையாளுவார்கள் என்றும் அவர் கருதுகிறார். நான் கேட்டதற்கு, "அவசியமிருந்தால், இங்கிருந்து பணமும் படையுங் கூட அனுப்பப் படலாம்" என்று பதில் கூறினார். ஆசிரியர் ஹெரால்டு லாஸ்கியின் (லண்டன் சர்வகலாசாலையின் அரசியல் சாஸ்திர போதகாசிரியர் ஹெரால்டு லாஸ்கி) அபிப்பிராயம் வேறு. இவ்விடத்திய சேனை அத்தகைய வேலையின் பொருட்டு அதிக காலம் வரையில் அங்கிருக்க முடியாது என்கிறார் அவர். லாஸ்கியுடன் பொருளாதார விஷயமாக வெகுவாகப் பேசிக் கொண்டிருந்தேன். நமது ராஜீயப் பிரச்னையைப் பற்றியும் பேசினோம். ஒன்றுய்

நடைபெறப் போவதில்லையென்பதே அவருடைய கருத்தும். இங்கே பயங்கரமான நிலைமை ஏற்படப் போகிறதென்றும் லாஸ்கி நினைக்கிறார். நேற்று தொழிலாளிகளின் பெரிய ஊர்வலம் கிளம்பிற்று; போலீஸார் அதைத் தடிகொண்டு தாக்கினர். பொது உடமைக் கட்சி வலுவடைந்து கொண்டிருக்கிறது.

ஹிந்து—முஸ்லிம் பிரச்னை விஷயமாக பண்டித் ஜியிடம் பேசி அவரைத் திருப்தி செய்யும்படி நேற்று காந்தியடிகள் சொன்னார். நான், "தங்களுடைய அந்தராத்மாவுக்கு உகந்ததைச் செய்யுங்கள்; பண்டித்ஜியும் ஒத்துக்கொள்வார்" என்றேன்.

நேற்று இந்தியா மந்திரியுடன் காந்தியடிகள் மூன்று மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார். காந்தியடிகள் அவரிடம், "காலத்தை வீணாக்க வேண்டாம்; சுதந்திரம் கொடுக்கும் எண்ணம் இருந்தால், சொல்லுங்கள்; இல்லாவிட்டால் எங்களைத் திருப்பி அனுப்பிவிடுங்கள். இதனால் எனக்கு வருத்தமுண்டாகாது. ஆனால் காலத்தை வீணாக்கினால் எனக்கு வருத்தமுண்டாகும்" என்றார். "தங்களை வீணில் தாமதிக்கச் செய்யமாட்டேன்" என்றார் ஹோர்.

மகாநாட்டில் ஒன்றும் முடிவாகாது என்று அவரும் எண்ணுகிறார். சின்னக் கமிட்டி நியமிக்க வேண்டுமென்று அவர் பிரஸ்தாபித்ததும் காந்தியடிகள், "மகா நாட்டில் ஒன்றும் முடிவாகாதென்று எனக்கு முன்பே தெரியும். நீங்கள் அழைத்ததினால் நான் இதில் கலந்து கொள்கிறேன். ஆனால் கமிட்டியில் கலந்து கொள்வதற்கு முன், நீங்கள் எவ்வளவு தூரம்போகத் தயாராயிருக்கிறீர்களென்பது தெரிய வேண்டும். மூல தத்துவங்களை நாம் நிர்ணயித்துக் கொண்டு விட்டால், மற்ற விஷயங்களைப் பின்னர் பேசிக்கொள்ளலாம்" என்று கூறினார்.

ஹோர்:—நான் முதலில் இர்வினுடன் பேசுகிறேன். உங்களைப் போல் தான் எங்களுக்கும் லக்ஷியம் இருக்கிறது. ஆனால் நீங்கள் நினைப்பது போல் நாங்கள் இந்தியாவில் அவ்வளவு தீங்குகள் செய்திருக்கவில்லை. நாங்கள் கொஞ்சம் நன்மையும் செய்து தான் இருக்கிறோம். தற்போதைய நிலைமையில் சேனையையும் பொருளாதாரத்தையும் உங்களிடம் எப்படிக் கொடுக்க முடியும்?

காந்தியடிகள்:—கெட்டதையும் நல்லதென்று எண்ணுவது மனிதனுடைய வழக்கம். தற்சமயம் எதை நீங்கள் லக்ஷியமென்று கருதுகிறீர்களோ அதைக் குட்டுப் படுவதற்கு முன்னால் மறக்கமாட்டீர்கள்.

ஹோர்:—இவ்விதம் நேரிடுவதும் உண்டு என்று நான் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால் எங்களுடைய லக்ஷியம் பொய்யல்ல வென்று நாங்கள் இப்பொழுது நம்புகிறோம்.

காந்தியடிகள்:—நாணயச் செலாவணி, நாணய மாற்று இவைகளைப் பற்றி முடிவு செய்யு முன்னர், எங்கள் தேசத்து விற்பன்னர்களை அழைத்து ஏன் நீங்கள் கலந்து கொள்ளவில்லை?

ஹோர்:—அது தவறு என்று ஒத்துக் கொள்ளுகிறேன்.

* * *

ஹோர் தம்முடைய தவறுக்குப் பரிஹாரமாக, இத்தேசத்தின் பிரசித்திபெற்ற பொருளாதார நிபுணரான ஹென்ரி ஸ்ட்ராகோஷுக்கு என்னை அறிமுகப் படுத்தப் போகிறார். ஹோருக்குப் பொருளாதார விஷயத்தில் ஆலோசனை சொல்கிறவர் இவர் தான். எங்கள் இருவருக்கும் தர்க்கம் நடைபெறும். காந்தியடிகள் அதைக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு சர்க்கார் செய்தது சரியா, தவறா என்று தீர்மானிப்

பார். வரும் செவ்வாய்க்கிழமை இந்த விவாதத்தை நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஹோர் தமது நண்பர்கள் இரண்டொருவரையும் அழைத்து வருவார். இந் நண்பர்களில் ஸர் மாணிக்ஜி தாதாபாய் போன்றவர்கள் இருக்கலாம். உண்மையில் எங்கள் இருவருக்கு மிடையில் மல் யுத்தந் தான் நடக்கப் போகிறது. ஆனல் அவர் என்னை எவ்விதத்திலும் தோற்கடிக்க முடியாதென்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

நேற்று பெந்தலுக்கும் (Sir Edward Benthall) காந்தியடிகளுக்கும் பல விஷயங்களைப் பற்றிப் பேச்சு நடந்தது. அவர் என்னைப்பற்றி "முன் கோபக்காரன்" என்று கூறினராம். "பிர்லா சொல்வதை நீங்கள் கேட்கிறீர்கள்" என்றும் சொன்னராம்.

இதற்கு காந்தியடிகள், "நான் ஒருவர் சொல்வதையும் சுலபமாகக் கேட்பதில்லை" என்று பதிலளித்தாராம். பெந்தல் என்னை செவ்வாய்க்கிழமை அழைத்திருக்கிருர். என்ன நடக்கிறதோ பார்க்கலாம்.

இன்று பிரதம மந்திரியை காந்தியடிகள் சந்தித்தார். சுவாரஸ்யமாகப் பேச்சுக்கள் நடைபெற்றன. காந்தியடிகளுக்கு ஹோரைப் பற்றி ஏற்பட்ட நல்ல அபிப்பிராயம் பிரதம மந்திரி விஷயத்தில் ஏற்படவில்லை. அவர் காந்தியடிகளிடம், "என்ன கொடுக்கப் போகிறீர்கள் என்று அடிக்கடி எங்களைக் கேட்கிறீர்களே! என்ன எடுத்துக் கொள்ளும் சக்தி உங்களிடம் இருக்கிறது? சொல்லுங்கள்!" என்று கேட்டாராம்.

காந்தியடிகள் :—"எனக்கு சவால் விடுக்கிறீர்களாக்கும்! நான் ஏன் இங்கு வந்திருக்க வேண்டும்? அங்கு இருந்தபடியே எல்லாம் எடுத்துக்கொண்டி

ருக்க மாட்டேனு? இன்று என்னைத் திருப்பி அனுப்பி விடுங்கள். எனக்கு வேண்டியதை நானே எடுத்துக் கொள்ளுகிறேன். மகாநாட்டை உங்கள் ஆட்களைக் கொண்டு நிரப்பிவிட்டீர்கள். என்னை உங்கள் பிரதிநிதியாகச் செய்து இந்தியாவிற்கு அனுப்புங்கள்; எத்தகைய உடன் படிக்கையும் நடைபெறுமல் செய்யக் கூடிய நூறு பேரைக் கொண்டு வருகிறேன். உங்கள் மகாநாட்டில் தீண்டாதாரின் பிரதிநிதிகளென்று வந்திருப்பவர்களை யார் தேர்ந்தெடுத்தார்கள்? தீண்டாதாருடைய உண்மையான பிரதிநிதி நான் தான் என்று உரிமை கொண்டாடுகிறேன். யார் யாரையோ கூட்டி வைத்துக்கொண்டு என்னுல் எவ்வளவு எடுத்துக்கொள்ள முடியுமென்று சவால் விடுக்கிறீர்கள். 'உங்கள் உள்ளம் சுத்தமாக இருந்தால் நாங்களே எங்கள் சச்சரவுகளைத் தீர்த்துக் கொள்வது என்ற நிபந்தனையுடன் எங்களுக்கு சுயராஜ்யம் கொடுங்கள்; பிறகு எங்கள் சச்சரவுகளை நாங்களே தீர்த்துக் கொள்ளுகிறோமா, இல்லையாவென்று பாருங்கள்."

இந்த மாதிரி காந்திஜி சுடச் சுடப் பேசவே, பிரதம மந்திரி திக்குமுக்காடிப்போனுர். "நம் இருவருக்கும் சிரமங்கள் இருக்கின்றன" என்ருர்.

காந்தியடிகள், "எனக்கு ஒன்றும் சிரமமில்லை; உங்களுக்கிருக்கலாம்" என்ருர்.

லாபமொன்றும் உண்டாகாவிடினும் காந்தியடிகள் குதூஹலமாயிருந்தார். இங்குள்ளவர்கள் காந்தியடிகளுடன் சண்டையை விலைக்கு வாங்கிக்கொள்ளும் அசட்டுத்தனத்தைச் செய்யமாட்டார்களென்பது என் கருத்து. இவர்களுடைய மனம் சுத்தமில்லை; ஆனுல் இங்குள்ள நிலைமை நாளுக்கு நாள் அடைந்துவரும் சீர்கேட்டை நோக்கும் பொழுது

மகாநாடு உடைந்து போக விட மாட்டார்களென்று தோன்றுகிறது. புதனன்று ஸாங்கி சந்தித்துப் பேசுவார் என்று லாஸ்கி சொன்னார். ஸாங்கிக்குப் பதிலாகப் பிரதம மந்திரியே வந்தார். நாளை பண்டித்ஜிக்கும் அவருக்கும் பேச்சு நடைபெறும். ஆனால் விஷயம் அம்பலத்திற்கு வராமல் தீர்ந்து விடப் போவதில்லை. காந்தியடிகள் சீக்கிரத்திலேயே அத்தகைய நிலைமையை உண்டாக்கி விடலாம்.

நாணய மாற்று விஷயம் இன்னும் முடிந்தபாடில்லை. ஒவ்வொரு தேசமாகத் தங்கத் திட்டத்தைக் கைவிட்டு வருகிறது. இதன் பயனாகக் கொடுக்கல் வாங்கல்கள் குறைந்து விட்டன. கடன் பட்டவர்களுடைய கடனும் சரி, முதலாளிகளின் முதலும் சரி, குறைந்துவிட்டது. நிலைமை சீர்கேடுதான்; இப்போதைக்குத் திருந்துமென்று தோன்றவில்லை.

இரகசியப் போலீஸ்காரர்கள் தவறாமல் காந்தியடிகளுடன் அவருடைய பாதுகாப்புக்காகச் செல்கிறார்கள். அவருடைய வண்டிக்கு முன்னால் போலீஸ் வண்டி போகிறது. எங்கே கூட்டமாயிருக்கிறதோ, அங்கே போலீஸ் வண்டியின் மணி அடிக்கிறது; உடனே போலீஸ்காரர்கள் ஜனங்களை விலக்கி வழி விடுகிறார்கள்.

[18]

பழைய பல்லவிதான்

லண்டன்

1—10—31

இன்று சிறுபான்மைக் கமிட்டியின் கூட்டம் மீண்டும் நடந்தது. நேற்று முஸ்லீம்களிடம் காந்தியடிகள், "தற்பொழுதைய நிலைமையில் ஒப்பந்தம் செய்வதென்பது என் கையிலில்லை. ஒன்றும் நடைபெருவிடில் நான் மகாநாட்டை விட்டு விலகிச் செல்லுகிறேன்" என்று தெளிவாகச் சொல்லி விட்டார். இதன் பிறகு அவர்கள், "ஒப்பந்தம் செய்வதற்காக ஒரு சிறிய கமிட்டி நியமிக்கலாம்; அதனுல் ஏதாவது செய்ய முடியுமாவென்று பிரயத்தினம் செய்து பார்க்கலாம்" என்ருர்கள். ஆகையால் ஒரு வாரத்திற்குக் கமிட்டியின் நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. ஒப்பந்தக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. என்னையும் ஒரு அங்கத்தினனுக்கி யிருக்கிருர்கள்.

இந்தக் கமிட்டிகளினுல் ஒன்றும் நடைபெறப் போவதில்லை. நான் காந்தியடிகளிடம், "இம்மாதிரி எவ்வளவோ கமிட்டிகள் இதற்குமுன் கூடியிருக்கின்றனவே? இதற்கு ஏன் மறுபடியும் தாங்கள் ஒத்துக்கொண்டீர்கள்? அன்ஸாரியில்லாமல் தாங்கள் அணுவளவும் கூட்டிக் குறைக்கச் சம்மதிக்கப்போவதில்லை. மற்றவர்களுடன் உலகம் முடியும் வரையில் பேசினுலும் ஒப்பந்தம் எதுவும் ஏற்படப்போவதில்லை" என்று கூறினேன்.

"இந்தக் கமிட்டி என்னைத் தலைகுனியச் செய்யவே ஏற்பாடாகி யிருக்கிறது; இது தெரிந்திருந்தும் நான் இதை நடத்துவிக்க ஒப்புக் கொண்டிருக்கிறேன். இதனுல் எனக்கு ஒன்றும் நஷ்டமில்லை. யார் ஒப்பினுலும், ஒப்பாவிட்டாலும் கடைசியில் நான் எனது தீர்மானத்தைச் சொல்லிவிடுகிறேன்" என்ருர். இவருடைய இந்த வழி எனக்குப் பிடிக்கவில்லை. ஆயினும் காந்தியடிகள் எல்லாவற்றையும் அறிந்தே செய்கிறபடியால் என்னதான் நடக்கிறதென்று பார்க்கலாம்.

இதுவரையில் உள்ள நிலைமை பழைய கருப்பனே கருப்பன் என்ற நிலைமைதான்; துருவ நக்ஷத்திரத்தைப் போல் இருந்த இடத்திலேயே அசையாதிருந்து கொண்டிருக்கிருேம். இங்குள்ள எந்தப் பிரமுகரும் வாயைத் திறந்து ஒன்றும் வெளியிடாவிடினும், இதுவரையில் நடந்திருப்பதெல்லாம் 'சுக்லாம் பரதரந்' தான் என்பது என் எண்ணம். இரு கக்ஷிகளும் விலகி நின்று ஒருவர் மற்றவரது பலத்தைப் பரீட்சிக்க முயன்றுகொண்டிருக்கிருர்கள். நிஜமான மல் யுத்தம் வருகிற வாரத்தில் நடைபெறும். அதன் பின்னர் வெற்றி தோல்வி தெரிந்துவிடும். ஏதாவது வழி பிறக்குமென்று இன்னும் நம்பிக்கை இருக்கிறது. ஆனுல் காந்தியடிகளைத் தவிர, மற்றவர்களெல்லாம்

களை இழந்து தோன்றுகிறார்கள். சிலர் லண்டனைப் பார்த்து பிரமித்து விட்டனர்; சிலர் காந்தியடிகளின் எதிரில் வாய் பொத்தி விட்டனர்; ஒருவரிடமாவது முன்னால் வந்து ஏதாவது செய்யும் சக்தி இருப்பதாய்த் தெரியவில்லை. யோசித்து யோசித்து இவர்கள் கிழப் பருவம் எய்தி விட்டனர்; ஆனாலும் இன்னமும் அந்தப் பழைய யோசனைகள்தான்; நூறு வருஷங்களுக்குப் பின்னரும் அவைகளேதானிருக்கும்.

பிரதம மந்திரி இன்று காந்தியடிகளிடம் "நேற்று நான் சொன்னதைக் குறித்து உங்களுக்கு வருத்தமில்லையே?" என்றார். நான் காந்தியடிகளிடம், "ஹோரைப் பற்றி நல்ல அபிப்பிராயம் தாங்கள் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் கடைசியில், பிரதம மந்திரியே உங்களுக்கு உதவி செய்யப்போகிறார்" என்றேன். இதன்மேல், ஸ்ரீநிவாச சாஸ்திரியார், இரண்டு பேரும் உதவி செய்யப் போவதில்லை. பிரதம மந்திரியிடம் எதுவும் எதிர்பார்த்தல் வீண். அவர் பக்கா ஏகாதிபத்திய வாதி. சமயம் வரும்போது தமது தத்துவங்களையெல்லாம் தூக்கி மாடத்தில் வைத்து விடுவார்" என்றார்.

---

[19]

நாடக ஒத்திக்கை

லண்டன்
4—10—31

இன்று பெந்தலுடன் பகற்போஜன சமயத்தில் வெகு நேரம் பேச்சு நடந்தது. அவருடைய மனைவியு மிருந்தார். ஆனால் நாங்கள் தனியாகப் பேசினோம்.

நான் தொடக்கத்திலேயே, "என்னை நீங்கள் முன் கோபக்காரன் என்று சொல்லிக் கொண்டிருக்கி றீர்கள். என்னை நம்புவதாகவும் தெரியவில்லை. இந்த நிலையில் நாம் இருவரும் மனம் விட்டுப் பேச முடியுமா? அப்படிக்கில்லாத வரையில் நமது பேச்சினால் பயன் என்ன என்றேன்.

பெந்தல், "நான் ஒன்றையும் மறைக்காமல் பேசப் போகிறேன். இதை நீங்கள் நம்புங்கள்" என்றார். பிறகு எங்களுக் கிடையில் நடந்த பேச்சின் சாராம்சம் பின் வருமாறு.

நான் :—மகா நாட்டினுல் வீண் காலவிரயம் ஆவதாக நாங்கள் நினைக்கிறோம். சர்க்கார் தங்களை முகஸ்துதி செய்யும் பக்தர்களாகப் பார்த்து இதில் நிரப்பி வைத்திருக்கின்றனர்; இவர்களால் ஒன்றும் ஆகப் போவதில்லை. உண்மையில் ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமானுல் முதலில் மூலாதார விஷயங்கள் நிச்சயிக்கப்பட வேண்டும். நீங்கள் எவ்வளவு தூரம் முன்னேறுவதற்குத் தயாரா யிருக்கிறீர்களென்று தெரிய வேண்டும். வேரைப் பற்றிய விஷயம் தீர்மானமாகி விட்டால், கிளைகள் இலைகளைப் பற்றிய விஷயங்களைத் தீர்மானிக்கும் வேலை கமிட்டியிடம் ஒப்புவிக்கப் படலாம்.

பெந்தல் :—பேச்சிலேயே பொழுதைப் போக்கி எல்லோரையும் வெறுங்கையுடன் திருப்பி அனுப்பி விடலாமென்ற எண்ணமுள்ள ஒரு கட்சி இங்கு இருப்பது நிஜந்தான். ஆனுல் இன்னொரு கட்சி—அதிக செல்வாக்குள்ள கட்சி இருக்கிறது. இந்தக் கட்சி, "சமாதான ஒப்பந்தம் அவசியம் செய்து கொள்ள வேண்டும்" என்று கருதுகிறது. நான் சொல்வது உண்மையான செய்தியென்று நீங்கள் நிச்சயமாய் நம்பலாம். இத்தகைய விஷயங்களில் அவசரப்படக் கூடாது. ஒரு வருஷம் ஆனுலும், அதிகமென்று எண்ணக்கூடாது. நான் பெயரை வெளியிடுவதற்கில்லை; ஆனுல் நான் குறிப்பிடும் மனிதர்கள் ஏதாவது கட்டாயம் முடிவு ஏற்பட வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

நான் :—மனதில் உண்மையிருந்து ஒப்பந்தத்திற்காகப் பூரண முயற்சியும் செய்யப்படுமானுல், வருஷம் ஒன்ருனுலும் குற்றமில்லை.

பெந்தல் :—நான் இதை ஒப்புக்கொள்கிறேன். ஆனுல் சட்ட பூர்வமாக எங்களை பகிஷ்கரிக்கும் பேச்

சுக்கள் உங்கள் கக்ஷியில் நடைபெறும் பொழுது, ஒப்பந்தம் எவ்வாறு ஆகக்கூடும்?

நான் :—இவ்விஷயத்தில் காந்தியடிகள் சமாதானம் சொல்லி விட்டார். நானும் ஜாதி பகிஷ்காரத்தை எதிர்த்து அபிப்பிராயம் தந்திருக்கிறேன்.

பெந்தல் :—ஆனால் பாங்கிங் கமிட்டியின் அறிக்கையைப் பாருங்கள். அதில் இந்தியர்களின் சார்பில் சொல்லப்பட்டிருக்கும் யோசனையின் நோக்கம், ஆங்கிலேயர்களை இந்த வேலையிலிருந்தே விரட்டி வெளியேற்றுவ தல்லவா?

நான் :—கால, தேச, வர்த்தமானங்களைக் கவனிக்க வேண்டும். தற்போதைய நிலைமையில், இவ்விதம் சொல்ல வேண்டி யிருக்கிறது; எங்களுக்குப் பூரண அதிகாரம் கிடைத்து விட்டால் எங்களுடைய மனோ பாவம் மாறிவிடும்.

பெந்தல் :—இன்று வரையில் நடந்துள்ளவைகளை யெல்லாம் சோதனை செய்ய வேண்டு மென்று காந்தியடிகள் பிடிவாதம் செய்கிறார். அதாவது சர்க்கார் இதுவரையில் போட்டிருக்கும் உத்தரவுகள் எல்லாவற்றையும் பரிசோதித்து எங்கெங்கே அதிக்கிரமம் நடந்திருக்கிறது என்று கண்டு பிடிக்கவேண்டு மென்கிறார். இது எவ்வாறு சாத்தியமாகும்? எவ்வளவு ஆயிரம் உத்தரவுகள் போடப் பட்டிருக்கின்றன வென்று யாருக்குத் தெரியும்? எதைத்தான் சோதிப்பது?

நான் :—எவைகளைப் பற்றி மக்களுக்குக் குறைகள் உண்டோ அவைகளை மட்டும் பரிசோதித்தால் போதும். இவ்விஷயத்தில் நீங்கள் காந்தியடிகளிடம் பேசி அவரைச் சமாதானப் படுத்துங்கள். நீங்கள் இருவரும் ஒருமனப்பட்டு, ஒப்பந்தம் ஏற்படுமென்று தோன்றிய பிறகுதான், நான் உண்மையில் பிரயோ

ஜனப் படுவேன். நீங்கள் உங்களுடைய பாதுகாப்பைப் பற்றிப் பேசுகிறீர்கள். ஆனால் இந்திய மக்களைப் பாதுகாப்பது எப்படி? ஸிந்தியா கம்பெனி இறக்கும் தறுவாயி லிருக்கிறது; அதைக் காப்பாற்றும் உபாயம் என்ன? எப்படியாவது அதைப் பாதுகாக்க வேணுமென்று நாங்கள் முயன்றால் உங்களைக் கொல்ல முயற்சி செய்வதாகக் குறை கூறுகிறீர்கள்.

பெந்தல் :—நீங்கள் தாராளமாய் * இஞ்சு கேப்பின் சொத்தை எடுத்துக் கொண்டு உங்கள் தொழில்களைக் காத்துக் கொள்ளுங்கள். சர்க்கார் சட்டம் செய்து, அத்தகைய சொத்தைத் தாங்கள் வசப்படுத்திக் கொண்டால், எங்களுக்கு ஆட்சேபமே யிராது. தொழில்களைக் காப்பாற்றுவதற்கு வேறு வழிகளும் இருக்கிறன்றன. இந்த தேசத்தில் விதேசி வர்ணங்களை பகிஷ்கரிப்பதற்கு ஒரு தனிச் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி வர்ண வியாபாரம் செய்வதற்கு லைஸென்ஸ் பெறுவது அவசியம்; அந்த லைஸென்ஸ் விதேசி வர்ண வியாபாரத்திற்குக் கிடைக்கவே கிடைக்காது. நீங்களும் இவ்விதம் ஏதாவது சட்டம் செய்து உங்களுடைய தொழில்களைக் காத்துக் கொள்ளலாம்.

நான் :—எங்களுக்குப் பெயரைப்பற்றிக் கவலையில்லை; வேலை நடந்தால் போதும். ஏதாவது ஒரு நல்ல உபாயம் சொல்லுங்கள்; நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளுகிறோம். எங்களுக்குள் ஒரு சாரார் சட்டபூர்வ பகிஷ்காரத்தை விரும்புகிறார்களென்பது உண்மைதான். நாங்கள் அவர்களையும் ஒப்பச் செய்து விடுகிறோம்.

பெந்தல் :—ஒப்பந்தத்திற்கு முதற்படி எங்களுடைய வியாபார உரிமைகளுக்குப் பாதுகாப்புகளையமைத்தல்.

---

* லார்டு இஞ்சகேப் இங்கிலாந்தில் பிரசித்தமான கப்பல் தொழில் முதலாளி.

நான் :—நீங்கள் ஆங்கிலேய வியாபாரிகளின் பிரதிநிதி; காந்தியடிகள் காங்கிரஸின் பிரதிநிதி. இருவரும் ஒன்றுகூடிப் பேசுங்கள். சமாதானம் ஆகிவிட்டால் நீங்கள் அவருக்குப் பூரண உதவி செய்யவேண்டும். ஆகாவிட்டால், மகாநாடு வீணுவதால் நாங்கள் எங்கள் வீட்டிற்குப் போய்ச் சேருகிருேம்.

பெந்தல் :—என் அபிப்பிராயமும் இதுதான்!

நான் :—இப்பொழுது எல்லாப் பிரச்னைகளேயும் ஒவ்வொன்ருக எடுத்துக்கொண்டு ஒவ்வொன்றையும் பற்றி உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள்.

பெந்தல் :—சேனைக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லே; ஆகையால் நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லே. ஆனல் இது விஷயத்தில் எங்கள் தரப்பில் ஒருவராவது சிறிதும் விட்டுக்கொடுக்க விரும்பவில்லே.

நான் :—காந்தியடிகளும் இவ்விஷயத்தில் சிறிதும் அசைந்து கொடுக்க விரும்பவில்லே. நீங்கள் அவரையும் விசாரித்துத் தெரிந்து கொள்ளுங்கள். 'அதிகார'த்திற்கு அவர் கொள்ளும் பொருள் என்னவென்று கேளுங்கள்.

பெந்தல் :—சேனைக்காகப் பிடிவாதம் செய்தல் சரியல்லவென்று நான் கூறுவேன். ஒரு தேசத்தின் ஆயுளில் பத்து இருபது வருஷம் அதிகமாகுமா?

நான் :—உண்மை; ஆனல் எவ்வளவு காலத்திற்குப் பிறகு எங்களுக்குப் பூரண அதிகாரம் கிட்டுமென்ற விஷயமாவது தீர்மானமாக வேண்டுமல்லவா?

பெந்தல் :—இதைப் பற்றிப் பேசவேண்டியதுதான். இப்பொழுது 'கடன்' விஷயத்தை எடுத்துக் கொள்ளலாம். கடனைத் தீர்க்கமாட்டோம் என்று

மட்டும் நீங்கள் மறந்து போய்க்கூடச் சொல்லி விடக் கூடாது.

நான் :—'இல்லை' என்று சொல்லவில்லையே. நியாயப்படி நாங்கள் கொடுக்க வேண்டாததை மட்டுமே கொடுக்கமாட்டோ மென்கிறோம்.

பெந்தல் :—நடந்தது நடந்து விட்டது. உள்ள கடனை ஒத்துக் கொள்ளுங்கள். சண்டையை ஒரு வழியாகத் தீர்ப்பதற்காக இங்கிலாந்து வருஷத்திற்கு இவ்வளவென்று ஒரு குறிப்பிட்ட தொகையை உங்களுக்குக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

நான் :—நான் விரும்புவது பணம்; அது எப்படிக் கிடைத்தாலும் சரி. இந்த இரு விஷயங்களிலும் நாம் இருவரும் அநேகமாக ஒத்திருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது பொருளாதாரப் பாதுகாப்பைப் பற்றிப் பேசலாம். எங்களுடைய சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இரண்டு நோக்கங்கள் இருத்தல் கூடும்: ஒன்று, எங்களுடைய நன்மைக்காகவே இருக்கலாம்; அல்லது, உங்களுடைய சுயநலத்தைக் காப்பதற்காகவும் இருக்கலாம். பாதுகாப்புகள் எங்களுடைய நன்மைக்காகத்தான் என்பதை மட்டும் நிரூபித்து விட்டீர்களானால், உங்களுடைய வார்த்தையை ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் அந்த நிலைமையில் நாங்கள் என்ன முன்னேற்றம் எய்தமுடியும், எங்கள் ஏழை ஜனங்களுக்கு என்ன நன்மை செய்ய முடியும் என்பதை யெல்லாம் நீங்களே யோசித்துப் பார்க்கவேண்டும். இந்திய சர்க்காரின் வருஷாந்திரச் செலவு 130 கோடி ரூபாய். ரயில், சேனை, கடன், பென்ஷன் ஆகியவைகளில் ஏறக்குறைய 110 கோடி செலவாகி விடுகிறது. இவைகளின் விஷயத்தில்தான் நீங்கள் அதிகாரத்தை வைத்துக்கொள்ள விரும்புகிறீர்கள். எங்களுக்கு மிஞ்சும் சுதந்திரம் பாக்கி 20

கோடி ரூபாய் விஷயத்தில் மட்டுமே. நாங்கள் ஏதாவது வரியைக் குறைக்க விரும்பினுல் ராஜப் பிரதிநிதி குறுக்கிட்டுத் தடுத்து விடுகிருர். அத்தகைய சுயராஜ்யத்தினுல் என்ன பயன்? எங்களுக்கு என்ன கொடுக்கிறீர்கள், எதைக் கையில் வைத்துக்கொள்ளுகிறீர்கள் என்பதை நீங்களே கணக்கிட்டுப் பாருங்கள்.

பெந்தல் :—சைனியச் செலவு உண்மையில் அதிகந்தான். அதைக்குறைக்க வேண்டுமென்பதே என்னுடைய கட்சி.

நான் :—இந்த சைனியச் செலவின் ஒரு பகுதியை இங்கிலாந்து கொடுக்க வேண்டுமென்பதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

பெந்தல் :—ஆமாம்; ஒப்புக்கொள்ளுகிறேன்.

ரயில் இலாகாவை வியாபார முறையில் நடத்த வேண்டும் என்றும், முடிவான அதிகாரம் மட்டும் இந்திய சர்க்காரிடம் இருக்கவேண்டும் என்றும் கூறினுர். "ரிஸர்வ் பாங்கி, அரசியல் கட்சிகளின் செல்வாக்குக்கு உட்பட்டிருப்பது நல்லதா?" என்றும் கேட்டார்.

நான் :—சர்க்காருக்குப் பூரணமான சுதந்திரம் வேண்டுமென்பது என் கருத்து. இவ்விடத்திய சர்க்கார் தங்கள் தங்க மாற்று விகிதத்தை விரும்பிய பொழுது விட்டது போல், எங்களுடைய சர்க்காருக்கும் தேசத்துக்கு நன்மை என்று தோன்றுவதைச் செய்யும் அதிகாரம் வேண்டும்.

பெந்தல் :—சரிதான்; ஆனுல் இவையெல்லாம் இராஜப் பிரதிநிதியின் அங்கீகாரத்துடன் செய்யட்டும்.

நான் :—இராஜப் பிரதிநிதியின் அங்கீகாரம் என்ருல், அவர் குறுக்கிடுவது என்று இருக்கக்கூடாது.

இந்த விஷயத்திலும் திட்டமான யோசனை காந்தியடிகள்தான் சொல்ல முடியும்.

பெந்தல் :—இந்த விஷயத்தில் மூன்று பாகஸ்தர்கள் இருக்கிறார்கள் :—(1) சுதேச மன்னர்; (2) சர்க்கார்; (3) பிரிட்டிஷ் இந்தியர். இந்த மூன்று கட்சிப் பிரதிநிதிகளும் கூடி முடிவு செய்து விட்டால் எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்துவிடும்.

நான் :—சர்க்காரின் பிரதிநிதித்துவம் என்றால் என்ன?

பெந்தல் :—பூரண அதிகாரம் கிடைக்கும் வரையிலும் இத்தகைய ஏற்பாடு செய்வது அவசியம்.

நான் :—தாற்காலிக ஏற்பாடென்று எண்ணிச் செய்வதே நிரந்தரமாகி விடாதென்று யார் கூற முடியும்? இருக்கட்டும்; இந்த விஷயங்களைப் பற்றி மேலே பேச்சு நடத்துவது எப்படி?

பெந்தல் :—அவகாசம் கிடைத்தால், செவ்வாயன்று நீங்கள், நான், கார், கைடோ இவர்கள் கூடி முதலில் வியாபாரத்தைப் பற்றிய உரிமைகள் விஷயத்தைத் தீர்மானித்துக் கொள்வோம். அதன் பின்னர் பொருளாதாரப் பாதுகாப்புகளைப் பற்றி பிளாக்கெட், ஸ்ட்ராகோஷ் ஆகியவர்கள் கூடிப்பேசுவார்கள்.

---

[20]

"மல் யுத்தம்"

லண்டன்
6—10—31

இன்று சாயங்காலம் இந்தியா ஆபீஸில் ஸர் ஹென்றி ஸ்ட்ராகோஷுடன் மல் யுத்தம் நடைபெற்றது. ஆரம்பத்தில் இந்தியா மந்திரி ஸர் ஸாமுவேல் தலைமைப் பதவி வகித்தார்; ஆனால் மந்திரி சபைக் கூட்டம் நடக்க இருந்ததால், சில நிமிஷங்களுக்குப் பிறகு ஸர் ரெஜினால்டிடம் கொடுத்துப் போய்விட்டார். பல பிரமுகர்கள் விஜயம்செய்திருந்தனர்— காந்தியடிகள், ஸர் புருஷோத்தமதாஸ், ஜனப் ஜின்னா, ஸர் மாணிக்ஜி, ஸர் பிரோஸ்ஷாசேத்னா, கே. டி. ஷா, பிரபொஸர் ஜோஷி, ரங்கஸ்வாமி அய்யங்கார் ஆகியோர். காந்தியடிகள் 7-மணி சுமாருக்கு வேறு வேலையாகப் போய்விட்டார். 5½ மணிக்குக் கூட்டம் ஆரம்பம். சர்க்கார் சார்பில் ஸர் ஹென்ரி ஸ்ட்ராகோ

ஷூம், நமது சார்பில் நானும் பிரசங்கிகள். பிளாக் கெட்டும் விஜயம் செய்திருந்தார்; ஆனால் ஒன்றும் பேச வில்லை. ஸ்ட்ராகோஷ் முதலில் உலக நிலைமையைப்பற் றிப் பேசினார்; பின்னர் இந்தியாவைப்பற்றிச் சொன் னார்; நாணயமாற்று விகிதம் 1ஷில்லிங் 6பென்ஸ் என்று நிச்சயிக்கப்பட்டிராவிடில், விகிதம் இறங்கி இறங்கி எங்கே போய் நின்றிருக்குமோ தெரியாதென்றும், சர்க்காருக்கு எவ்வளவு நோட்டுகள் அச்சடித்து நிலைமையைச் சமாளிக்க வேண்டியிருந்திருக்குமோ சொல்லமுடியாதென்றும் கூறினார். இதுதான் அவ ருடைய முக்கிய வாதம். இந்த விகிதத்தை நிச்ச யிப்பதற்கு அவரிடமுள்ள ஆதாரமென்ன வென்று நான் கேட்டபொழுது அவரால் பதில் சொல்லமுடிய வில்லை. "நாணயச் சீர்திருத்தம்" என்ற நூலில் நான் சொல்லியிருக்கும் வாதங்களுக்குப் பதில் சொல்லுவ திலேயே அவர் அதிக நேரத்தைக் கழித்தார்.

"ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் நான் வாதம் செய்யத் தயார். ஆனால் ஒரு விஷயம் சொல்ல விரும்பு கிறேன். அந்தப் புத்தகத்தில் வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் எல்லாம் என்னுடைய சொந்தமேயன்றி, இந்திய வியாபாரி சமூகத்தினுடையவையல்ல. இங்கே வந்திருப்பவர்கள் இந்திய சர்க்காரின் நடவடிக்கை களைப் பற்றிப் பேசவும், விவாதிக்கவுமே வந்திருக் கிறார்கள். ஆகையால் என் புத்தகத்தை விமர்சனம் செய்வதில் காலத்தைக் கழித்தல் அவர்களுக்கு அநி யாயம் செய்வதாகும்" என்றேன் நான். இதன் பிறகும் ஸ்ட்ராகோஷ் அதே போக்கிலேயே போய்க் கொண்டிருந்தார். ஆயினும் நல்ல வாதம் நடைபெற் றது. "நாணயமாற்று விகிதத்தை உயர்த்தியதன் நோக் கம், ஆங்கில உத்தியோகஸ்தர்களுக்கும், வியாபாரி களுக்கும் லாபம் செய்வதுதான்" என்று நான் எழுதி யிருந்தேன். இது அவர்கள் மனதில் தைத்திருக்கிறது.

எனவே, ஸ்ட்ராகோஷ், "இதை ருசுப்படுத்த முடியுமா?" என்று கேட்டார். ஸர் புருஷோத்தமதாஸ், "அது பெரிய ராமாயணம்; ஆரம்பித்தால் ரொம்ப நேரமாகுமே!" என்றார். சாப்பாட்டு நேரம் ஆகி விட்டது; பலரும் தம்தம் வேலைக்குப் போகவேண்டியிருந்தது; ஆகையால் விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. ஸ்ட்ராகோஷ் தமது விஷயத்தில் நிபுணராயிருப்பதுடன், மனச்சாட்சியை மதிக்கும் மனிதர் என்றும் தோன்றுகிறது. ஆகையால் ஒருவேளை, இனி இதைப் போன்ற பேச்சே நடைபெறுமலிருக்கலாம். அல்லது பிளாக்கெட்டைப்போன்ற ஒருவரிடம் சர்க்கார் சார்பில் வாதம் புரியும் வேலை ஒப்புவிக்கப்படலாம். சர்க்கார் சார்பில் சொல்லக்கூடியதாக வலுவுள்ள காரணம் ஒன்றுமில்லையென்று ஸ்ட்ராகோஷுக்கு நன்கு தெரியும். அவர் என்ன செய்வார்? "உங்களுடைய தங்கத்தைக் கொண்டுபோய் விட்டதாக அடிக்கடி சொல்கிறீர்களே? தங்கத்தை சர்க்காரா கொண்டு போய் விட்டார்கள்? இந்தியாவின்பால் தங்கள் பொறுப்பைத்தான் நிறைவேற்றினார்கள்" என்றார்.

நான், "இங்கிலாந்திற்கும் பொறுப்பு இருந்ததல்லவா? இங்கே என்ன செய்தீர்கள்?" என்று கேட்டேன். "ஆனல் இந்தியாவைப்போல் இங்கிலாந்து பிறரிடம் கடன்படவில்லையே" என்றார். நான், "வாஸ்தவம்; ஆனல் இரண்டு விஷயங்களை கவனிக்கவேண்டும். இங்கிலாந்து அவ்வளவு கடன் உள்ளதில்லை யாயினும், இங்கு ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகம். எங்கள் நாடு கடனுள்ளது தான்; ஆனல் இறக்குமதியைவிட ஏற்றுமதி அதிகமாகச் செய்கிறது. இதை நீங்கள் மறக்கக்கூடாது. மேலும் நாங்கள் எங்களுடைய கைத் தொழில்களை விருத்தி செய்து, எங்களுடைய உற்பத்தி சக்தியை வளர்த்த பிறகே எங்கள் கடன்களைத் தீர்க்கமுடியும்.

அப்படியானல் எங்களுடைய கொள்கை கைத்தொழில்களை வளர்ப்பதா யிருக்க வேண்டுமா? அழிப்பதா யிருக்க வேண்டுமா?" என்றேன். ஸ்ட்ராகோஷ் பதில் சொல்லவில்லை.

[21]

பாதிக் கல்யாணம்

லண்டன்

7—10—31

வட்டமேஜை மகாநாட்டில் இதுவரையில் நடந்ததென்ன வென்று கேட்டால், "ஒன்றும் நடைபெறவில்லை" என்றுதான் பதில் சொல்ல வேண்டும். சிறுபான்மை வகுப்பாரின் சண்டைகள் இன்னும் தீர்ந்தபாடில்லை. சுயராஜ்ய (அரசியல்) திட்டம் இன்னும் கடுகளவுகூட அமைக்கப் பெறவில்லை; ஆயினும் மெள்ள மெள்ள முன்னேறி வருகிறோமென்று கூறலாம். காந்தியடிகளுடன் சிநேகம் வளர்ந்து கொண்டிருக்கிறது; பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன; நமது வேலையும் ஒவ்வொரு நாளும் புது உருப் பெற்ற வண்ண மிருக்கிறது. சிறுபான்மை வகுப்பாருடன் ஒப்பந்தம் செய்யும் கதையை வேறிடத்தில் சொல்கிறேன். இன்று காந்தியடி

கள், ஸர் புருஷோத்தமதாஸ், பெந்தல், கார், நான் ஆகி யோர் உட்கார்ந்து யோசனை செய்யத்தொடங்கினேம். எங்கள் எண்ணிக்கையைப் பார்த்தால் நல்ல சகுனம் என்று தான் கூறவேண்டும். ஏனெனில் பஞ்சாயத் தில் ஐந்து பேர் இருத்தல் வழக்கம்; நாங்களும் ஐந்து பேரே இருந்தோம். மூன்று விஷயங்களை எங்களுக்குள் தீர்மானித்தோம்.

(1) சுயராஜ்ய அரசியல் ஆங்கிலேயர்களிடம் எத்தகைய வேற்றுமையும் காட்டக் கூடாது.

(2) ஜாதி வித்தியாசங்களைப் பொருட்படுத்தா மல் சுயராஜ்ய சர்க்கார் இந்தியத் தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். இத்தகைய பாதுகாப்பு அளிக்குங்கால் தொழிலின் முக்கியத்துவம் மட்டும் கவனிக்கப்படுமே யன்றி, அதை நடத்துவோனுடைய நிறம் அல்லது ஜாதி கவனிக்கப்படமாட்டாது.

(3) இன்றைய சர்க்காரிடமிருந்து எந்த முத லாளியாவது தவறான முறைகளினல் விசேஷ உரிமை கள் பெற்றிருந்தால், அவைகளைப் பரிசோதிக்கும் அதிகாரம் சுயராஜ்ய சர்க்காருக்குண்டு.

முடிவில், இத்தகைய பேச்சுக்களை இனியும் தொடர்ந்து நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட் டது. அந்த ஒப்பந்தத்தை சர்க்காரும் ஏற்றுக்கொள் வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

[௨௨]

தவத்தின் மகிமை

லண்டன்

8—10—31

இன்று காலையில் காந்தியடிகள் ஸாங்கியையும், ஹெர்பர்டு சாமுவேலையும் சந்தித்தார். அவர்கள் அதிக நம்பிக்கைக்கு இடம் தந்து பேசவில்லை. "உங்களை வெறுங் கையோடு அனுப்ப மாட்டோம்" என்று ஸாங்கி கூறினராம். ஆனால் ஸாங்கி வாய் இனிக்கப் பேசுகிறவர்.

"இதையே ஹோர் சொல்லியிருந்தால் அதற்கு அதிக மதிப்புத் தரலாம்; ஆனல் அவர் அவ்விதம் சொல்லவில்லை" என்று காந்தியடிகள் கூறினர்.

"நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்" என்று நான் பட்டவர்த்தனமாகக் கேட்டேன். அதற்கு அவர், "வெறும் கையோடு திரும்ப வேண்டியதுதான்" என்ருர்.

"தாங்கள் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு அவசிய மில்லாதிருக்கும்படி ஏதாவது கிடைக்கலா மல்லவா? என்றேன்.

"கிடைக்கலாம்; அதற்கே நானும் முயன்று கொண்டிருக்கிறேன்" என்ருர்.

ஹோர் மகாத்மாஜியிடம் "தங்களிடம் நாள் கணக்கில் பேசுவதற்கு அவசியம் இருக்கிறது" என்று சொன்னுராம். இப்பொழுது வட்ட மேஜை மகா நாட்டிற்கு மகிமை ஒன்றும் இல்லையென்பது தெளி வாகி விட்டது. நடக்க வேண்டியதெல்லாம் திரைக் குள்ளேதான் நடைபெறும்.

"என்னைப் பாராமல் பேச்சை முறித்துவிட வேண்டாம்" என்று இர்வின் காந்திஜிக்கு எழுதி யிருக்கிருர். இவரும் "ததாஸ்து" என்று பதில் அனுப்பி விட்டார்.

யாரோ ஒரு (பிரிட்டிஷ்) பட்டாளத் தலைவன் சிப் பாய்க் கலகத்தின் சமயத்தில் இந்தியாவில் கொள்ளை யடித்துக் கொஞ்சம் ரத்தினங்கள் கொண்டு வந்திருந் தான். பிரமாத மதிப்பு உள்ளவையல்ல; சொற்ப விலையுள்ளவைதான். அவனுடைய குடும்பத்தில் பரம்பரையாக அந்த இரத்தினங்கள் இருந்து கொண்டிருந்தன. காந்தியடிகள் இங்கு வரவும், அவருடைய பிரக்யாதியை மேற்படி குடும்பத்தார் கேட்டார்கள். காந்திஜியின் நாட்டிலிருந்து அநியாய மாய் வந்த பொருளை வைத்துக் கொண்டிருந்தால் குடும்பத்திற்கே கேடு என்று அவர்கள் நினைத்தார் கள். இன்று அக்குடும்பத்தைச் சேர்ந்த ஸ்திரீகள் வந்து, ஒரு 'புஷ்பராக' மாலையைக் காந்தியடிகளின் பாதங்களில் வைத்து, "எங்களுடைய மூதாதை இந் தியாவிலிருந்து கொள்ளையிட்டுக் கொணர்ந்தது இது.

வெகு காலமாய் எங்களிடம் இருந்தது. இப்பொழுது தங்களுடைய மகிமையைக் கேட்ட பிறகு இதை வைத்திருக்க மனமில்லை" என்றனர். காந்தியடிகள் ஹாரத்தை ஏற்றுக் கொண்டார். தவத்தின் மகிமை தான் என்ன? இல்லாவிடில், ஓநாயின் வாயில் போனது திரும்பக் கிடைக்குமா?

[23]

"விஷம் கக்குதல்"

லண்டன்

9—10—31

சிறுபான்மை வகுப்புக் கமிட்டியின் கதை ரொம்பவும் சோககரமானது. ஒரு வாரம் வரையில் நாடகம் நடந்தது. கடைசியில் பார்த்தால், விஷயம் இருந்த இடத்தை விட்டு நகர்ந்தபாடில்லை. ஸ்தானங்களைப் பற்றிய அதே பழைய சண்டை; அதே அவநம்பிக்கை; கடைசியில் ஆருவது நாள் யாரோ ஒருவர், "பஞ்சாயத்தாரை நியமித்து அவர்களை முடிவு செய்யச் சொல்லலாம்" என்ருர்.

காந்தியடிகள், "மூஞ்சே, உங்கள் அபிப்பிராயமென்ன?" என்று கேட்டார்.

"முஸ்லீம்களிடம் கேளுங்கள்" என்று பதில் வந்தது.

முஸ்லீம்களைக் கேட்கவும், அவர்கள் ஆலோசித்து பதிலளிப்பதாகக் கூறினார்கள். இரவு 10 மணிக்கு சபை மீண்டும் கூடிற்று. முஸ்லீம்களும், மூஞ்சேயும் "சம்மதம்" என்றனர். ஆனால், பஞ்சாயத்தாராக யாரை நியமிப்பதென்ற கேள்வி பிறந்தது. வெளி மனிதர்களா யிருக்க வேண்டுமென்று டாக்டர் மூஞ்சே அபிப்பிராயப்பட்டார். மெம்பர்களுக்குள்ளேயே இருக்க வேண்டுமென்று முஸ்லீம்கள் கூறினர். இந்த நாடகத்தை யெல்லாம் பார்த்து எனக்கு மிகவும் துக்கமா யிருந்தது. இரு கக்ஷிகளுக்கு மிடையில் பரஸ்பர அவநம்பிக்கை மட்டுமன்றி வேறு விஷயமும் வந்து சேர்ந்திருக்கிறது. இவைகளின் பயனாக காந்தியடிகளின் சுமை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இரவு பகலாக வேலை செய்கிறார். மூன்று மணி நேரத்திற்கு மேல் தூங்க அவகாசம் கிடைப்பதில்லை. இங்கே கொஞ்சம் மதிப்பு இருப்பதே இவரால்தான்; ஆனாலும் நமது ஜனங்களே இவருக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முஸ்லீம்கள் கொடுக்கும் தொந்தரவைப் பொறுத்தே தீர வேண்டும்; ஆனால் ஹிந்துக்களும் தொந்தரவு கொடுக்கிறார்கள். யாரிடம் நம்பிக்கை வைத்திருந்தோமோ அவர்களிடமிருந்து உதவி கிடைக்கவில்லை.

"தங்கள் அபிப்பிராயத்தின்படி காரியத்தை நடத்த வேண்டியதுதான்" என்று நான் காந்தியடிகளிடம் ஸ்பஷ்டமாகச் சொன்னேன். "செய்யத்தான் வேண்டும். ஆனால் முஸ்லீம்கள் தான் எங்கே எனக்கு உதவி புரிகிறார்கள்? அம்மாதிரி வாக்குக் கிடைக்கும் வரையில், எனது ஆத்மத் தியாகத்தினால் என்ன பயன்?" என்றார்.

இன்று, நிறைந்த சபையில் காந்தியடிகள், "நான் தோற்று விட்டேன்; ஆனால் எனது தோல்விக்குக் காரணம் இந்த சபையின் அமைப்புத்தான். இதில்

உண்மையான பிரதிநிதிகள் மட்டும் இல்லை ; போலிப் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள்" என்று விஷயத்தைப் போட்டு உடைத்து விட்டார். இது, தேன் கூட்டைக் கலைத்தது போல் ஆயிற்று. ஷாபிக்கு மிகுந்த கோபம். அம்பேட்கரோ விஷம் கக்கத் தொடங்கினார். "பொய் உரிமை கொண்டாடுவது மகாத்மாவின் வழக்கமாய்ப் போய் விட்டது. ஆறு கோடி தீண்டாதார் என்னையே மதிக்கின்றனர். காந்தியை ஒருவரும் மதிப்ப தில்லை" என்றார். பிரதம மந்திரியும் காந்தியடிகளைக் கண்டித்தார். எனக்கு ஆத்திரம் பொங்கி எழுந்தது. காந்தியடிகள், "பொறு! நமது வழி தெளிவா யிருக்கிறது. பிறர் சொல்வதைப் பற்றி நமக்குக் கவலை ஏன்?" என்றார்.

[24]

"பானுமதியின் பெட்டி"

லண்டன்

14—10—31

இவ் வாரத்திய நிலைமை மிகவும் ஏமாற்றம் தருவதாயிருக்கிறது. சென்ற வட்ட மேஜை மகாநாட்டிலாவது சிறிது நம்பிக்கைக்கு இடமிருந்தது; இப்பொழுதோ எல்லோருடைய முகமும் அழுது வழிகிறது. ஆங்கிலேயர் விரித்த மாயவலையில் நமது வீராதி வீரர்களெல்லாம் அகப்பட்டுக் கொண்டார்கள். காந்தியடிகள் துடிக்கிறார்; ஆனால் பயனென்றுமில்லை. காந்தியடிகள் சிறிது உக்ர ரூபங் கொண்டால் ஒரு வேளை ஏதாவது புதிய வழி பிறக்கலாம். இப்பொழுதும் காந்தியடிகள் எல்லோரையும் சம நோக்குடனேயே பார்க்கிறார். அதே மரியாதை, உபசாரங்கள். வாயைத் திறந்து ஒன்றும் கேட்காமலிருந்தால் "நல்ல பிள்ளை" என்று பெயர் வாங்கலாம்.

சுயராஜ்யத் திட்டம் 'பானுமதியின் பெட்டி' போலாயிற்று! ராஜாக்கள் சேரவேண்டும்; ஆங்கிலேயர் சேர வேண்டும்; ஹிந்து, முஸ்லீம், சீக்கியர், கிறிஸ்தவர், பார்ஸி, தொழிலாளி, வியாபாரி, ஆங்கிலோ—இந்தியர், தீண்டாதவர் எல்லோருக்கும் தனித் தனி உரிமைகள் வேண்டும்; எல்லோரும் சம்மதித்துத் திட்டம் தயாராக வேண்டும். ஜாதி மதங்களை எவ்வளவு வேற்றுமைப் படுத்தலாமோ அவ்வளவும் செய்துவிட்டு, "உங்களுக்குள் ஒத்து வாருங்கள்" என்று நம்மிடம் கூறப்படுகிறது. உலகில் எங்கும் நடைபெருததை நம்மிடம் எதிர் பார்க்கிருர்கள்.

இங்கிலாந்தில் மட்டும் ஒற்றுமை இருக்கிறதா, என்ன? ஆனலும், நமக்கு ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமை அவசியம் வேண்டியதுதான். இப்பொழுது சண்டை யெல்லாம் பஞ்சாபைப் பற்றியே. ஒப்பந்தம் ஏற்படுமென்பதற்கு அறிகுறிகள் தென்பட்டதும், சர்க்கார் தூதர்கள் இங்குமங்கும் ஓட ஆரம்பிக்கிருர்கள். இந்தியாவிலிருந்து சில ஆங்கிலேயர் வந்து உட்கார்ந்துகொண்டு, ஹிந்துக்களிடம், "நீங்கள் கொள்ளை கொடுக்கிறீர்கள்" என்றும், முஸ்லீம்களிடம், "உங்களுக்குப் பிராணன் போகப் போகிறது" என்றும் கூறித் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிருர்கள். சீக்கியர்களைத்தனியாக பயமுறுத்துகிருர்கள். "பஞ்சாபில் நாங்கள்தான் பெரும்பாலோர்; ஆகையால் பஞ்சாப் எங்களுக்கே!" என்று முஸ்லீம்கள் கூறுகின்றனர். "சட்டப்படி பெரும்பான்மை என்பது அநியாயமானது. உண்மையில் உங்கள் சங்கியை அதிகமாயின் நாங்கள் ஒப்புவோம்" என்கிருர்கள் ஹிந்துக்கள். இதற்கிடையில் ஒரு புதிய யோசனை கிளம்பிற்று. பஞ்சாபிலிருந்து, ஹிந்துக்கள் அதிகமுள்ள அம்பாலாவைப் பிரித்துவிடலாம் என்பதுதான் அது. இதன் பயனுக, பஞ்சாபில் முஸ்லீம்களின்

தொகை 100-க்கு 63 ஆகிவிடும். அப்பொழுது அவர்கள் தனித் தொகுதி அல்லது ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களுக்குப் பிடிவாதம் பிடிக்கத் தேவையில்லை. முறைப்படி ஹிந்துக்கள் அதை ஆக்ஷேபிக்க முடியாது. ஆனால், இந்த யோசனையைப் பற்றிப் பிரஸ்தாபித்ததுமே சில தலைவர்கள், "ராம, ராமா! இது ரொம்ப மோசமல்லவா?" என்றார்கள்.

மத்தியஸ்தப் பேச்சும் போய்விட்டது. காந்தியடிகள் மிகவும் அழுத்தமாக, "பண்டித்ஜி! தாங்கள் மத்தியஸ்தத்தை ஒத்துக்கொள்ளுங்கள். முஸ்லீம்கள் சம்மதியாவிட்டாலும், ஜனங்களுக்கிடையில் உண்டாகியிருக்கும் தவறான எண்ணமாவது மாறட்டும்" என்றார். ஆனால் பண்டித்ஜி மத்தியஸ்தத்திற்குச் சம்மதப்படவில்லை. இங்கே ஜனங்களுக்குத் தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. "நீங்களே ஒத்துப் போகாதிருக்கையில் நாங்கள் என்ன செய்யட்டும்?" என்று சொல்வதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

சுயராஜ்யச் செம்பு கிணற்றிலேயே அமிழ்ந்துவிட்டதுபோல் தோன்றுகிறது. வட்டமேஜை மகாநாட்டுக்கு வந்தவர்கள் கப்பலில் இடம் ஒதுக்கச் சொல்ல ஆரம்பித்து விட்டனர். "இருப்பதா, இறப்பதா?" என்னும் முக்கியமான பிரச்னைகள் முன்னிருக்கையில், இத்தகைய சச்சரவுகள் மிகவும் அருவருப்பைத் தருகின்றன.

பண்டித்ஜியின் முகமும் வாடிவிட்டது; அவருடைய துக்கத்திற்கு எல்லையில்லை. இவ்வாரத்தில் பண்டித்ஜி, காந்தியடிகள், ஜின்னா, ஸப்ரூ ஆகியவர்களிடையில் ஓடியாடிப் பார்த்தேன்; களைத்துப் போனதுதான் பலன். முஸ்லீம்களுக்கு நம்மிடம் நம்பிக்கையுமில்லை; அவர்கள் நேருக்கு நேராகப்

பேசவும் தயாராயில்லை. ஒருவிதமாக ஒப்பந்தம் ஆகி விட்டால், அதன் பிறகு ஒத்துழைக்கவும் அவர்கள் தயாராயில்லை. முஸ்லீம்கள் நமது தேசிய கோரிக்கை களை ஆக்ஷேபனை யன்னியில் ஒத்துக்கொண்டால், காந்தியடிகள் 'ஆத்ம சமர்ப்பணம்' செய்யத் தயாரா யிருக்கிறார். ஆனால் தேசியக் கோரிக்கைகளை ஒத்துக் கொள்வதற்கு அவர்களுக்குத் தைரியமேது?

மெள்ள மெள்ள, பிகானேர் ராஜாவும் நழுவ ஆரம்பித்துவிட்டார். 'பானுமதியின் பெட்டி'யில் பல பாம்புகள் வைத்து மூடப்பட்டிருந்தன. அவை ஒவ்வொன்றாய்க் கிளம்பி ஓட ஆரம்பித்துவிட்டன. பிகானேர் ராஜா, "நாங்கள் உங்களுடன் இருக்கி றோம்" என்று சொல்லுகிறார். கூடவே, "ஆனால்..." என்று ஏதோ ஆரம்பிக்கிறார். அதை விடுகிறவராகத் தெரியவில்லை. 'தீண்டாதா'ருக்கும் மற்றவர்களுக்கும் இன்னும் கூச்சலிட சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இந்த வாரத்தில் நாம் மிகுந்த ஏளனத்திற்கு இலக்கானோம். இத்தகைய ஏமாற்றச் சூழல்களிலும் காந்தியடிகள் சந்தோஷமாயிருக்கிறார். "வெட்கப் பட்டுக்கொண்டு திரும்பிவிட மாட்டோம். கவலை வேண்டாம்" என்கிறார். காந்தியடிகள் பலரைச் சந்தித்த வண்ணம் இருக்கிறார்; ஒரு விதத்தில் சிநே கம் வளர்ந்து கொண்டே யிருக்கிறது. இந்த நட்பிற் குச் சீக்கிரத்தில் ஏதும் பயன் ஏற்படப் போவதாய்த் தெரியவில்லை. ஜவாஹர்லால்ஜியினுடைய வீரம் ததும்பும் கடிதங்கள் வந்து கொண்டே யிருக்கின்றன.

பல சித்திரக்காரர்களும், சிற்பிகளும், உட்கார்ந்து காந்தியடிகளின் சித்திரங்களும், பிம்பங்களும் செய்து கொண்டிருக்கிறார்கள். காந்தியடிகள் குழந்தைகளு டன் விளையாடிக் கொண்டே யிருக்கிறார். எப்பொழு தும் அதே தன்மை, அதே காரியங்கள். அவர் இங்

கிருந்து எதையும் எதிர் பார்க்கவுமில்லை; இப்பொழுது அவருக்கு ஏமாற்றமுமில்லை. நம்பி யிருந்தவர் களுடைய முகங்கள்தான் வாடி விட்டன.

பெந்தலுடன் இன்றிரவு மீண்டும் பேச்சுத் தொடர்ந்து நடைபெறும். இந்தியா ஆபீஸில் நாணய மாற்று யுத்தம் மறுபடியும் நாளை மறு தினம் நடக்கும்.

[25]

‘தங்கக் கம்பி’ ஹோர்

லண்டன்

16-10-31

ஹிந்து-முஸ்லிம் பிரச்னையின் தற்போதைய நிலைமை என்ன வெனில், ஜெயகரும், மூஞ்சேயும் கொஞ்சம் இறங்கி வந்திருப்பதுதான். சீக்கியர் ஒப்பவில்லை; பண்டித்ஜி எதுவும் உறுதியாகச் சொல்லவில்லை. அம்பாலா டிவிஷனை பஞ்சாபிலிருந்து பிரித்து விடுவதென்பது ஸர் ஜாப்ரி கார்பெட் என்னும் ஐ. ஸி. எஸ். காரியதரிசியின் ஆலோசனை. அதன் பயனாக பஞ்சாபில் 100 க்கு 22 ஹிந்துக்களும், 14 சீக்கியர்களும், 63 முஸ்லீம்களும் இருப்பார்கள். முஸ்லீம்கள் இந்த ஏற்பாட்டைக் கூட்டுத் தொகுதி முறையுடன், ஸ்தானங்கள் ஒதுக்காமல் ஒத்துக் கொள்ளலாம், ஆனால் சண்டை முன்னிருந்தபடியேதானிருக்கிறது; காந்தியடிகளுக்கு இந்த ஏற்பாடு பிடித்திருக்கிறது; இனி

இதைப்பற்றிய பேச்சாகவே இருக்கும். இன்றிரவும் நாளை மத்தியானமும் காந்தியடிகள் முஸ்லீம்களுடன் பேச்சு நடத்துவார்.

சுதேச மன்னர்களுடைய நிலைமையும் நன்றாயில்லை. ஒரே சந்தேகத்திலாழ்ந்திருக்கிறார்கள். அவர்களுடனும் பிரத்தியேகமாகப் பேச்சு நடக்கும்.

நேற்று மறுபடியும் காந்தியடிகள் ஹோரைச் சந்தித்தார். சந்திக்க சந்திக்க காந்தியடிகளின் அன்பு வளர்ந்து கொண்டே யிருக்கிறது; ஆயினும் இருவருக்கு மிடையில் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருந்து கொண்டுதானிருக்கிறது. முந்தாநாள் சபையில் எல்லோர் முன்பும் ஹோர், "நாங்கள் சேனையைஒரு நாளும் கொடுக்க மாட்டோம்" என்றார். காந்தியடிகள் இதைக் கேட்டதும், "பேஷ், உண்மையைப் பேசுவதென்றால் இப்படியல்லவா பேசவேண்டும்" என்றார். நேற்று, ஹோர், "உங்களுக்கு நான் கோபமுண்டாக்க வில்லையே" என்று கேட்டார். காந்தியடிகள், "கோபந்தரவில்லை; எனக்குத் திருப்தியே யளித்தீர்கள். நீங்கள் உண்மை யுள்ளவரென்பதும், முகஸ்துதி செய்கிறவரல்ல வென்பதும் எனக்குத் தெரிந்துவிட்டது. ஆனால், என்னை எதற்காக இன்னும் இங்கே நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றுதான் கேட்கிறேன். என்னை அனுப்பிவிடுங்கள்" என்றார். ஹோர் "இவ்வளவு அவசரப்படாதீர்கள். நாங்கள் எவ்வளவு தூரம் போவதற்குத் தயார் என்று வரும் வாரத்தில் ஸ்பஷ்டமாய்ச் சொல்லி விடுகிறேன். நீங்கள் ஒன்றையும் மறைக்கவில்லை. நானும் ஒன்றையும் மறைக்கப்போவதில்லை" என்றார்.

"இவர் தங்கமான மனிதர். இவரால் தான் எனது வேலை நடைபெறப் போகிறது" என்றார்

காந்தியடிகள். ஸப்ரூ முதலியவர்களோ தலையிலடித்துக்கொண்டு, "இந்த ராக்ஷசன் எங்கிருந்து வந்தான்?" என்கிறார்கள். அவர்களுடைய அபிப்பிராயத்தில் முன்பு இருந்த வெட்ஜ் வுட் பென் நல்லவர்; இவருக்கோ ஹோர் நல்லவர்.

காந்தியடிகளை இவ்வளவு சீக்கிரம் திருப்பி அனுப்ப மாட்டார்களென்று எண்ணுகிறேன். ஆனால் அவர் விரும்புவது கிடைக்கப் போவதுமில்லை. ரூபாயில் பத்து அணு கிடைக்கும், பாக்கி ஆறு அணுவுக்காக யுத்தம் நடைபெறுமென்பது எனது கருத்து.

TAMILNADU ARCHIVES ... EGMORE, MADRAS-600 008
765

[26]

" நல்ல மனிதர் "

லண்டன்

22-10-31

வட்ட மேஜை மகாநாட்டின் வேலைகளில் எவ்வித முன்னேற்றத்தையும் காணோம். ஒன்றும் நடைபெறப் போவதில்லை என்ற விஷயம் நாளுக்கு நாள் தெளிவாகிக் கொண்டிருக்கிறது. ஹிந்து—முஸ்லீம் வேற்றுமை இருந்து கொண்டே யிருக்கிறது. அது இங்கு வளர்க்கப் பட்டும் விட்டது. " உங்களுக்குள் ஒத்துப் போக முடியாதிருக்கையில் நாங்கள் என்ன செய்வோம்?" என்று கேட்கிறார்கள். " ஏன் ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை?" என்று காந்தியடிகளிடம் குறை கூறுகிறார்கள். காந்தியடிகளுக்கோ, முஸ்லீம்களின் மனப்போக்கும் சரியா யிருப்பதாகத் தோன்றவில்லை: ஹிந்து மகா சபையின் உற்சாகமும் அவருக்கில்லை. ஆகையால் சிறிது அசட்டையாய்க்கூட

இருக்கிறார். முஸ்லீம்கள் ராஜீயக் கோரிக்கைகளில் இவருடன் சேர்ந்து, மற்ற சிறு கோஷ்டிகளுடன் சேராதிருந்தால் ஒப்பந்தம் ஆகிவிடலாம்; அல்லது ஹிந்து மகா சபைக்காரர்கள், கார்பெட்டின் திட்டத்தையோ, அல்லது வேறு ஏதாவது நல்ல திட்டத்தையோ ஒப்புக்கொண்டாலும் ஒப்பந்தம் ஆகலாம்.

பெந்தலுடன் வேறு புதிய விஷயம் ஒன்றும் பேசப்படவில்லை. முன்பு பேசினதையே திரும்பப் பேசினோம். நமது பலஹீனம் அவருக்கும் தெரிகிறது; ஆகையால் முன்னேற்றம் மெதுவா யிருக்கிறது.

ஹோருடன் மீண்டும் காந்தியடிகளின் பேச்சு நடைபெற்றது; ஆனால் இதுவரையில் ஒன்றும் பயனேற்படவில்லை. அடுத்த வாரத்திற்குள், சர்க்கார் எவ்வளவு தூரம் போகக்கூடுமென்று சொல்லுவதாக ஹோர் கூறியிருக்கிறார். காந்தியடிகள் கொஞ்சம் பரபரப்பும், ஆத்திரமுமடைந்திருப்பது போல் காண்கிறார்; ஏனெனில் காலம் வீணாகிக் கொண்டிருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை.

ஏதாவது முக்கியமான முடிவு செய்வதற்கு முன்பு தம்மைக் கலந்து கொள்ளும்படி இர்வின் இவரிடம் சொல்லியிருக்கிறார். நேற்று காந்தியடிகள் இர்வினிடம், "நான் இங்கிருந்து ஓடி விடப் போகிறேன்" என்றார். "கூடாது; இன்னும் வேலை ஆரம்பிக்கக்கூட இல்லையே," என்றார் இர்வின். இதிலிருந்து சிறிது நம்பிக்கை கொள்ள இடமிருக்கிறது. தேர்தல் மும்முரத்தில், இங்குள்ளவர்களுக்கு வேறொன்றிலும் மனம் செல்லவில்லை. தங்களுடைய நிலைமை எவ்வாறிருக்குமென்று இவர்களுக்கே தெரியவில்லை. ஆகையால் 27-ந் தேதி நிலைமை புரிந்த பிறகு பேசுவார்கள்.

தற்சமயம், மகாநாட்டைக் கலைத்து விட்டு இந்தியாவுக்கு ஒரு கமிஷன் அனுப்புவதென்ற யோசனை

அடிபடுகிறது. ஆங்கிலேயரின் யுக்தியென்ன வெனில், தங்கள் கட்சியில் பலமில்லை என்று தோன்றினுல், காலத்தை ஓட்டுவதற்காக ஒரு கமிஷனை நியமித்து வைப்பது வழக்கம். தற்போதைய நிலைமையும் இது வே; ஆனுல் காந்தியடிகள் இதை ஒப்பவில்லை. ஹோர் சமா தானம் சொல்ல முயலுகிருர்; காந்தியடிகள் தலையை அசைத்து விட்டுச் சும்மா இருந்து விடுகிருர்.

இதை ஒத்துக் கொள்ளாவிடில் அவர்கள் இன்னம் கொஞ்சம் முன்னேறிப் பாக்கலாம்; ஆனுல் அதிக தூரம் போவார்கள் என்ற நம்பிக்கை இல்லை. காந்தியடிகள் ஒப்பந்தத்தையே விரும்புகிருர். ஆனுல் யாருடன் ஒப்பந்தம் செய்து கொள்வது என்பது தான் புரிய வில்லை.

"ஒருகால் இந்தியாவை நான் அணுகுவதும் போர் தொடங்குவதுமாயிருக்குமோ என்னவோ ?" என்று நேற்று காந்திஜி என்னிடம் கூறினுர். சரியான சந்தர்ப்பத்தில் ஏதாவது எதிர்பாராதது நடைபெறு மென்று எனக்குத் தோன்றுகிறது. ஆனுல் தற்சமயம் நல்ல அறிகுறிகள் ஒன்றும் தென்படவில்லை.

ஒரு புறத்தில் இப்படி ஏமாற்றமா யிருந்தாலும், இன்னெரு விதத்தில் இங்கே வந்ததில் நமக்கு நல்ல லாப முண்டாகித் தானிருக்கிறது. காந்தியடிகளுக் கும் இங்குள்ளவர்களுக்கும் சிநேக பாவம் அருகம் புல்லைப்போல் படர்ந்து கொண்டே யிருக்கிறது. ஜனங்களிடம் இவரைப் பற்றி மிகவும் நல்ல அபிப் பிராயம் என்றும் நேற்று கேள்விப் பட்டேன். "காந்தி நல்ல மனிதர்" என்கிருர்கள். முந்தாநாள், பெரிய மனுஷர்களுடைய சபையில் இவரை அழைத்திருந் தார்கள். எல்லா முக்கியஸ்தர்களும் கூடி யிருந்தனர். அவர்களுக்கு இவரைப் பற்றி ரொம்ப நல்ல அபிப் பிராயம் ஏற்பட்டது. மறுபடியும் போர் தொடங்

கிலுல் இங்குள்ள பலர் அனுதாபம் காட்டுவார்க ளென்று எதிர் பார்க்கலாம்.

இந்தியா ஆபீஸில் தர்க்கங்கள் முடிவு பெற்றன. காந்தியடிகள் நம் கட்சிக்குச் சாதகமாக முடிவு சொல்லி விட்டார். அவர் இதை இந்த மட்டோடு விட்டு விட விரும்பவில்லை. ஹோரிடம் "உங்கள் கட்சியின் வாதம் எனக்குத் திருப்தி யளிக்க வில்லை. ஒன்று, என்னைத் திருப்தி செய்யுங்கள்; இல்லாவிடில், என் தீர்ப்பு உங்களுக்கு விரோதமாகத் தான் இருக் கும்" என்று சொல்லப் போகிறார்.

சித்திரம் எழுது வோரும் சிலை செய்வோரும் கை யெழுத்துச் சேர்ப்போரும் செய்தி கேட்க வரு வோரும் எப்பொழுதும் போல் வந்து கொண்டே யிருக்கிறார்கள். சந்தித்துப் பேசு வோரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒரே அமர்க் களம் தான்; 'சுயராஜ்யம்' கிடைக்கும் வழியை மட்டும் காணோம்.

இங்கே கடுமையான குளிர்; 45 டிகிரிக்கு இறங்கி விட்டது. இன்னும் நவம்பர் வரவில்லை. காந்தியடி களுக்கு வேலை வெகு அதிகம். இரவு 1 மணிக்குத் தூங்கி 4 மணிக்கு விழித்துக் கொள்கிறார். "என்றை க்கு நோயில் படுத்து விடுவேனோ தெரியாது" என்று ஒரு நாள் கூறினார். தூங்குவதற்கு நேரம் கிடைத்து விட்டால் ஒன்றும் கவலை யில்லை. கையில் இருந்த துணிகளைக் கொண்டே காரியம் நடைபெறுகிறது. கம்பளி வாங்கலா மென்று சொன்னதற்கு, "இருப் பது போதும்" என்று பதில் வந்தது. பண்டித்ஜிக்குக் குளிரினால் கஷ்டமதிகம். புதிய துணிகள் வாங்கி யிருக்கிறார். அவருக்கு உடம்பு சௌக்கியமா யில்லை. மனதின் நோய் வேறு. தற்சமயம் அவர் காந்தியடி களையும் கைவிட விரும்பவில்லை; மூஞ்சே, நரேந்திர நாதரையும் விட்டு விடப் பிரியப் படவில்லை.

---

[27]

சுலப மார்க்கம்

லண்டன்
23—10—31

நேற்று சில பிரமுகர்களுடன் பேச்சு நடைபெற்றது. காந்தி யடிகளைப் பற்றி அவர்களுக்கு நல்ல அபிப்பிராய மென்று தெரிய வந்தது. இங்குள்ள தனவந்தர்களைத் திருப்தி செய்ய முடியுமாகில் வேலை மிகவும் சுலபமாகி விடுமென்று அவர்கள் அபிப்பிராயப் பட்டனர். இத்தகைய பிரமுகர்கள் சிலரைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன். நேற்று ஸர் புருஷோத்தமதாஸும், லேடனும் சந்தித்துப் பேசினார்கள். லேடன் என்பவர் "பொருள் நூல் அறிஞன்" (Economist) என்னும் பத்திரிகையின் ஆசிரியர். ஸைமன் கமிஷனுடன் பொருளாதார ஆலோசனையாளராக இந்தியாவுக்கு வந்திருந்தார். ஹிந்து-முஸ்லீம் பிரச்னையை ஒரு மத்தியஸ்தரிடம் ஒப்பு விக்கப் போவதாய் அவர் தெரிவித்தார்.

[28]

"தேர்தல் புயல்"

லண்டன்

29—10—31

ராஜீய நிலைமை இருந்தபடியே இருக்கிறது. விசேஷம் ஒன்றும் நடை பெறவில்லை. எனினும் நாங்கள் இன்னமும் அடியோடு ஆசையற்றுப்போய்விடவில்லை. கன்சர்வெடிவ் கக்ஷிக்குத் தேர்தலில் எதிர் பாராத பெரும் வெற்றி கிட்டி யிருக்கிறது. இந்தத் தேர்தல் புயலில் தொழிற் கட்சி பஞ்சாய்ப் பறந்து விட்டது எனலாம். ஆனால் சர்க்காரும் சுகமாய்த் தூங்க முடியாது. இப்பொழுது சர்க்காருக்குப் பார்லிமெண்டில் பெயரளவில்தான் எதிர்ப்பு இருக்கிறது. இது சந்தோஷப்படவேண்டிய விஷய மல்ல. எதிர்க் கட்சி இருந்து குறைகளை எடுத்துச் சொல்வது சரியான வழியில் செல்வதற்கு உதவியாயிருக்கும். சர்க்காரைக் கடுமையாக எதிர்ப்போரிருந்தால், அது

பெருந் தவறுகள் செய்யாமல் தப்பக்கூடும். இப்பொழுது எதிர்ப்பு இல்லை; ஆகையால் சர்க்காருக்கும் கவலைதான். இந்நிலைமை அதிக காலம் நீடித்திராதென்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் என்னுடைய அபிப்பிராயம் வேறு. வெகு சீக்கிரத்திலேயே ஜனங்களுடைய ஆதரவை இந்த சர்க்கார் இழக்க நேரிடுமென்றே நான் நிச்சயமாய்ச் சொல்லக்கூடும். நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. சீர்திருத்துவது சுலபமன்று. தொழிற் கட்சி தோற்றுவிட்ட போதிலும் மூன்றில் ஒரு பங்கு—70,00,000 வோட்டு—பெற்றிருக்கிறது என்பதை நினைவில் வைக்கவேண்டும். தொழிற் கட்சியின் பொதுவுடைமைத் தத்துவத்தை ஆதரிப்பவர் இந்நாட்டில் 70 லக்ஷம் பேர் இருக்கிறார்கள். இவர்கள் சும்மா இருக்கமாட்டார்கள். பணக்காரர்களுக்கு இதைப் பற்றி மிகுந்த கவலையுண்டு. சர்க்கார் ஒவ்வொரு அடியும் ஜாக்கிரதையாக எடுத்துவைக்குமென்பதும், எல்லோரையும் திருப்தி செய்ய முயலுமென்பதும் என் எண்ணம்.

இந்தியாவுக்குக் கூடிய வரையில் குறைந்ததைக் கொடுப்போமென்பது இவர்களுடைய கருத்தென்று தெரிகிறது. மகாநாடு முறிந்து போகட்டுமென்று நினைப்பதாய்த் தோன்றவில்லை. சேனையைத் தங்கள் கையில் வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள். பொருளாதார விஷயத்திலும் கொஞ்சம் அதிகாரம் வைத்துக் கொள்ள விரும்புகிறார்கள். நம்முடைய தரப்பில் எல்லாரும் ஒரு மனதான கோரிக்கையைத் தெரிவிப்பதற்காகக் காந்தியடிகள் முயலுகிறார். அவர் ஓயாமல் ஹிந்து-முஸ்லீம்களிடையில் ஒற்றுமை ஏற்படுத்த முயன்று கொண்டிருப்பதுடன், ஸப்ரூவுக்கும், மற்றவர்களுக்கு மிடையிலும் ராஜீய ஒற்றுமையை உண்டாக்கப் பிரயத்தினம் செய்து கொண்டிருக்கிறார். இத்தகைய ஒற்றுமையை உத்தேசித்து, காங்கிரஸ் காரியக்

கமிட்டி ஒத்துக்கொண்டால்—காங்கிரஸின் கோரிக்கைகளைக் குறைத்துக் கொள்ளவும் அவர் சம்மதிக்கிறார். அவருடைய முயற்சி பலனடையுமா என்று என்னால் கூற முடியாது. எல்லோரும் அவரை அறிவாளி என்று ஒப்புக் கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த அளவுக்குப் பலன் கிடைத்துத் தானிருக்கிறது.

பெந்தலுடன் நடந்த பேச்சு இடையில் நின்றிருந்தது. அவர்கள் நமது கஷ்டங்களைப் பார்த்துவிட்டு, அவற்றினால் தாங்கள் லாபம் அடைய விரும்பினார்கள் போலும்! ஆனால் மறுபடியும் பேச்சு ஆரம்பமாகவிருக்கிறது. நேற்று இரவு பெந்தலுடன் பேசிக்கொண்டிருந்தேன். "நாங்கள் உண்மையில் ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்புகிறோம்" என்றார்.

இந்தியா ஆபீஸ்காரர்களையும், இங்குள்ள வியாபாரிகளையும் ஒப்பச்செய்யும் முயற்சியில் நாங்கள் முனைந்திருக்கிறோம். வேலையை எங்களுக்குள் பிரித்துக் கொண்டிருக்கிறோம். ஸர். புருஷோத்தமதாஸுடன் நான் பொருளாதாரப் பிரச்னைகளை ஆராய்வதில் மூனைந்திருக்கிறேன். 'கிஷ்'ஷுடன் நாங்கள் ஒத்துப் போகாத வரையில், ஒன்றும் நடைபெறப் போவதில்லை என்று பெந்தல் சொன்னார். 'கிஷ்' இந்தியா ஆபீஸின் பொருளாதாரக் காரியதரிசி. பெந்தல் நமது ஒத்துழைப்பை விரும்புகிறாரென்று அவருடைய பேச்சுக்களிலிருந்து தெரிகிறது. உண்மை என்னவெனில், நமது ஒத்துழைப்பில்லாவிடில்,நாணயமாற்றும் செலாவணியும் நிலைத்திராது என்ற பயம் அவர்களுக்கிருக்கிறது. உதவி செய்வதற்கு நான் எப்பொழுதும் சித்தமாயிருப்பதாக பெந்தலிடம் சொன்னேன்.

அடுத்த வாரத்தில் இங்குள்ள பொருளாதார நிபுணர்களுடனும், இந்தியா ஆபீஸ்காரர்களுடனும் வெகுவாகப் பேச்சு வார்த்தை நடைபெறுமென்று தோன்றுகிறது.

மகாநாடு முறிந்து போகாதிருந்தால் நவம்பர் முடியும் வரையில் வேலையிருக்கும். வெளிக்கு ஒன்றும் நடைபெறுவதாய்த் தெரியாவிடிலும், உள்ளுக்குள், மெதுவாக வேனும், வேலைநடந்து கொண்டுதா னிருக்கிறது. மகாநாடு முறிந்தாலும், இப்பொழுது செய்த வேலையை மீண்டும் செய்ய நேரிடாதென்கிறவரைக்கும் லாபமே.

இப்பொழுதெல்லாம் காந்தியடிகள் தினம் மூன்று மணிக்கதிகமாகத் தூங்குவதில்லை. வேலைக்கு மேல் வேலை வந்து கொண்டே யிருக்கிறது. "தினமும் குறைந்தது எட்டு மணி தூங்க விரும்புகிறேன். ஆனல் மூன்று மணிக்கதிகம் கிடைக்க வில்லை" என்ருர். வட்டமேஜை மகாநாட்டுக் கமிட்டிக் கூட்டத்தில் உட்கார்ந்தபடி கண்ணயர்கிருர்! வாரமுடிவில் லண்டனைவிட்டு எங்காவது வெளியே போர்கிருர். ஒரு சமயம் ஒரு பாதிரியாரின் வீட்டிலும், ஒரு சமயம் ஈசுவர பக்தர் ஒருவர் வீட்டிலும் தங்குகிருர். சித்திரம் எழுதுவோர், சிலை செய்வோரின் எண்ணிக்கை குறைந்து விட்டது; பலருக்குத் திருப்தி யுண்டாகி விட்டது போல் தோன்றுகிறது. இதுவரையில் காந்தியடிகள் கையோடு கொண்டு வந்த துணிகளையே வைத்துக் கொண்டிருக்கிருர். குளிரை இவர் எப்படிச் சகிக்கிருர் என்பது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

[29]

நாணய மாற்று விவாதம்

லண்டன்

30—10—31

நேற்று இந்தியா ஆபீஸில் நாணயமாற்று விஷயமாக மறுபடியும் கூட்டம் நடந்தது. பிளாக்கெட், ஸ்ட்ராகோஷ் இருவரும் வந்திருந்தனர். நமது தரப்பில் ஸர். புருஷோத்தமதாஸ், காந்தியடிகள், ஆசிரியர் ஷா, ஜோஷி, நான் ஆகியோர் இருந்தோம். சிறிய கூட்ட மாகையால், நல்ல பயன் கிட்டிற்று. இருந்தவர்கள் ஒளிக்காமல் பேசினூர்கள். ஸ்ட்ராகோஷ் பழைய பல்லவியையே பாடினூர்; பிளாக்கெட் மிகவும் சாதுர்யமாக அவரது வாயை அடக்கி விட்டார். இதைப் பார்த்து எங்களுக்கு ஆச்சரியமும், திருப்தியும் உண்டாயிற்று. "இந்தியாவில் இப்பொழுது பொருள்களின் விலை அதிகரித்தல் நலமாகும். எல்லாப் பொருள்களினுடைய மதிப்பும் 40 சத விகிதம் உயர வேண்டு

மென்று நான் விரும்புகிறேன்" என்று பிளாக்கெட் சொன்னார். ஆனால் விலையை உயர்த்துவது எப்படி என்று சொல்லவில்லை. "ரூபாயை இப்பொழுது தன் வழியில் போக விடுங்கள். வேண்டிய அளவு தங்கம் சேர்ந்த பின்னர், அதை ஷில்லிங்குடன் இணைத்து விடலாம்" என்று நான் சொன்னேன். அவர் இதற்குச் சம்மதிக்கவில்லை. அவர்களுடன் தனியாகப் பேசும்படி காந்தியடிகளிடம் கூறினேன். அடுத்த செவ்வாயன்று ஸ்ட்ராகோஷை நான் சாப்பாட்டிற்கு அழைத்திருக்கிறேன். பிளாக்கெட்டையும் அழைக்கப் போகிறேன். பிளாக்கெட் 'பாங்க் ஆப் இங்கிலாங்'தின் டைரக்டர். அவர் 34 சத விகிதம் இங்கிலாந்தில் பொருள் விலை உயரவேண்டுமென்று விரும்புகிறார்.

நேற்று மீண்டும் பெந்தலுடன் பேச்சு நடைபெற்றது. பொருளாதார இலாகாவை நிர்வகிக்க ஒரு சபை அமைக்கப்பட வேண்டுமென்று அவர் சொன்னார். நாங்கள் சம்மதிக்கவில்லை. அவர் இன்னும் வழிக்கு வரவில்லை என்று இதிலிருந்து புலப்படுகிறது.

லண்டனில் காந்திஜி

லண்டனில் காந்திஜி

[30]

மதில்மேல் பூனை

லண்டன்

3—11—31

ஹோரார் அரசியல் நிர்மாண சபையின் வேலைகளில் அதிக சிரத்தை காட்ட ஆரம்பித்திருக்கிறார். ஒரு வாரத்தில் நிலைமை தெளிவு பெறலாம்.

காந்தியடிகள் தம் வரையில் முஸ்லீம்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தயார்; ஆனால் அவருடைய நிபந்தனைகள் வருமாறு:—

(1) ஒப்பந்தம் காங்கிரஸ் ஒப்பக் கூடியதாயிருக்க வேண்டும்.

(2) தேசிய முஸ்லீம்களும், சீக்கியர்களும் சம்மதிக்க வேண்டும்.

(3) முஸ்லீம்கள் அவருடைய எல்லா தேசீயக் கோரிக்கைகளையும் ஆதரிக்க வேண்டும்.

இன்னும், தீண்டாதார், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், சுதேச கிறிஸ்தவர் ஆகியவர்களுக்குத் தனித் தொகுதி அளிக்கக் கூடாதென்றும் மகாத்மாஜி கூறு கிறார். முஸ்லீம்கள் இதையாவது, இவருடைய மற்ற தேசியக் கோரிக்கைகளையாவது ஆதரிக்கவில்லை. ஆகையால் காந்தியடிகள் இப்பிரச்னையில் விசேஷ மான கவனம் செலுத்தவில்லை. தமது சக்தி எவ்வள வென்று அவருக்குத் தெரியும்; முஸ்லீம்களுக்குத் தம் மிடமிருந்து கிடைக்கும் அளவிற்கு சர்க்காரிட மிருந்தோ அல்லது பஞ்சாயத்தாரிடமிருந்தோ சலுகை கிடைக்காதென்பதும் அவருக்குத் தெரியும். "ஜட்ஜு களைக் கொண்டு இதை முடிவு செய்து விடுங்கள்" என்று அவர் சர்க்காரிடம் சொல்லிவிட்டார். இது முஸ்லீம்களுக்கு இஷ்டமில்லை. சர்க்கார் என்ன செய் யப் போகிறார்களென்று தெரியவில்லை.

இந்த வழக்கை காந்தியடிகளிடம் ஒப்புவிக் காதது பற்றி எனக்குச் சில ஹிந்துத் தலைவர்களிடம் குறையுண்டு. இதனால் ஹிந்துக்களும் காந்தியடிகளை நம்பவில்லை என்று சொல்வதற்கு இடமேற்பட்டு விட்டது. அப்படியானால் காந்தியடிகள் யாருடைய பிரதிநிதி? நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து "காந்தி யடிகள் செய்வது எங்களுக்குச் சம்மதம்" என்று சொல்லி யிருந்தால், ஹிந்து-முஸ்லீம் பிரச்னை தீர்ந் தாலும் தீராவிட்டாலும் நமது பலம் மிகவும் அதி கரித்திருக்கும். உலகத்தின் முன் நமது மதிப்பு எவ் வளவோ உயர்ந்திருக்கும். தங்களுடைய வாதத்தில் அடிப்படையாக உள்ள பலஹீனத்தை இவர்கள் அறியவில்லை.

காந்தியடிகள் பிரதம மந்திரியைச் சந்தித்தார். விசேஷமான பயன் ஒன்றும் உண்டாகவில்லை. நிலை மை நம்பிக்கை தருவதாயு மில்லை; அவ நம்பிக்கை கொள்ளச் செய்வதாயுமில்லை.

[31]

கண்ணுள்ள குருடர்கள்

லண்டன்

5—11—31

இந்த வாரத்தில் மாக்டோனல்டு, ஹோர், பால்டுவின் ஆகியவர்களுடன் காந்தியடிகள் பேசினர். இப்பேச்சுக்களின் பயன் என்னவெனில், அடுத்த செவ்வாய், புதன் கிழமைகளில் மந்திரி சபை கூடி இந்திய அரசியல் திட்டத்தை ஆலோசித்து முடிவு செய்யும். புதன் அல்லது வியாழனன்று சிறுபான்மை வகுப்பினர் கமிட்டியையோ, அரசியல் நிர்மாணக் கமிட்டியையோ, கூட்டி அதில் பிரதம மந்திரி தமது கருத்தைத் தெரிவிப்பார். அதன் பின்னர் நாம் அவருடைய யோசனையை ஏற்கவோ, மறுக்கவோ செய்யலாம்; அல்லது அதைப் பற்றிச் சர்ச்சை செய்யலாம். சர்ச்சை செய்து அதை மாற்றவும் இடமிருக்குமென்று நான் நம்புகிறேன். ஆனல் இது நிச்சய

மில்லை. ஹிந்து-முஸ்லீம் பிரச்னையைத் தீர்க்கவும் பிரதம மந்திரி முடிவான வழி கூறுவாராம். ஆகையால் அடுத்த வாரத்தில் நமது தலை எழுத்து நிர்ணயிக்கப்பட்டு விடுமென்று கூறலாம். நவம்பர் 20-25-ந் தேதிக்குள் நாம் இங்கிருந்து கிளம்பி விடலாம். என்ன நடக்குமென்று சொல்வது கஷ்டம்; ஆனால் சென்ற மகாநாட்டைக் காட்டிலும் அதிகமான அபிவிருத்தி ஒன்றும் இராதென்று ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. மாகாணங்களுக்கு உடனே சுதந்திர மளித்துவிட்டு, மத்திய சர்க்காரை அப்படியே வைத்திருப்பதென்ற மற்றொரு யோசனையும் அடி படுகிறது. இதை ஒரு நாளும் ஒப்புக் கொள்வதில்லை என்று நாங்கள் ஒரு முகமாகத் தீர்மானித்துவிட்டோம். இந்த சூழ்ச்சி முஸ்லீம்களும் ஐரோப்பியர்களும் சேர்ந்து செய்திருக்கிறார்கள்; இதனால் வருங் காலத்திலும் பஞ்சாப் தனக்கு மத்திய சுய ஆட்சி தேவையில்லை யென்று கத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும். இவ்விதமாகத் தாமதம் செய்துகொண்டே யிருக்கலாம்.

காந்தியடிகள், வாராந்தர ஓய்விற்காக இரண்டு தினங்கள் (சனியும், ஞாயிறும்) வெளியே போகிறார். இந்த வாரம் ஆக்ஸ்போர்டின் பக்கம் சுற்றப் போகிறார். அவருடன் பிரதம மந்திரியின் மகன், லோதியன் பிரபு, ஆசிரியர் கில்பர்ட்டு மர்ரே முதலிய பிரமுகர்களும் இருப்பார்கள்; இரண்டு நாட்களும் இவர்களிடையில் பேச்சு நடைபெறும்.

நேற்று காந்தியடிகள் வட்டமேஜை அங்கத்தினரைப் பற்றிப் பிரதம மந்திரியிடம் பின்வருமாறு சொன்னாராம்:—“இவர்கள் எல்லாம் நீங்கள் அழைத்த விருந்தாளிகள். ஜனப் பிரதிநிதிகள் என்ற உரிமை இவர்கள் கொண்டாடினார்களாயின் தேர்தலுக்கு நிற்கட்டும். அப்பொழுது இவர்களுக்கு எத்தனை வாக்

குக்கள் கிடைக்கின்றன, எனக்கு எவ்வளவு கிடைக்கின்றன வென்று பார்க்கலாம்.''

இவ்விதம் தாம் பிரதம மந்திரியிடம் சொன்னதாகச் சில தால்தோன்றித் தலைவர்களிடம் காந்திஜியே தெரிவித்தார். காந்தியடிகளுக்கு இவ்வாறு பேசும் பழக்கமில்லை. இவர்கள் அவருடைய மனதை எவ்விதம் புண்படச் செய்திருக்கிறார்கள் என்பது மேற்படி சம்பவத்திலிருந்து வெளியாகிறது. ஜாதி ஸ்தாபனங்களும், கக்ஷி ஸ்தாபனங்களும் சக்களத்தி போல் காங்கிரஸுக்குப் போட்டியாகக் கிளம்ப முயலுவது மிகவும் பரிதாபகரமாயிருக்கிறது. சுயராஜ்யத்திற்காகப் போர் நடத்தியது காங்கிரஸ். ஆனால் இங்கு வந்த பிறகு "ஹிந்துக்களுக்கு நான் பிரதிநிதி, நான்தான் பிரதிநிதி, காந்தியல்ல'' என்று கூவிக் கொண்டு சிலர் கூத்தாடுகிறார்கள். அப்படியாயின் காந்தியடிகள் யாருடைய பிரதிநிதி என்ற கேள்வி பிறப்பது இயற்கையே. சுதந்திரப் போர் நடந்தபொழுது இவர்கள் இருந்த இடமே தெரியவில்லை; இப்பொழுது காரியத்தைக் கெடுக்கவும், காந்தியடிகளை அவமானத்திற்குள்ளாக்கவும் இவர்கள் வந்திருக்கிறார்கள். காந்தியடிகள், "எனது மருந்து ஹிந்து சமூகத்திற்குப் பிடிக்கவில்லை; என் மருந்து எதுவென்றும்கூட அறிந்து கொள்ளவில்லை. முரட்டுத் தனத்திற்குப் பதில் முரட்டுத் தனம் என்று எண்ணுகிறது. என் மருந்தின் ரகசியத்தை ஹிந்து சமூகம் அறிந்து கொள்ளும் வரையில் ஹிந்து மகா சபையை என் வசப் படுத்துவது சாத்தியமில்லை'' என்றார்.

ஹிந்துக்களைப் பலமுள்ளவர்களாக்குதல், தீய பழக்க வழக்கங்களையும் தீண்டாமையையும் போக்குதல், கல்வியைப் பரப்புதல் ஆகியவை ஹிந்து மகா சபையின் வேலைகளா யிருக்க வேண்டும்; அரசியலில்

காங்கிரஸுடன் போட்டியிடுதல் பயங்கரமான பிசகு என்பது என் கருத்து. காங்கிரஸ் அப்படி என்ன கொள்ளை கொடுத்து விட்டது?

பால்டுவின் காந்தியடிகளிடம் "தாங்கள் கோருவது கிடைக்காது" என்று மறைக்காமல் சொல்லி விட்டார். நான் காந்திஜியிடம், "படிக்குப் பாதி கிடைப்பதா யிருந்தாலும், உங்களால்தான் அது கிடைக்க வேண்டும்; ஆகையால் போய்விடாதீர்கள்" என்றேன். "எனக்குத் தெரியும். ஓடமாட்டேன்" என்றார். கிடைத்தவரை கிடைக்கட்டும்; ஆனால் குறைவாகக் கிடைத்தால், அதில் நாம் திருப்தி யடைந்ததாக ஒப்புக்கொள்ளக் கூடாது என்பது அவருடைய கருத்து.

காஷ்மீரத்தின் விஷயத்தில் இங்கு முஸ்லீம் களின் கட்சிக்கு ஆதரவு பலமா யிருக்கிறது. ஆனால் இவர்கள் உண்மையில் ஹிந்துக்களின் கட்சியுமல்ல; முஸ்லீம்களின் கட்சியுமல்ல. முஸ்லீம்களுடைய முதுகைத் தட்டிக் கொடுத்து நம்மிடம் சண்டை யிடச் செய்வதுதான் இங்குள்ளவர்களின் நோக்கம்.

இரவில் நான் ஒரு விருந்திற்கு அழைக்கப்பட்டி ருந்தேன். இந்தியாவில் ஒரு சமயம் இருந்த போலீஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் என் பக்கத்தில் உட்கார்ந் திருந்தார். மறுபுறத்தில் அரசியல் இலாகா உத்தியோ கஸ்தர் ஒருவர் இருந்தார். இருவரும் ஆங்கிலேயர்கள். போலீஸ்காரர், "ஹிந்து-முஸ்லீம் சச்சரவு வேண்டு மென்று கிளப்பிவிடப் படுவதுதான். இச்சண்டை கிராமங்களில் கிடையாது; நான் கண்ணால் பார்த்திருக் கிறேன்" என்றார். அவர் எனக்கு ஒரு கதையும் சொன்னார். வடமேற்கு எல்லையிலிருந்து மூன்று நாள் பிர யாண தூரத்திலுள்ள ஒரு கோட்டையில் இவருடைய ஒரு படை இருந்தது. ஒரு வைசியன் சேனைக்கு

உணவுகள் கொடுத்து வந்தான். அவன் இறந்து விடவே, சேனையிலிருந்த முஸ்லீம் சிப்பாய்கள், உடலை தகனம் செய்வதற்கு இந்தியாவிற்கு அனுப்ப வேண்டு மென்றனர். ஆபீஸர், "மூன்று நாள் பிரயாண தூர மாயிற்றே! எப்படி அனுப்புவது? இங்கேயே புதைத்து விடுங்கள்" என்றார்.

ஆனால் முஸ்லீம்கள் அதற்கு இஷ்டப்படவில்லை. கடைசியில் அவர்கள் தங்கள் செலவிலேயே விறகு தயாரித்து, விமானம் கட்டி, பாண்டு வாத்தியம் முழங்கிக்கொண்டு, சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்றனர். "அச்சமயம் பல சிப்பாய்கள் அழுது கொண்டிருந்தார்கள்" என்று மேற்படி உத்தியோகஸ்தர் கூறி, "ஹிந்து—முஸ்லீம் சச்சரவு எங்கிருக்கிறது? சொல்லும்" என்று என்னைக் கேட்டார். "நீங்கள் உண்டாக்கியதுதான்!" என்றேன். பக்கத்திலிருந்த அரசியல் இலாகா அதிகாரி விருந்தில் அமர்ந்திருந்த ஒரு முஸ்லீம் தலைவரைச் சுட்டிக் காட்டி, "காஷ்மீரின் பாதிக் குழப்பத்திற்கு இவர் காரணம்" என்றார். விஷயம் என்ன வெனில், இங்கும் விஷமம் செய்வது சர்க்காரே. இது ஆபீஸர்களுக்குத் தெரியும், எல்லோருக்கும் தெரியும்; ஆனால் நமது ஆட்கள் மட்டும் கண்ணிருந்தும் குருடர்களா யிருக்கிறார்கள். தீண்டாதாருக்குத் தனித் தொகுதி கொடுப்பதை காந்தியடிகள் எதிர்க்கிறார். "இவர்களை நான் எப்படிப் பிரிந்து போக விடுவேன்?" என்கிறார்.

[32]

ஆண்டியும் அரசனும்.

லண்டன்

6—11—31

நேற்று காந்தியடிகளும் நாங்கள் எல்லோரும் சக்கரவர்த்தியின் விருந்தாளிகளா யிருந்தோம். விருந்தில் மொத்தம் 400 பேர் இருக்கலாம். பலர் தேசீய உடை அணிந்திருந்தனர். நான் தேசீய உடைகொண்டு வர வில்லை; ஆகையால் 'சிம்னி' ஹாட் தரித்துக் கொண்டு சென்றேன். மாளிகையில் ஒரே மின்சார வெளிச்சம்; கருப்பு உடுப்பு தரித்தவர்களின் கூட்டத்தில், முழங்காலுக்கு மேல் துணி அணிந்து, போர்வை போர்த்துக் கொண்டு காந்தியடிகள் வந்தது, அமாவாசையில் சந்திரன் உதித்தது போலிருந்தது. சக்கரவர்த்தியும், சக்கரவர்த்தினியும், பட்டாபிஷேக மண்டபத்தில் ஒரு பக்கத்தில் நின்று கொண்டிருந்தனர்; நாங்கள் ஒவ்வொருவராக அவர்களை வணங்கி விட்டுச் சென்றோம். எல்லோரும் வணங்கிவிட்டுச் சென்ற

பின், சக்கரவர்த்தி தம்பதிகள், சில முக்கியமான மனிதர்களை அழைத்துப் பேசத் துவக்கினர். முதலில் ஹைதராபாத்தின் மந்திரியும் பின்னர் முறையே மைசூர், பரோடாவின் மந்திரிகளும் அழைக்கப்பட்டனர். இதன் பின் காந்தியடிகள் அழைக்கப்பட்டார். நின்றபடியே சுமார் 7 நிமிஷம் பேச்சு நடைபெற்றது.

பேசினது பெரும்பாலும் சக்கரவர்த்தியே, காந்தியடிகள் நகைத்துக் கொண்டிருந்தார்; அதிகம் பேசவில்லை. பேச்சின் சுருக்கம் (நான் கேள்விப்பட்டபடி, பின் வருமாறு) :—

சக்கரவர்த்தி :—எனக்கு உங்களை நன்ருகத் தெரியும். நான் இளவரசனுகத் தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்றிருந்த பொழுது நீங்கள், இந்தியா மக்களின் சார்பில், எனக்கு வரவேற்புப் பத்திரம் அளித்தீர்கள். "ஜுலு" சண்டையிலும் நீங்கள் உதவி செய்தீர்கள். அதன் பிறகு, மகா யுத்தத்தில் நீங்களும் உங்களுடைய தர்மபத்தினியும் ரொம்பவும் உதவி புரிந்தீர்கள். அதன் பின்னர், உங்களுடைய வழி மாறி சத்தியாக்கிரகம் ஆரம்பித்து விட்டது மிகவும் வருத்தப்படவேண்டிய விஷயம். சர்க்கார் தங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்தியே ஆகவேண்டும் என்பது உங்களுக்கே தெரியும். சர்க்கார் ஆட்சி புரிந்துதானே ஆகவேண்டும்?

காந்தியடிகள் :—சக்கரவர்த்திக்குக் கேட்க நேரமிராது; நான் பதில் சொல்லவும் விரும்பவில்லை.

சக்கரவர்த்தி :—சரிதான்; ஆனுல் எப்படியும் ஆட்சிபுரிந்து தானே ஆகவேண்டும்?

பிறகு வங்காளத்தில் வெடிகுண்டு எறியப்படுவதைச் சக்கரவர்த்தி குறிப்பிட்டு "அது ரொம்ப ரொம்பத் தவருன காரியம்; அதனுல் லாபம் ஒன்றுமில்லை" என்ருர்.

காந்தியடிகள் :—நான் அதைத் தடுப்பதற்கு என்னால் கூடியவரை முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்.

சக்கரவர்த்தி :—உங்களுக்குக் குழந்தைகளிடம் மிகுந்த பற்று உண்டு என்று கேள்வி; இது உண்மை தானே?

காந்தியடிகள் :—நான் குழந்தைகளின் மத்தியில் தான் வசிக்கிறேன்.

காந்தியடிகள் சக்கரவர்த்தியைச் சந்தித்தது, தேசீயத்தின் ஒரு வெற்றியாகும். பாதி உடம்பில் உடை இல்லாத ஒரு மனிதர், சக்கரவர்த்தியைச் சந்தித்துப் பேசியது இதுதான் முதல் தடவை. அவருடன் காந்திகுல்லா அணிந்த மகாதேவதேசாய் வேறு இருந்தார். இதிலிருந்து ஆங்கில ஜாதியின் ஒரு விசேஷ குணம் தெரிய வருகிறது. ஆங்கிலேயர்கள் வியாபாரிகள்; அவர்களுடைய சுபாவத்தில் சண்டை விருப்பம் கிடையாது. வேல்ஸ் இளவரசரை பஹிஷ்காரம் செய்தவர் காந்தியடிகள்; ஆயினும் சக்கரவர்த்தி அவரை ஸௌஜன்யமாகச் சந்தித்துப் பேசினார். ரஜபுத்திரர்களுடைய சரித்திரத்தில் வேறு விதமான உதாரணங்களே கிடைக்கும். உதயபூர் மஹாராணா ஆல்வார் மன்னரை ஒரு தடவையாவது "மஹாராஜா" என்று அழைக்கவில்லை. "ஆல்வார் டாகூர் ஸாகேப்" என்றே சொல்லி வந்தார். ஆங்கிலேய சர்க்கார் ஆல்வார் மன்னருக்கு பீரங்கி மரியாதை தந்தது, 'ஹிஸ் ஹைனஸ்' என்றும் அழைத்தது. இறக்கும் தறுவாயில் ஜய்பூர் மஹாராஜா பிடிவாதத்தைச் சிறிது தளர்த்தினார். ஆனால் உதயபூர் ராணா மட்டும் கொஞ்சங்கூட அசையவேயில்லை.

[33]

தலைக்குத் தலை ராஜா

லண்டன்

12—11—31

ஹிந்து-முஸ்லீம் பிரச்னையில் ஒன்றும் மாறுபாடில்லை. காந்தியடிகள் இதைப்பற்றிப் பேசவே மறுக்கிறார். யாராவது பேச வந்தால் "என் நேரத்தைக் கெடுக்காதீர்கள்" என்று கூறுகிறார். மீண்டும் பேசுவதற்கு முஸ்லீம்கள் விரும்பினார்கள்; ஆனால் காந்தியடிகள் இடம் தரவில்லை. அவர் முஸ்லீம்கள், சீக்கியர் இவர்களைத் தவிர, மற்ற ஆங்கிலேயர், கிறிஸ்தவர், ஆங்கிலோ-இந்தியர், தீண்டாதார், ஜமீன்தார்கள், வியாபாரிகள், தொழிலாளர்கள் ஆகிய எவருக்கும் தனி ஸ்தானங்கள் ஒதுக்கப்படுவதை விரும்பவில்லை. முஸ்லீம்கள் வெளிக்குத் தீண்டாதார் பட்சம் பேசுவதுபோல் காட்டிக்கொள்கிறார்கள். உண்மையென்னவென்றால், ஆங்கிலேயர்களுக்கு ஸ்தானம்

ஒதுக்கக் கூடாதென்று சொல்ல யாருக்கும் தைரிய மில்லை. எவராவது தீண்டாதாருக்காகப் பரிந்து பேச வந்தால், காந்தியடிகளுக்குக் கோப முண்டாகி விடுகிறது. "உமக்குத் தீண்டாதாரைப் பற்றி என்ன தெரியும்? தீண்டாதாரின் தலைவன் நான்" என்கிறார்.

முஸ்லீம்கள் (பஞ்சாப் மாகாணத்தில்) 51-க்குப் பதிலாக 50 விகிதம் ஒத்துக்கொள்ள சம்மதிப்ப தாய்க் கேள்வி. காந்தியடிகள் "51 வீதமே எடுத் துக்கொண்டு போங்கள்; ஆனால் வேறு யாருக்கும் ஒன்றும் கிட்டாது. நான் இந்தியாவைப் பங்கு போட வரவில்லை. முஸ்லீம்களையும், சீக்கியர்களையும் நான் எப்படியோ சகித்துக் கொள்கிறேன். அதற்கு மேலே ஒன்றும் முடியாது!" என்கிறார். இதில் விசித்திரம் என்னவெனில் ஹிந்துக்களிலேயே சிலர் தீண்டாதாருக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களும் தனித் தொகுதி உரிமையும் தரவேண்டு மென்று கூறுகிறார்கள். அதாவது ஹிந்து ஜாதியைப் பிளந்து விட விரும்புகிறார்கள்!

சென்ற ஞாயிறன்று ஆக்ஸ்போர்டில் காந்தியடி களும், லோதியன் பிரபு, மாக்டோனல்டின் மகன், இர்வினுடைய பிரதிநிதி ஆகியோரும் கூடினார்கள். உண்மையான மாகாண சுயராஜ்யத்தை உடனே ஸ்தாபிக்கும்படியான திட்டம் ஒன்றை காந்தியடி கள் சமர்ப்பித்தார்.

"மத்திய சுய ஆட்சித் திட்டம் இப்பொழுதே தயாராகா விட்டாலும், அதன் உருவம் இத்தகைய தென்று தீர்மானிக்கப் படட்டும். மாகாண சட்ட சபைகளுக்குப் புதிய தேர்தல்கள் நடக்கட்டும். அவ் வாறு தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் தங்களுக்குள் சிலரைப் பொறுக்கிப் புதிய வட்டமேஜை மகாநாட் டிற்கு அனுப்பட்டும். அந்த வட்ட மேஜை மகா நாடு இப்பொழுதே தீர்மானிக்கப்படும் உருவை

யொட்டி மத்திய ஆட்சியைச் செவ்வனே அமைக் கட்டும்"—இதுதான் காந்திஜியின் திட்டம்.

ஸாப்ரூ முதலியோர் இதைக் கேட்டு பயந்து விட்டனர். சர்க்கார் பெயரளவில் சுயராஜ்யத்தைத் தந்து மத்திய சுய ஆட்சியை ஒத்திப் போட்டுக் கொண்டே இருக்கலாம் என்று அவர்கள் பயப்படு கிருர்கள். அவர்களுடைய பயமும் நியாயமானது தான்; ஏனெனில் சர்க்காரின் போக்கு அவ்வளவு லட்சணமாய்த்தான் இருக்கிறது.

காந்தியடிகளோ, "சர்க்கார் முன்னேறச் சம்மதி யாவிடில், எனக்கு என்ன பயம்? அவர்களுடன் போராட்டம் ஆரம்பித்து விடுகிறேன். உங்களுக்குத் தான் நம்பிக்கை யில்லை; அதனுலேயே நீங்கள் இவ் வாறு பேசுகிறீர்கள்" என்கிருர். காந்தியடிகள் வட்ட மேஜை மகாநாட்டில் அலுப்படைந்துவிட் டார். இது பகல் வேஷதாரிகளின் கூட்டம்போல் ஆகிவிட்டது. எல்லோரும் தனித் தனியாக ஏதோ பல்லவி பாடுகிருர்கள். ஒருவருக்கும் இந்தியாவின் நினைவில்லை. தற்சமயம் வட்டமேஜை மகாநாட்டின் நிலைமை, இருபது வாத்தியக்காரர்கள் வேறு வேறு வாத்தியங்களில், வேறு வேறு ஸ்வரத்தில், வெவ் வேறு பாட்டை ஒரே சமயத்தில் வாசிப்பது போலி ருக்கிறது. காந்தியடிகளின் முறை தூர திருஷ்டி வாய்ந்தது. ஆனுல் நமது சக்தியை நாம் காத்து உபயோகித்தாலல்லவா அது பயன் தரும்?

இந்த வாரத்தில் ஹோருடன் பேச்சு நடைபெற விருந்தது. ஆனுல் ஹோருக்கு உடம்பு சரியாயில்லை. இன்று ஹோரும் காந்தியடிகளும் பேசுவார்கள். பண்டித்ஜிக்கும் பிரதம மந்திரிக்கு மிடையில் நேற்று பேச்சு நடந்தது. அவரிடமிருந்து, "மத்திய ஆட்சி யைப் பற்றி வாக்குக் கொடுக்கப்படும்; மாகாண சுய ஆட்சியை இப்பொழுதே அளித்து, வருகிற ஆகஸ்ட்

மாதத்திற்குள் சட்டம் தயாரிக்கப்பட்டுவிடும்" என்று தெரியவந்தது. "உங்கள் சண்டையை நீங்கள் தீர்த்துக் கொள்ள முடியாதிருக்கையில் எங்களிடம் என்ன எதிர்பார்க்கலாம்?" என்று பிரதம மந்திரி கேட்டாராம். இர்வினும் புருஷோத்தமதாஸிடம், "உங்களுடைய சண்டைகளே உங்கள் காரியத்தைக் கெடுத்து விட்டன" என்றாராம். இது உண்மையே; ஆனால் சர்க்காரின் ஆட்களான சிலர் தங்கள் வழியே செல்லுவதில் பிடிவாதமாயிருந்து சமாதானம் ஆகாமல் தடுத்துக் கொண்டிருப்பதும் உண்மையே ஆகும். இவர்கள் தலைவர்களாகவும் கருதப்படுகிறார்கள். இப்பொழுது இன்னும் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. முஸ்லீம்கள், தீண்டாதவர், ஆங்கிலேயர், ஆங்கிலோ-இந்தியர், கிறிஸ்தவர் ஆகியோர் தங்களுக்குள் ஒரு ஒப்பந்தம் தயாரித்து வருகிறார்கள். இதிலும் ஆங்கிலேயர் தமது சக்தியை நிலைநிறுத்த விரும்புகிறார்கள். ஆகையால் இன்னும் ஒப்பந்தம் ஆகவில்லை. எவ்வித ஒப்பந்தமும் ஆகுமென்ற நம்பிக்கை எனக்கில்லை. எங்களது தலைவர் ஜமால் முகம்மது ஸாகேப் ஓடியாடிப் பார்க்கிறார். தமது நல்ல சுபாவத்தினால் பலரை வசப்படுத்தியு மிருக்கிறார். "ஜின்னா தேசீயவாதி தான்; நீங்கள் இல்லாத சமயங்களில் முஸ்லீம்களிடம் ரொம்பவும் சண்டை யிடுகிறார்" என்கிறார் ஜமால்.

இவ்விடம் வந்து இன்றைக்கு இரண்டு மாதங்களாகி விட்டன; எள்ளளவு கூட முன்னேற வில்லை. நடக்கப் போவதும் தெரியவில்லை. வட்ட மேஜை மகாநாட்டின் இந்த இரண்டு மாதத்துச் சரித்திரம் மிகவும் வருத்தந் தருவதாகும். நாம் கவைக் குதவாதவர்களென்பதை இங்கு வந்து நம்மவர்கள் ருசுப்படுத்தி விட்டார்கள். ஒற்றுமையோ இல்லை. ஒவ்வொருவரும் தத்தம் பெருமைக்கு உழைக்கிறார்கள்.

இந்த நோயிற் சிக்காதவர் ஒருவராவது உண்டோ என்பது சந்தேகமே. "காந்தியடிகள் நமது தலைவர்; அவருக்கு நாம் துணையாயிருத்தல் வேண்டும்" என்ற கவலை ஒருவருக்கு மில்லை. இதன் காரணம் இவர்க ளெல்லோரும் சர்க்காரால் நியமனம் பெற்றவர்களா யிருப்பதேயாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டி ருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிராது. இர்வின்-காந்தி ஒப்பந்த சமயத்தில் கண்ட காட்சியை இப் பொழுது காண முடியவில்லை. அப்போது வல்லபாய், ஜவாஹர்லால் ஆகியோரில் ஒருவராவது, ராஜப் பிரதி நிதியின் வீட்டை எட்டியும் பார்க்கவில்லை; எல்லாப் பொறுப்பையும் காந்தியடிகளிடம் ஒப்புவித்திருந் தார்கள். இங்கேயோ காந்தியடிகள் பிரதம மந்திரி யைச் சந்தித்தவுடனே, முஸ்லீம்களின் தலைவர் ஆகாகான் பிரதம மந்திரியைப் பார்க்கச் செல்லு கிறார். பிறகு தீண்டாதாரின் தலைவர் அம்பேட்கார், சீக்கியர் தலைவர் உஜ்ஜால்சிங் ஆகியோர் பார்க்கப் போகிறார்கள்; மிதவாதிகளுடைய தலைவர் ஸப்ரூவும் போகிறார். இந்த சந்திப்புகளில் எல்லோரும் தனித் தனி அபிப்பிராயம் தெரிவித்துவிட்டு வருகிறார்கள். முன் ஒரு சமயத்திலும் வெளியாகாத விதத்தில் இப் பொழுது நமது வேற்றுமை வெளியாகி யிருக்கிறது. பிரிட்டிஷ் தந்திரத்திற்கு முழு வெற்றி கிட்டியிருக் கிறது. எல்லா விஷயங்களையும் விவரிக்கப் போகும் பொழுது, துக்கம் தாளவில்லை. ஏனெனில் தற்பெரு மையாகிய மோக வலையில் சிக்குண்டு, நமது மா பெருந் தலைவர்கள் ஒற்றுமையைக் குலைத்த கதை மிகவும் துக்க மளிப்பதாகும். வருங் காலத்தில் எப்பொழுதாவது ஒப்பந்தப் பேச்சு எழுந்தால், நிய மிக்கப்படும் பிரதிநிதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களா யிருத்தல் வேண்டுமென்பது முதல் நிபந்தனையா யிருத்தல் அவசியம்; அப்படிவரும் பிரதிநிதிகள் ஒரே சூத்திரத்தில் கட்டுப்பட்டிருப்பார்

கள். குறைந்த பட்சம் காங்கிரஸுக்குப் பெரும்பான்மையாவது இருக்கும். இப்போது இங்குள்ள நிலைமை, "தலைக்குத் தலை ராஜா" என்றிருக்கிறது.

பொருளாதார விஷயங்களைப் பற்றி பெந்தலுக்கும் எங்களுக்கு மிடையில் விட்டு விட்டுப் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. இதுவரையில் இங்கிலாந்து பாங்கியின் நிர்வாகஸ்தர்களுடன் பேச்சு நடக்கவில்லை; ஆனால் இங்குள்ள முதலாளிகள் நாம் அவர்களிடம் கடன் கேட்காதிருந்தால், நமது பொருளாதார விஷயத்தில் தங்களுக்கு ஒரு அதிகாரமும் வேண்டாம் என்று கூறுவதாக பெந்தலும் கைடோவும் சொல்கின்றனர்.

[34]

சுலப வெற்றி—எதிரிக்கு!

லண்டன்

13-11-31

நேற்று காந்தியடிகள் ஹோரைச் சந்தித்தார். நிலைமை வெட்ட வெளிச்சமாகிவிட்டது. மாகாண சுய ஆட்சியைத் தவிர வேறு ஒன்றும் கிடைக்கப் போவதில்லை. "மற்ற விஷயங்களை விசாரித்து, செய்யவேண்டிய தென்னவென்று தீர்மானிக்கப் படும்" என்று ஹோர் சொன்னார். "விசாரணையில் இரண்டு, மூன்று வருஷங்களாயினும் ஆகலா மல்லவா?" என்று காந்தியடிகள் கேட்டார். அவர் "ஆம், ஆகலாம்" என்றார். "கடைசியில் ஒன்றும் கொடுக்க வேண்டா மென்றும் நிச்சயமாகலாமல் லவா?" என்று கேட்டார் காந்தியடிகள். "ஆகலாம்" என்று கூறினார் ஹோர். ஆகவே, இந்த வ. மே. மகா நாட்டின் பயன் இதுதான்! காந்தியடிகள், "நல்லது!

நாம் பரஸ்பரம் சிநேக பங்கமில்லாமல் பிரிவோம்—இதுவே நான் உண்மையில் விரும்புவது" என்ருர். வெகு சீக்கிரத்தில்—ஒரு வாரத்திற்குள்ளேயே—காந்தியடிகள் இங்கிருந்து புறப்படப்போவதாய்ச் சொல்லப்படுகிறது. ஏற்பாடுகள் தொடங்கிவிட்டன.

இன்று சிறுபான்மைக் கமிட்டியின் கூட்டம். "இவ் விஷயத்தைத் தீர்மானிக்கும் பொறுப்பை எனக்குத் தருவதாயின், முறைப்படி அவரவர்களுடைய சம்மதத்தை என்னிடம் எழுதிக் கொடுங்கள்" என்ருர் பிரதம மந்திரி. அரசியல் நிர்ணயக் கமிட்டியின் கூட்டம் அடுத்த வாரம் நடைபெறுமென்றும் தெரிவித்தார். இது எதற்காக? மத்திய சுய ஆட்சி ஏற்படுவது அசாத்தியமா யிருக்கையில் இந்தக் கூட்டம் எதற்கு? இதிலிருந்து, ஹோர் கூறியது முடிவான வார்த்தையல்லவென்று இன்னும் சிலர் நம்பிக்கை வைத்திருக்கிருர்கள்; நிலைமை அவ்வளவு ஏமாற்றந் தருவதாயில்லை என்கிருர்கள். ஆனல் நம்பிக்கைக்கு இடம் ரொம்பக் குறைவாகவே இருக்கிறது. சென்ற மாதத்தில் வில்லிங்டன், ஸப்ரு—ஜயகரிடம் "தற்சமயத்தில் மாகாண சுய ஆட்சி கிடைத்து விட்டால் போதாதா?" என்ருராம். இவ்வளவு நாட்களாக மனதில் இருந்தது; இப்பொழுது வெளிப்பட ஆரம்பித்துவிட்டது.

இர்வினும், "என்னல் ஆவது யாதொன்றுமில்லை" என்று கையை விரித்துவிட்டார். அவரை எல்லோரும் "இன்னமும் பஹிஷ்காரம் நடைபெறுகிறதே! நீரும் காந்தியும் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு என்ன மதிப்பு?" என்று கேட்கிருர்களாம்.

சிறுபான்மை வகுப்புக்களிடையில் பேசப்பட்டு வந்த ஒப்பந்தத்தின் நகல் வெளிவந்து விட்டது. இதில் சீக்கியர் சேரவில்லை. இந்தியக் கிறிஸ்தவர்

களின் இரு பிரதிநிதிகளில் ஒருவரான டாக்டர் தத்தர், இது சம்பந்தமான பேச்சுக்களிலாவது, முடிவிலாவது சேரவில்லை. இந்த ஒப்பந்தத்தில் ஆக்ஷேபிக்கத்தக்க அம்சங்களிருப்பது உண்மை. ஆயினும், இதைத்திருத்தவே முடியாதென்று எவ்வாறு சொல்வது? வெவ்வேறு கூட்டங்களின் தலைவர்களென இங்கு வந்திருப்போர், இந்த முக்கியமான சமயத்தில் தங்கள், தங்கள் குறுகிய பாதைகளை விட்டு, தேசிய ஒற்றுமை என்ற ராஜ மார்க்கத்தில் செல்ல முடியவில்லை என்ற விஷயம் நமக்கு அவமானத்தைத் தருவதாகும். ஆனால் ஆலோசனை செய்து பார்ப்போமாயின், சிறுபான்மையோரின் இந்தக் கூட்டுக்கோரிக்கைகளும், ஒப்பந்தம் ஆகாமல் தடுக்கக்கூடிய அவ்வளவு பயங்கரமாயில்லை. ஐரோப்பியர்கள் கேட்குமவ்வளவு ஸ்தானங்கள் அவர்களுக்குக் கிடைப்பது சாத்தியமில்லை. அவர்களுக்கும் இது தெரியுமாதலால், குறைத்தாலும் அவர்கள் ஒப்புக் கொள்வார்கள். தீண்டாதவர்களிடம், "உங்களுக்கு இவ்வளவு ஸ்தானங்கள் தரப்படும்; ஆனால் நீங்கள் கூட்டுத் தொகுதி முறையை ஏற்கவேண்டும்" என்று கூறினால் அவர்களும் சம்மதிப்பார்கள். கிறிஸ்தவர்களுக்கும், சட்டைக்காரர்களுக்கும் ஏதாவதுகொடுக்க வேண்டியதுதான். பஞ்சாப், வங்காளம் இரண்டின் விஷயம் பாக்கி. முஸ்லீம்களுக்கு 51 சத விகிதம் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம்; அதனால் என்ன ஆகிவிடும்! பிரளயமா வந்துவிடும்? பாதிக்குப் பாதி என்றும் மத்தியஸ்தமாகத் தீர்த்துக் கொள்ளலாம். முஸ்லீம்களும், ஆங்கிலேயர்களும் சேர்ந்து ஹிந்துக்கள்—சீக்கியரை மிஞ்சி விடுவார்கள் என்று கூறினால், எல்லா முஸ்லீம்களும் ஒரு முகமாக வாக்களிப்பார்கள் என்பது என்ன நிச்சயம் என்று வாதிக்கலாமல்லவா? ராஜ தந்திரம், தூரதிருஷ்டி ஆகிய குணங்களை நம்மை ஆளுவோரிடம் காணுவ

தற்கு நமது தலைவர்கள் ஆசைப்படுகிறார்கள். இவர்கள் இந்த சந்தர்ப்பத்திலாவது மேற்படி குணங்கள் தங்களிடமும் உண்டு என்பதைக் காட்டவேண்டாமா? இந்தியா போன்ற மாபெரும் நாட்டின் வருங்காலத்தை அமைக்கக் கிளம்பியிருக்கிறார்கள்; ஆனால் பிடிவாதம், துவேஷம், குறுகிய மனப்பான்மை, தற்பெருமை ஆகியவற்றை இமைப் பொழுதாவது விடத்தயாராயில்லை.

இந்தத் தலைவர்கள் பிரிட்டிஷ் ராஜதந்திரத்திற்கு வழியை நன்கு செப்பனிட்டு வைத்து விட்டார்கள். நாம் ஒற்றுமையுடனிருந்தால் பிரிட்டிஷ் ராஜதந்திரத்துக்கு இத்தகைய பரிபூரண வெற்றி கிட்டியிராது. எந்த முக்கியமான விஷயங்களைப்பற்றி பிரிட்டிஷ் சர்க்காருடனும், பிரபுக்களுடனும் கிரந்தியடிகள் பேச வேண்டியது அவசியமோ, அவைகளைப்பற்றி அவர்களுடன் பேச முடியவில்லை. நமது எதிரிகளுக்கு இந்த வெற்றி வெகு சுலபமாகவே கிடைத்துவிட்டது.

[35]

காந்தியடிகளின் உறுதி

லண்டன்

16—11—31

வாடிய நம்பிக்கைப் பயிர் மீண்டும் சிறிது தளிர்த்திருக்கிறது. ஆங்கிலேய வியாபாரிகள் இங்கு மங்கும் ஓட ஆரபித்திருக்கிருர்கள்; பேச்சுக்கள் நடைபெற வேண்டு மென்னும் நோக்குடன் சர்க்காரின் சார்பிலும் முயற்சி நடைபெறுகிறது. நமது எதிரிகள் எவ்வளவு தூரம் உண்மையுடன் பேசுகிருர்களென்று சொல்வது கடினம். மகா நாடு முறிந்துவிடுமென்ற சந்தேகத்தில் அவர்கள் சிறிது வெட்கியும், சிறிது பயந்து மிருக்கிருர்கள். அவர்களுடைய நோக்கம் என்னவென்று சீக்கிரத்தில் புலப்பட்டு விடும்.

பெந்தல் நேற்றுத் தாமாகவே என்னைப் பார்க்க வந்தார்; சிறிது கவலை கொண்டவர் போலிருந்தார். சச்சரவிற்கு ஹோர்தான் காரணம் என்ருர். “அவர்

தான் எதிர்க்கிருர். ஆனால் எங்கள் கட்சியின் சார்பில் அவருக்கு, 'மகாநாடு முறிந்துபோனால், அதன் விளைவு மிகவும் தீங்காய் முடியும்; நாங்கள் அதற்குச் சம்மதியோம்' என்று எழுதியிருக்கிறேம்" என்ருர். "மந்திரி சபையில் ஹோருக்கு நல்ல செல்வாக்குண்டு; ஆனால் அவரிஷ்டப்படி நடைபெறப் போவதில்லை" என்றும் பெந்தல் கூறினர். "முஸ்லீம்கள்—தீண்டாதாருடைய பிரதிநிதிகளுடன் நீங்கள் ஒப்பந்தம் செய்துகொண்டு பிரச்னையை இன்னும் சிக்கலாக்கி விட்டீர்கள்" என்றேன். "நாங்கள் ஒன்றும் ஒப்பந்தம் செய்யவில்லை. இவ்வளவு ஸ்தானங்கள் கிட்டவேண்டுமென்பதைத் தெரிவித்து ஒரு விதமான விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறேம்" என்ருர். "உங்களுக்கு ஸ்தானங்கள் வேறு வகையிலும் கிடைக்குமே" என்று நான் கூறவும், "எப்படி என்று சொல்லுங்கள், அதையும் யோசிக்கிறேம்" என்ருர். "நீங்கள் முதலில் ஹிந்து—முஸ்லீம்—சீக்கியப் பிரச்னையைத் தீர்க்கும் வேலையைப் பிரதம மந்திரியிடம் ஒப்புவிப்பதற்கு முஸ்லீம்களைச் சம்மதிக்கச் செய்யுங்கள்" என்றேன். "முஸ்லீம்கள் மற்றவர்களை விட்டு விட்டு, தங்கள் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ள ஒரு பொழுதும் சம்மதிக்க மாட்டார்கள்" என்று சொன்னர். கடைசியில், பெந்தலும் ஸர் ஹூபர்ட் காரும் என்னுடைய ஜாகையில் காந்தியடிகளைச் சந்திப்பதென்று முடிவாயிற்று.

இரவு 9½ மணிக்கு எல்லோரும் கூடினர். காந்தியடிகள் ஆங்கிலேயருக்கு ஸ்தானங்கள் ஒதுக்கக் கண்டிப்பாக மறுத்து விட்டார். நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன்; அவர் அசையவில்லை. ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமானல் ஆங்கிலேயர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்க வேண்டியதே என்பது என் கருத்து; இதனல் அவர்களின் மூலமாய் நமக்கு உதவி

கிட்டும். ஆனால் காந்தியடிகளின் கருத்து வேறு. அவர், நமக்குள் ஒத்துப் பேசி, கூட்டுத் தொகுதி முறைப்படி மாகாண வாரியாக ஆங்கிலேயருக்குக் கிடைக்கவேண்டிய ஸ்தானங்களை நிச்சயிக்க விரும்புகிறார்; சட்டத்தில் இதைப் புகுத்துவது அவருக்கு விருப்பமில்லை. "காங்கிரஸ் எழுதிக் கொடுக்கத் தயார்; ஆங்கிலேயர்கள் அதை நம்பித்தான் ஆக வேண்டும்" என்கிறார். "வங்காளத்தில் எங்களைக் கொலை செய்வதில் முனைந்திருப்பவர்கள் எங்களிடம் அத்தகைய அனுதாபமோ, நியாய புத்தியோ காட்டுவார்களா?" என்றார் பெந்தல். ஆனால் காந்தியடிகள் கடைசிவரையில், "நாங்கள் ஆங்கிலேயர்கள் விஷயத்தில் நியாயமாக நடக்கவே விரும்புகிறோம்: ஆனால் நமக்குள் ஏற்படும் ஒப்பந்தம் சட்டத்தின் உதவியின்றியே நடைபெறும்" என்றே சொல்லிக் கொண்டிருந்தார். அன்று காந்தியடிகளுடைய மௌன தினம்; ஆகையால் அவர் தமது அபிப்பிராயங்களை எழுதிக் காண்பித்துக் கொண்டிருந்தார். இன்று இரவு மீண்டும் பேச்சு நடைபெறும். காந்தியடிகளின் கருத்தை ஆங்கிலேயர்கள் ஒப்புவார்களென்று நான் எதிர்பார்க்கவில்லை.

லார்ட் கைடோ ஓடி ஆடிக் கொண்டிருக்கிறார். அவருக்கு ரீடிங் பிரபுவிடம் நல்ல செல்வாக்கு; அவரிடம் "இது என்ன விபரீதம் நடந்து கொண்டிருக்கிறது?" என்று கேட்டார். சத்தியாக்கிரகம் நடைபெறலாம் என்ற எண்ணம் எல்லோரையும் கவலையிலாழ்த்தி யிருக்கிறது. வியாபாரிகளுக்குத் தங்கள் வியாபாரத்தைப் பற்றிக் கவலை; இந்தியா மீண்டும் சத்தியாக்கிரகத்தைக் கையாளுமாயின் தங்கள் வியாபாரம் முற்றும் அழிந்து விடுமென்று அவர்களுக்குத் தெரியும். அவர்களுடைய வார்த்தைக்கு இங்குள்ள அதிகாரிகளிடையே மதிப்புண்டு. நேற்று ஹோர்

காந்தியடிகளை அழைத்துத் தமது திட்டத்தை விளக்க முயன்றார். "அது மாகாண சுய ஆட்சியோடு நின்று விடாது" என்று கூறினார். இன்று அரசியல் கமிட்டியிலும் சில நம்பிக்கை தரும் பிரசங்கங்கள் நடைபெற்றன. ஸப்ரூவுக்கு, பிரதம மந்திரி "நான் ஒரு பொழுதும் நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டேன்; என் விருப்பம் நடைபெறாவிடில் ராஜீநாமா செய்து விடுகிறேன்" என்று எழுதியிருக்கிறார்.

ஜெனரல் ஸ்மட்ஸ் இவ்விஷயத்தில் சிரத்தை கொள்ளத் தொடங்கி யிருக்கிறார். அவருக்கும் காந்தியடிகளுக்கும் வெகுகாலப் பரிச்சயம். வெறும் பரிச்சயம் மட்டுமில்லை; தென் ஆப்பிரிக்காவில் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கிறது. ஸ்மட்ஸுக்கு சர்வ தேசீய விஷயங்களில் நல்ல பெயருண்டு. அயர்லாந்துடன் சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட விஷயத்தில் அவர் மிகுந்த உதவி புரிந்தவர். பேச்சுக்கிடையில் காந்தியடிகள் அவரிடம், "நான் வெறுங் கையுடன் திரும்பப் போகிறேன்" என்று கூறவும் அவர், "உங்களை இவர்கள் வெறுங் கையுடன் திரும்ப விடுவார்கள் என்றால் யார் நம்புவார்? நீங்கள் இந்திய மக்களின் ஹிருதய சக்கரவர்த்தியாயிற்றே? நீங்கள் வெறுங் கையுடன் திரும்புவதால் அங்கு என்ன நடைபெறுமென்று இவர்கள் அறிந்திருக்க வேண்டுமே" என்றார். பிறகு அவர்—ஹிந்து முஸ்லீம் பிரச்னையைப் பற்றிப் பேசினார். "தற்சமயம் வேறொன்றும் இல்லையென்றாலும், லக்னௌ ஒப்பந்தமாவது இருக்கிறது" என்று காந்தியடிகள் கூறி, இந்தச் சண்டையைத் தீர்க்கும் உபாயத்தையும் கூறினார். ஸ்மட்ஸ் காந்தியடிகளின் ஆலோசனையைக் கேட்டுக் கொண்டு, பிரதம மந்திரியிடம் சென்றார். பிறகு 'ரிஸ்' ஹோட்டலில் முஸ்லீம்களுடன் பேசுவதற்காகக் காந்தியடிகள் சென்றிருந்த

பொழுது ஸ்மட்ஸ் அவரை மீண்டும் பார்த்தார். "மாக்டோனுல்டின் மனதில் உங்களது வார்த்தைகள் நன்கு பதிந்தன. அவர், 'காந்தி ஓர் அற்புதமான மனிதர்; அவரது கருத்தை அறிவது மிகவும் கஷ்டம்' என்ருர். இவர்கள் உங்களை நன்ருய்த் தெரிந்து கொள்ளவில்லை. ஆகையால்தான் இவ்விதம் பேசுகிருர்கள்" என்ருர்.

ஆனுல் எனது அனுதாப மெல்லாம் பிரதம மந்திரியிடமே யுள்ளது. நான் காந்தியடிகளிடம், "உங்களுடைய பேச்சுக்கள், மிகத் தெளிவாக இருப்பதுடன், மிகவும் சூட்சமமாகவும் இருக்கின்றன. உங்களுடைய உண்மை அபிப்பிராயத்தை அறிந்து கொண்டதாக ஒருவரும் கூறமுடியாது" என்றேன்.

ஸ்மட்ஸ் உதவி செய்வதாக வாக்களித்திருந்தபடி, தன்னுலானதைச் செய்து கொண்டிருக்கிருர். சக்கரவர்த்தி இங்கிருந்து நூறு மைல் தூரத்திலுள்ள "ஸேண்ட்ரிங்ஹாம்" என்னும் இடத்தில் இருக்கிருர். ஸ்மட்ஸ் அங்கே சென்றிருக்கிருர். அங்கிருந்து தம்மை வந்து காணும்படி ஆண்ட்ரூஸுக்குச் செய்தி அனுப்பி யிருக்கிருர்.

[36]

பழைய போக்குத்தான்!

லண்டன்

17—11—31

நேற்றிரவு பெந்தல், கார் இருவரும் மீண்டும் காந்தியடிகளைப் பார்த்தனர். ஒரு மணி நேரம் காந்தியடிகள் அவர்களைக் கண்டித்துக் கொண்டிருந் தார். அவர்கள், "நாங்கள் முஸ்லீம்களுடன் ஒரு உடன்படிக்கையும் செய்து கொள்ளவில்லை. எங் களுக்குக் கிடைக்க வேண்டியது இவ்வளவு என்று ஒரு விண்ணப்பந்தான் செய்து கொண்டிருக்கிறோம்" என்று மீண்டும் மீண்டும் சமாதானம் சொன்னார்கள். காந்தியடிகளுக்கு இதனால் சிறிதும் சமாதான முண் டாகவில்லை. அவர் கூறியதின் சாராம்சம் வருமாறு:—

"எனக்கு உங்களிடமிருந்த நம்பிக்கை போய் விட்டது. முஸ்லீம்கள், தீண்டாதார் ஆகியவர்களு டன் நீங்கள் செய்து கொண்டிருக்கும் உடன்படிக்

கையினால் என் மனதில் உண்டாகியிருக்கும் புண் சீக்கிரத்தில் ஆருது. நான் ஏதோ மனத் தாங்கல் கொண்டிருப்பதாக நீங்கள் சொல்வது என் மனோ நிலையைச் சரியாக வெளியிடவில்லை. 'மனத் தாங்கல்' என்பது சாதாரண விஷயம். உங்களுடைய காரியம், என்னைக் கொல்ல எண்ணிக் கைவாளை உபயோகிக்க விரும்பியது போலாகும். உங்களிடம் எல்லா சாதனங்களும் இருக்கின்றன; உங்களுடைய உரிமைகள் கிடைக்காவிடில் நீங்கள் பகிரங்கமாகச் சண்டை யிட்டிருக்கலாம். நான் எப்பொழுதும், 'ஆங்கிலேயர்களை நம்புங்கள்' என்று சொல்லி வந்திருக்கிறேன். இனி நான் எப்படி உங்களது நேர்மையை நம்பும்படி செய்வது? 'எங்களுடைய லக்ஷியம் இன்னும் மாறவில்லை; நாங்கள் கிழக்கு இந்தியாக் கம்பெனியின் வழியிலேயே இன்றைக்கும் செல்லுகிருேம்' என்று நீங்கள் ருசுப்படுத்தி விட்டீர்கள். கம்பெனி, தன் ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்காக, இவனையும் அவனையும், அவனையும் இவனையும், சமயத்திற்கேற்றவாறு சண்டையிடச் செய்து, கடைசியில் எல்லோரையும் நாசம் செய்து தனது சாம்ராஜ்யத்தை அமைத்தது. நீங்களும் அதே மித்ர பேத முறையைத்தான் கையாள விரும்புகிறீர்கள். இன்று, இந்திய நாட்டில் வாழ்க்கைப் போரில் பின்னடைந்திருப்பவர்களை—அறிவும், பொருளும் இல்லாத ஜாதிகளை—உங்கள் வசப்படுத்திக் கொண்டு நாடுமுழுமையும் அதிகாரம் செலுத்தப் பார்க்கிறீர்கள். நீங்கள் ஆங்கிலேய சமூகத்திற்கும் பிரதிநிதிகளாய் இல்லாதிருப்பது நலம். இந்தியாவில் வசிக்கும் ஆங்கிலேயருக்கு உண்மையான பிரதிநிதி நான்தான் என்று உரிமை கொண்டாடப் போகிறேன். பம்பாயிலுள்ள இளம் ஆங்கிலேயர் உங்களைப் போலில்லை. இங்கேயும் உங்களைப் பாராட்டிப் பேசும் ஒரு ஆங்கிலேயரைக் கூட நான் காணவில்லை. நீங்களே இந்த உடன் படிக்

கையினின்றும் விலகாவிடில், நான் அதைச் சின்னு பின்னம் செய்து விடுவேன் : அல்லது அதை ஒழிக்கும் போரில் உயிரையே விட்டு விடுவேன்."

இப்படி காந்திஜி சொன்னதற்கு அவர்கள் "நாங்கள் உடன்படிக்கையிலிருந்து விலகி விட்டோம் ; இனி எங்களுக்கும் அதற்கும் ஒரு சம்பந்தமுமில்லை. ஏனெனில், நாங்கள் எல்லாவற்றையும் பிரதம மந்திரியிடம் ஒப்பு வித்து விட்டோம்" என்றனர். இவ்வார்த்தைகளால் காந்தியடிகளுக்கு சமாதானமுண்டாகவில்லை.

அரசியல் திட்டக் கமிட்டியில் தாங்கள் கலந்து கொள்ளப் போவதில்லை என்று முஸ்லீம்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள் ; ஆனால் ஹோர் சமாதானம் செய்ததால் வருவதற்குச் சம்மதித்தார்கள். கமிட்டியின் நடவடிக்கைகள் தொடங்கி விட்டன. பண்டித்ஜி சேனையைப் பற்றி ஒரு மணி நேரம் பேசினுர்; ஆயினும் திருப்தியில்லை. "இன்னும் இரண்டு, மூன்று மணி நேரம் பேசப் போகிறேன்" என்றார். முஸ்லீம்கள் ஜமால் முகம்மதை மிகவும் தொந்தரவு செய்து விட்டார்கள்: பாவம், அவர் பயந்து விட்டார். அன்று காந்தியடிகளின் முன்னிலையில் முஸ்லீம்கள் அவரை அவமானத்திற் குள்ளாக்கினார்கள். "நீர் ஒற்றர் ; இங்கு நடக்கும் விஷயங்களை அங்கு போய்ச் சொல்லுகிறீர்" என்றார்கள். இக்பால் "உம்மிடம் பணம் இருப்பதால் நீர் ரொம்பப் பெரிய மனிதனென்று எண்ணிக் கொண்டு விட்டீர்" என்றார். ஜமால் ஸாகேப் வாயை மூடிக்கொண்டிருப்பாரா? "உமக்கு எதுகையும் மோனையும் தெரிந்து விட்டதால், நீரே ராஜா என்று நினைத்துக்கொண்டு விட்டீர் !" என்று பதில் கூறினார். ஜமால் ஸாகேப் யாருக்கும் பயப்படுவதில்லை. யாரா யிருந்தாலும் சுடச் சுடப் பதில் சொல்லி விடுகிறார். அவரிடமுள்ள குறை என்ன

வெனில், சில சமயங்களில் வரம்பு மீறி விடுகிறார். வாக்கு சாதுர்யம் போதாமையால் அனாவசியமாகச் சிலரைக் கோப மூட்டுகிறார். அவருடைய நண்பர்களிலேயே சிலர் அவரை "நச்சுவாய்" என்று சொல்லத் தொடங்கி விட்டனர். முஸ்லீம்களுக்கு அவரைப் பார்ப்பதற்கே கண்ணை உறுத்துகிறது!

[37]

அக்கரை பச்சை

லண்டன்

20—11—31

இந்த வாரத்தில் காந்தியடிகள் லாயிட் ஜார்ஜை அவருடைய வீட்டில் சந்தித்தார். லாயிட் ஜார்ஜ், "நீங்கள் சத்தியாக்கிரகம் செய்துதானாக வேண்டும். யுத்தமில்லாமல் உங்களுக்கு சுயராஜ்யம் கிடைக்காது" என்றார். அவர் மாக்டோனல்டை பலஹீனர் என்றும், டோரி கட்சியில் 150 அங்கத்தினர் அவருக்குச் சாதகமா யிருந்தால் தமது திட்டத்தை நிறைவேற்றக் கூடும் என்றும் கூறினார்.

மாக்டோனல்டின் பலஹீனத்தைப் பற்றி வேறு பலரும் குறை கூறக் கேட்டேன். இந்த வாரத்தில் தொழிற் கட்சியில் பிரதான அங்கத்தினரான ஸ்மித்தும், லாரென்ஸூம் என்னோடு போஜனம் செய்ய வந்திருந்தனர். (அடுத்த வாரத்தில் வெட்ஜ்வுட்

பென்னும், இன்னும் சிலரும் வருவார்கள்.) ஸ்மித், முந்தைய தொழில் மந்திரி சபையில் பதவி வகித்தவர். லாரென்ஸ், பொருள் இலாகாவின் பார்லிமெண்டு காரியதரிசி.

ஸ்மித்துடன் வெகு நேரம் வரையில் பேசிக் கொண்டிருந்தேன்; அவர் முக்கியமான விஷயங்களைக் குறித்துக் கொண்டார். நான் அவரிடம் நிலைமை முழுமையும் விளக்கி, மறுபடியும் சுயராஜ்யப் போர் நடந்தால் இந்தியாவின் பொக்கிஷம் காலியாகிவிடும் என்றும், இந்திய சர்க்காரை நடத்த இங்கிருந்து பணம் அனுப்பவேண்டி யிருக்கும் என்றும் கூறினேன். அவருக்கு இவ்விஷயம் மிகவும் முக்கியமாய்ப் பட்டது; இதைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டார். கடைசியில், அவர் சென்ற வருஷம் காந்தி இங்கே வராமல் தவறு செய்தார்; இந்தத் தடவை டோரி கட்சியார் தவறு செய்கிறார்கள். மாக்டோனல் உறுதி இல்லாதவர். அவர் இந்த விஷயத்திற்காகத் தலையைக் கொடுக்கச் சித்தமாயில்லை" என்றார். பிறகு, "அவர் ஒருகால் தைரியத்துடன் நின்றால், காந்தி தலை கொடுப்பாரா?" என்று கேட்டார்.

"எங்களுக்கு என்ன கிடைக்கப் போகிறதென்பது தெரிந்த பிறகே, இந்தக் கேள்விக்கு பதில் கூற முடியும். காந்தியடிகள்' எதிர்க்கா திருந்தாலே அதிகம்; அவர் முழு சுயராஜ்யத்துக்குப் பதிலாக முக்கால் வாசி கிடைத்தாலும் எதிர்ப்பை நிறுத்தி விடுவார்" என்றேன். ஸ்மித், "இந்த மந்திரி சபையிடமிருந்து கிடைத்ததைப் பெற்றுக் கொள்ளுங்கள். இது சீக்கிரத்தில் வீழ்ந்து, எங்கள் கையில் மீண்டும் அதிகாரம் வரும். அப்பொழுது உங்கள் கோரிக்கை வெகுவாக நிறைவேறும் என்று நம்பி யிருக்கலாம்" என்றார்.

[38]

நயத்திலும் பயத்திலும்

லண்டன்

27—10—31

இன்று அரசியல் திட்டக் கமிட்டியின் கடைசிக் கூட்டம். அரசியல் திட்டம் எப்பொழுது அமைக்கப் படுமோ தெரியாது : அதன் பெயரால் நடிக்கப் பட்டு வந்த நாடகம் இப்பொழுது முற்றுப் பெற்றது. இத்துடன் பர்மா வட்டமேஜை மகா நாடென்ற பெயருடன் வேறொரு நாடகம் ஆரம்பித்திருக்கிறது.

இந்த வாரத்தில் காந்தியடிகள் பிரதம மந்திரியை மீண்டும் சந்தித்தார். அவரிடம், "என் மனதிற்குப் பிடித்ததா யிருந்தால், மாகாண சுய ஆட்சியை ஏற்க நான் சம்மதிப்பேன். நான் ஒப்புக் கொள்ளக் கூடிய மாகாண சுய ஆட்சியில், வங்காளத்தில் ராஜீயக் கைதிகள் சிறையில் கிடந்து வாடமாட்டார்கள்; அங்கே சேனையின் உதவிக்கும் தேவையிராது"

என்ருர். காந்தியடிகள் பாக்டோனல்டை அசடு என்றும், ஹோரை புத்திசாலி என்றும் கூறுகிருர். அரசியல் திட்டக் கமிட்டியின் தலைவர் ஸாங்கியைப் பற்றியும் அவருக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை.

ஸ்மித், லாரென்ஸ் ஆகியவர்களுடன் பேச்சு நடந்தது. "விஷயம் கெட்டுப் போய் விட்டது; ஹிந்து-முஸ்லீம் ஒப்பந்தம் ஏற்படாததை வைத்துக் கொண்டு தட்டிக் கழிக்கப் பார்க்கிருர்கள். இது சகஜந்தா னல்லவா ?" என்று சொன்னுர்கள். நான் பென்னிடம், "சர்க்கார் கொடுக்கப் போவது என்ன வென்று எங்களிடம் தெளிவாகக் கூறிவிட்டால், ஒப் பந்தம் சுலபமாகச் செய்து விடலாம்" என்றேன். பென், "இந்த மகாநாட்டை எப்படியாவது உயிரோடு வைத்துக் கொண்டிருக்க வேண்டும். மகாநாடு இவ்விடம் வேலை செய்தாலும், அங்கே வேலை செய்தா லும் சரிதான்; வேலை மட்டும் நடந்து கொண்டிருப் பது அவசியம்" என்ருர்.

இரவில், லாரென்ஸும், பென்னும் என்னேடு போஜனம் செய்ய வந்திருந்தார்கள். வெகுநேரம் வரையில் பேசிக்கொண்டிருந்தோம். பென் தூய மனமுள்ளவர். அவர், "சாம்ராஜ்யச் சலுகைக்கு நான் பொறுப்பாளியல்ல; நான் ஒன்றுமே செய்ய வில்லை" என்ருர். நாணயமாற்று விகிதத்தைப் பற்றிப் பேசியபோது ஷுஸ்டர் இங்கு வந்ததும் 1 ஷில்லிங் 6 பென்ஸ் விகிதத்தை விட்டு விடலா மென்று சொன்னதாகத் தெரியவந்தது. ஆனல் பொருளாதார விஷயங்களைப் பற்றி பென்னுக்கு அதிகம் தெரியாதாகையால், ஷுஸ்டருடன் தாம் பேசாமல், விஷயத்தை ஸ்ட்ராகோஷ், கிஷ் ஆகியவர் களிடம் விட்டு விட்டாராம். நான் அவருக்குப் பொருளாதார நிலைமையை விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

அரசியல் விஷயமாக, "ஒன்றும் நடைபெறுவ தாய்த் தெரியவில்லை" என்ருர் பென். நான், மாக் டோனல்டு காந்தியடிகளைச் சந்தித்து மனதிலுள்ளதை விட்டுப் பேசினல் ஏதாவது வழி பிறக்கலாம்" என் றேன். பென், "மாக்டோனல்டு 4–5 மாதங்களுக் கதிகம் இருக்க முடியாது. டோரி கக்ஷியார் அவரை யும், பால்டுவினையும் வெளியேற்றி விடுவார்கள்" என்ருர். மேலும், "இந்தியாவில் தங்கள் பணத்தைப் போட்டிருப்பவர்களை எவ்வாறு திருப்தி செய்வது?" என்று கேட்டார். நான், "நாங்கள் நியாயத்தை விட்டு வழுவ விரும்பவில்லை. ஆனல் எங்களுக்குத் திருப்தி ஏற்படாவிட்டால், யார் தடுத்தும் புரட்சி நிற்கப் போவதில்லை. அப்பொழுது பணம் போட் டிருப்போருக்கு அதிக ஆபத்துத்தான் ஏற்படும். நாங் கள் உங்களிடம் கடன் பட்டிருப்பது உண்மையே; ஆனல் அதைத் தீர்ப்பதற்கு என்ன வழி? நாங்கள் நாணயமாற்று விகிதத்தைக் குறைத்து ஏற்று மதியை அதிகப்படுத்துகிருேம் என்று வைத்துக் கொள்வோம்; அப்பொழுதும் உங்கள் வியாபாரத் திற்குத் தீங்குதான். உண்மையில் இத்தகையக் கடன் எந்த தேசமும் செலுத்தியதில்லை; செலுத்தவும் முடியாது. எங்களிடமிருந்து, முதலை எதிர்பாராமல் வட்டி மட்டும் நிற்காமல் வந்து கொண்டிருக்கும்படி யான ஏற்பாட்டை நீங்கள் செய்ய வேண்டும்" என்றேன்.

"விஷயம் இப்படி யென்று இங்குள்ளோருக்குத் தெரிந்தால் இன்னும் அதிக கெடுபிடி செய்வார்கள்" என்ருர் பென். "ஆனல், நாங்கள் சுதந்திரம் பெறு வது என்று உறுதி செய்து விட்டோம்; சும்மா உட் கார்ந்திருக்கமாட்டோம்" என்றேன் நான். "நீங்கள் சொல்வது சரிதான்; ஆயினும் வியாபாரிகள் மந்த புத்தியுள்ளவர்களாயிற்றே?" என்று அவர் சொன்

ஞர். நான் "சத்தியாக்கிரகம் மீண்டும் தொடங்கப் பட்டால் இந்தியாவின் நிர்வாகச் செலவிற்கு இங்கிருந்து பணம் அனுப்ப நேரும்" என்றேன். இதற்குப் பென் "வாஸ்தவம்; ஆனால் ஒரு ஜில்லா அதிகாரி இந்த வாதத்தைப் புரிந்து கொள்ளமாட்டான். அவ்வளவு தீர்க்க திருஷ்டி அவனுக்குக் கிடையாது. 'எனது செயல்களின் பயனாக சர்க்கார் பொக்கிஷம் காலியாகிவிடும். அது கடைசியில் எனக்கே தீங்காக முடியும்' என்று அவ்வளவு தூரம் அவன் சிந்தனை செய்யமாட்டான். உலகம் குருட்டு உலகம்; ஜனங்கள் விஷயங்களை முழுதும் யோசித்துப் பார்ப்பதில்லை; அதனால் தான் இவ்வளவு சங்கடம்" என்றார்.

ஆகவே, நிலைமை இதுதான்; மகா நாட்டினால் ஒரு பயனும் விளையவில்லை; ஆனால் மகாநாடு அடியோடு முறிந்து போனதாகவும் சொல்வதற்கில்லை. வங்காளத்திலும், மற்ற இடங்களிலும், அடக்குமுறை தாண்டவமாடப் போகிறது; அத்துடன் சமாதானப் பேச்சும் நடந்து கொண்டிருக்கும். ஆங்கிலேயர் காலிலே ஒரு கையும், கழுத்திலே ஒரு கையும் வைத்திருப்பார்களென்று கைலாஸ் பாபு சொல்வது வழக்கம். உங்களுக்குச் சக்தியில்லை யென்று தெரிந்ததோ, கழுத்தை நெரித்து விடுவான்; சண்டையில் நீங்கள் ஜெயித்து விடுவீர்களென்று தெரிந்தால், காலைப் பிடித்துக்கொண்டு வேண்டவும் தயங்கமாட்டான். எப்பொழுதுமே தான் வணங்கிப் போவதற்குச் சித்தமாயிருந்ததாகச் சொல்லுவான். இதே நிலைமை சிறிது காலம் வரையில் நீடித்திருக்கும். உபத்திரவம் மிகுதியாகிவிட்டால் சீக்கிரத்தில் சமரசம் ஆகிவிடும்; இல்லையேல், கொடுக்கிற பேச்சு குப்பைத் தொட்டிக்குப் போய்விடும்.

இந்த வாரத்தில் சில முக்கியமான பிரசங்கங்கள் நடைபெற்றன. மித வாதிகளும், காரசாரமாகப்

பேசினுர்கள். காந்தியடிகள், "நாங்கள் குண்டுகளைக் கண்டு பயப்படப் போவதில்லை. எங்கள் குழந்தைகளும் அவைகளைப் 'பட்டாசு' என்று நினைக்க ஆரம்பித்து விட்டனர்" என்ருர். ஸப்ரூ, ஜயகர், சாஸ்திரி, முதலியார்—எல்லோரும் ஒரு முகமாக மாகாண சுய ஆட்சியோடு நிறுத்துவதைக் கண்டித்தனர். முஸ்லீம்களின் சார்பிலும், "இது போதாது" என்று கூறப்பட்டது. இராமசாமி முதலியார் சென்னை மாகாணத்தின் பிராம்மணரல்லாதாரின் பிரதிநிதி. அறிவாளியென்று தெரிகிறது. ஸாங்கி பிரபுவுக்கு நேற்றுக் கோபத்தில் தலைகால் தெரியவில்லை. பென்னைக் குழந்தையைப்போல் அதட்டி "வாயை மூடும்" என்ருர். பென், மீண்டும் பேசத்தொடங்கவும், அவர், "அப்படியானுல், நான் தலைமைப் பதவியை விட்டுப்போகிறேன்" என்ருர். உண்மை என்னவெனில், இங்குள்ள நிலைமையில் இப்பொழுது காணப்படும் மாறுதலுக்குக் காரண புருஷர்கள் பென்னும், லீ ஸ்மித்துமே யாகும். சர்க்காரின் தந்திரங்கள் இவர்களுக்கு நன்ருய்த் தெரியும். இவர்களில்லையேல், ஸாங்கியும், ஹோரும், மகா நாட்டைக் குழி வெட்டிப் புதைத்திருப்பார்கள். ஆகையால் ஸாங்கிக்கு பென்னிடம் ஆத்திரமுண்டாவது இயற்கையே.

பாயிஜியிடமிருந்து, "தாங்கள் உசிதப்படி முஸ்லீம்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுங்கள்" என்று ஒரு தந்தி காந்தியடிகளுக்கு வந்திருக்கிறது. "அந்த சந்தர்ப்பம் மலையேறிப் போய் விட்டது" என்று காந்தியடிகள் சொன்ஞர். நான், "இப்பொழுதும் நாங்கள் 15 ஹிந்துக்கள் எழுதிக்கொடுத்தால், தாங்கள் ஏன் ஒப்பந்தம் செய்யக்கூடாது?" என்று கேட்டேன். காந்தியடிகள். "மாளவியாஜியும், டாக்டர் மூஞ்சேயும் எழுதிக் கொடுக்காத வரையில் நான் ஒன்றும் செய்யமுடியாது" என்ருர்.

---

[39]

நாடகம் முடிந்தது

லண்டன்

4—12—31

மகாநாட்டு நாடகத்தின் கடைசிக் காட்சி முடிந்தது. ஒவ்வொருவராக லண்டனிலிருந்து கிளம்பிக் கொண்டிருக்கிறார்கள். காந்தியடிகள் நாளைக்குப் புறப்படுகிறார். பண்டித்ஜியின் விஷயம் நிச்சயமாகவில்லை. அமெரிக்கா போவதாக முதலில் எண்ணமிருந்தது. இப்பொழுதோ, ஒரு வாரம் இங்கே தங்கிவிட்டு, இத்தாலி வழியாக இந்தியாவுக்குத் திரும்பலாமென்று யோசித்துக் கொண்டிருக்கிறார்.

சனி, திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் சம்பூர்ண மகாநாடு நடந்தது. முதல் நாள் கூட்டத்தில் குறிப்பிடத்தக்கதாக ஒன்றும் நடைபெறவில்லை. நண்பர்கள், எதிரிகள், எல்லோரும் ஒரே ஒரு பிரசங்கத்தைக் கேட்பதற்குக் காத்திருந்தனர். அது திங்

களன்று—மௌனம் முடிந்த பின்—நடைபெறுவதற்கு இருந்தது. இரண்டு நாளும் கூட்டம் 10½-மணிக்குத் தொடங்கிற்று. திங்கட்கிழமை நடிவடிக்கைகள் இரவு 2½-மணிக்கு முடிந்தன. வாக்கு வன்மைக்குப் பெயர் போன சாஸ்திரியார் கூட, அடுத்த நாள் ஆரம்பித்து விட்டதென்ற விஷயத்தை மறந்து பேசினுர். அவருடைய வாயிலிருந்து 'இன்று' என்பதற்குப் பதிலாக 'நாளை' என்ற வார்த்தை வந்து விட்டது. திங்கட்கிழமை யன்று, முதலில் 10½ முதல் 7½ மணி வரையிலும், பிறகு 9½ முதல் 2¼ மணி வரையிலும் கூட்டம் நடைபெற்றது. பிரதம மந்திரியின் பிரசங்கத்தைப் பற்றி மந்திரி சபை ஆலோசனை செய்ய வேண்டியிருந்தது. ஆகையால் மாக்டோனல்டும், ஹோரும் 5 மணிக்கே எழுந்து போக நேர்ந்தது. பிறகு அவர்கள் இரவுக் கூட்டத்திற்கு வந்தார்கள். பிரதம மந்திரியின் வேண்டுகோளின்படி கூட்டம் சிறிது நேரம் தள்ளி வைக்கப்பட்டது. இதற்குக் காரணம் காந்தியடிகளின் பிரசங்கம் நடைபெற விருந்ததுதான். பிரதம மந்திரி காந்திஜியின் பிரசங்கம் முழுமையும் கேட்க விரும்பியபடியால் அவர் வருகிற வரையில் ஒத்தி வைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

காந்தியடிகளின் சொற்பொழிவு ஒப்பற்றதாயிருந்தது. இத்தகைய சந்தர்ப்பங்களில் அவருடைய சொல் ஒவ்வொன்றும் நெஞ்சை ஊடுருவும் சக்தி வாய்ந்திருக்கின்றது. எங்கும் நிச்சப்தம் குடி கொண்டிருக்க, சபையோர் அனைவரும் பிரதிமைகளைப்போல் அசையாதிருந்தனர். ஏறக்குறைய 70 நிமிஷம் காந்தியடிகள் பேசினுர். அவருக்குப் பிறகு பண்டித்ஜி எழுந்தார். எனக்குத் தூக்கத்தில் தலை சுற்றத் தொடங்கிவிட்டது. ஆகையால் நடுவிலேயே எழுந்து வந்து விட்டேன். மறுநாள் பண்டித்ஜி, "காந்தியடிகளின் அப்பேர்ப்பட்ட பிரசங்கத்திற்குப் பிறகு

சொல்ல வேண்டியது ஒன்றும் பாக்கியில்லை; சொல்ல விருப்பமுமில்லை; ஆயினும் பெயர் கொடுத்திருந்த படியால் கொஞ்சமாவது பேசவேண்டியிருந்தது" என்றார். கடைசிப் பேச்சு சாஸ்திரியினுடையது என்றும், அது மிகவும் மோசமா யிருந்ததென்றும் கேள்விப் பட்டேன். கேட்போருக்கு ரொம்பவும் வருத்தம் தந்ததாம்.

நான் சொல்ல வேண்டியதை இன்றிரவு கூட்டம் தொடங்கிய சிறிது நேரத்துக்குள் சொல்லிவிட்டேன். "மகாநாட்டினால் எத்தகைய பயனும் கிட்டவில்லை. இதில் நாம் முன்னேறாதது மட்டுமல்ல; பின்னாலும் சென்றுவிட்டோம்" என்று தைரியத்தினாலோ, அசட்டுத்தனத்தினால்தானோ, பட்டவர்த்தனமாய்ச் சொன்னேன். மகாநாட்டின் பக்தர்களுக்கு இது அபஸ்வரமாகப் பட்டது. அவர்கள் மிகவும் ஆத்திரமடைந்தார்கள். மற்றவர்களிடமிருந்து—முக்கியமாக காந்திஜியிடமிருந்து — எனக்கு வாழ்த்துக்களும் கிடைத்தன. எதிரி தரப்பிலிருந்து ஆங்கிலேயர் இரண்டொருவர் கூட என்னைப் பாராட்டினார்கள். ஆனால் தொழிற் கக்ஷியிலுள்ளவர்கள், பழகியவர்களா யிருந்தும், மௌனம் சாதித்தனர். நான் சொன்னதில் முக்கிய விஷயமாவது :—"எங்களுடைய சுமையைக் குறைக்காத வரையில் உங்களால் பாதுகாப்பு நிபந்தனைகளைத் தளர்த்திவிட முடியாது. சுமையைக் குறைப்பதற்கோ வேண்டிய இட மிருக்கிறது. இங்கிலாந்து எங்கள் மேல் எவ்வளவோ அநியாயச் சுமைகளைச் சுமத்தி யிருக்கிறது" என்பதுதான்.

மறுநாள் கூட்டம் 11½ மணிக்கு ஆரம்பித்தது. நல்ல கூட்டம். பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கும் உட்கார அனுமதி யளிக்கப்பட்டிருந்தது. பிரதம மந்திரிக்கு வந்தனம் செலுத்தும் வேலை காந்தியடிகளிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. இதனால், அவருக்கு மிக

வும் நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. பிரதம மந்திரியின் அறிக்கையைப் பற்றித் தம் கருத்தை மிகவும் அழகாக வெளியிட்டார். காந்தியடிகள் தமது நிலைமையை விளக்கிப் பேசிக் கொண்டிருந்தபொழுது, சில அங்கத்தினர்களின் முகங்கள் போன போக்கைப் பார்க்க வேண்டுமே!

கூட்டம் கலைந்ததும் பண்டித்ஜியின் காரியாலயத்தில் (கிங்ஸ் வீதி) பலர் கூடினர். காந்தியடிகளும் இருந்தார். பிரதம மந்திரியின் பேச்சை ஆராய்ச்சி செய்தனர். ஏதோ வெகுவாகக் கிடைத்து விட்டதாகச் சிலர் எண்ணினார்கள். இவர்கள் எப்பொழுதும் இப்படியே எண்ணுவதுதான் வழக்கம். அன்று இரவு சாஸ்திரியார் மோசமாய்ப் பேசியிருந்த போதிலும், உண்மை யுள்ளவராகையால், இன்று அதிருப்தியுடன் காணப்பட்டார். காந்தியடிகளின் கருத்தில் சிறிதும் மாறுதலில்லை. பண்டித்ஜி கலங்கிக் கொண்டிருந்தார். பிரதம மந்திரியின் பேச்சினால் லாபமும் இல்லை, நஷ்டமும் இல்லை என்று எனக்கு நிச்சயமாய்த் தோன்றுகிறது. காங்கிரஸினிடம் போரிடும் சக்தி எவ்வள விருக்கிற தென்பதையே எல்லாம் பொறுத்திருக்கிறது.

காந்தியடிகள் பின்னர் ஹோரைச் சந்தித்தபொழுது, ஹோர், "நான் உங்களுடைய நட்பை விரும்புகிறேன். வங்காள அவசரச் சட்டத்திற்கு நான் பொறுப்பாளியல்ல; அதை நான் விரும்பவுமில்லை; வேறு வழி யில்லாமல் நான் அதற்கு சம்மதமளிக்க நேர்ந்தது. நீங்கள் அங்கு சென்று நிலைமையைச் சீர்திருத்த முயற்சி செய்யுங்கள். புதிய கவர்னரைப் பற்றிச் சொல்லப்படும் விஷயங்கள் ஆதாரமற்றவை. அவர் மிகவும் நல்லவர்" என்றார். ஹோர் சொன்னவைகளில் மிகவும் முக்கியமானது, "பாதுகாப்புக்களின் விஷயமாய் இங்கு நிறைவேறிய

3G
IN492

தீர்மானங்கள் முடிவானவையல்ல; அவைகளைப் பற்றி மீண்டும் ஆலோசிக்க இடமுண்டு" என்பது தான். இது திருப்திகரமானதே. மேலும் அவர் "ஹிந்து-முஸ்லீம் பிரச்னையை எப்படியாவது உங்களுக்குள் தீர்த்துக் கொள்ளுங்கள். மற்றவையெல்லாம் பெரும்பாலும் அதைப் பொறுத்தே இருக்கின்றன" என்றும் கூறினார்.

லோதியன் பிரபு காந்தியடிகளிடம், "போராட்டம் நடத்தினால் உங்களுக்கு நிச்சயமாய் நன்மையே. ஆயினும் நாங்கள் அழிந்து போகும்படி சண்டையிடாதீர்கள்" என்றார். "நான் அதைக் கவனித்துக் கொள்ளுகிறேன்" என்றார் காந்தியடிகள். இன்னும் லோதியன் "மிதவாதிகளிடம் எங்களுக்கு மரியாதை கிடையாது." நாங்கள் மூன்று பேர்களிடம் சமாதானம் செய்து கொள்ளவேண்டும். நீங்கள் ஒன்று, முஸ்லீம்கள் இரண்டு, மூன்றாவது, பிராம்மணரல்லாதாரின் தலைவர் பாத்ரோ" என்றார். காந்தியடிகள், "முதலிரண்டும் சரி, ஆனால் பாத்ரோவுடன் சமாதானம் என்பதற்கு அர்த்தமில்லை" என்றார்.

ரோட்ஸு, "பிர்லா! நீங்கள் எப்பொழுதாவது உத்தியோகம் செய்ய விரும்பினால் ஸ்ட்ராகோஷிடம் போங்கள். அவர் மிகவும் நல்ல நற்சாக்ஷிப் பத்திரம் உங்களுக்குத் தருவார்" என்றார். நான், "அவர் என்னைப்பற்றி என்ன சொன்னார்?" என்று கேட்டேன். "என்னைக் கேட்கவேண்டாம். அவர் சொன்னதைக் கேட்டால் உமக்கே அசடு தட்டிவிடும்; அவ்வளவு புகழ்ச்சி!" என்றார்.

சுபம்

TAMIL NADU ARCHIVES EGMORE MADRAS
No. 765